கல்கி

KALKI 24-6-79
75 காசு



தாத்தா நடித்தால் புகழாரம்; விஜயா நடித்தால் வீண்வாதம்!



● இந்த இதழ் 'கல்கி'யின் 'நாடகமே உலகம்' பட விமரிசனம் படித்தேன். சே... இந்த ஆண்வர்க்கமே சுத்த மோசம்! ஜெமினி, எம்.ஜி.ஆர்., சிவாஜி, போன்ற தாத்தா வயதுடையவர்கள் கதாநாயகனாக ஓடியாடி நடித்தால், "ஆஹா? எப்பேர்ப்பட்ட நடிப்பு" என்று புகழ்வார்கள். ஓரளவுக்கு வயதான பெண், கதாநாயகியாக ஆடிப்பாடி நடித்து விட்டால், "ஐயோ இவர் எப்படி இப்படி நடிக்கப்போயிற்று?" என்ற பிலாக்கணம். ஏனிந்த ஓர வஞ்சனை? நாடகமே உலகத்தில் கே. ஆர். விஜயாவின் கதாநாயகி நடிப்பில் என்ன குறை கண்டார் உமது விமரிசகர்?

விருத்தாசலம் குமாரி. ஏ. நூர்ஜஹான்.

● நடிகை கே. ஆர். விஜயாவுக்குக் கூறியுள்ள அறிவுரை மிகமிக நன்று. எங்களைப் போன்ற ஆயிரக் கணக்கான ரசிகர்களின் எண்ணங்களை, நன்கு தெள்ளத் தெளிவாகக் கூறியுள்ளீர்கள்.

மேட்டூர் அணை–2. கா. சி. சுப்பிரமணியம்

● 10.6.79 இதழில் வட்டமேஜைப் பகுதியில் திரு. நவநீதகிருஷ்ணன் தவறான தகவல் அளித்துள்ளார். தமிழ்நாடு நில அளவை கணிக வரைவாளர் ஒன்றியத்தின் மாநில நிர்வாகிகளில் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய நான் அதிலிருந்து விலகியதை, குறிப்பிடத் தவறியது ஏனோ?

கடலூர்

ந. வேலு

பொதுச் செயலாளர்

தமிழ்நாடு நில அளவை வரைவாளர் கழகம்

● கலைஞர் என்ற கதிரவனின் வெப்பத்தைத் தணிக்க 'மாநகராட்சித் தேர்தலைத் தள்ளிப் போடுதல்' என்ற இளநீரை எம். ஜி. ஆர். அருந்துவதாக நீங்கள் வெளியிட்டுள்ள கார்ட்டூன் தி.மு.க. தொண்டர்களை இளநீர் போல் மகிழ்விக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

திருச்சி–8 எஸ். பி. முருகப்பன்

● "கோபப் படாதவர்" துணுக்கில் ஏகநாதர் பற்றி நண்பர் தேனி முருகேசன் அவர்கள் எழுதி யிருந்தார்கள். இதற்கும் மேல் ஒருபடியாகக் கொங்கு நாட்டில் பழைய கோட்டையில் முன்னாள் அமைச்சர் நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் (பட்டக்காரர்) குடும்பத்தில் மூன்று தலைமுறைக்கு முன் ஒரு சம்பவம் நடந்துள்ளது. ஏகநாதர் கோபப்படாது மட்டுமே இருந்தார். நல்ல தம்பி சர்க்கரை மன்றாடியாரோ கோபப்படாதது மட்டுமல்லாது புலவர்களை உபசரித்தல் எனும் கொள்கையையும் விட்டுக் கொடுக்காது நடந்து கொண்டார்.

தொண்டை நாட்டைச் சேர்ந்த எல்லப்பன் பிரபு அனுப்பி வைத்த புலவர்கள் கொங்குநாடு வந்து மன்றாடியாருக்குக் கோபத்தை உண்டாக்கக் கருதி அவரது அழகிய பூந்தோட்டத்தில் புகுந்து உயர்ந்த செடி கொடிகளையெல்லாம் தாறுமாறாக வெட்டி நாசம் செய்தனர். மன்றாடியார் "பூஞ்செடிகள் ஒவ்வாதனவாயின் ஏவலாளரை விட்டு வெட்டுவிக்கலாமே? கற்கள் இணைத்த கழையாழிகளையும், கனக தோடாக்களையும் பூண்டு புராண இதிகாசங்களைத் தொடும் தொழிலையுடைய திருக்கரங்கள் கடின கோடாரி, அரிவாள் முதலிய ஆயுதங்களைத் தொட்டு வருந்தலாமோ? கைகள் வலிக்குமே?" எனக்கூறி உயர்ந்த தைலங்களைக் கைகளுக்குத் தடவி வெந்நீராட்டுவித்தனர்.

கோவை வி. கே. ராமசாமி

● தில்லிவாசிகளான எங்களுக்கு ரேடியோவில் டில்லி நிலையத்தார் அவ்வப்போது அரைமணி நேரக் கச்சேரிகளை நிகழ்த்திய போதும் அவை சரியான நேரங்களில் அமையாமல் கேட்க வாய்ப்பில்லை. பாடகர் தம் வித்வத்தை வெளிப்படுத்த, ராக ஆலாபனத்துக்குக் கால் மணி நேரம் போக மிகுந்த கால் மணி நேரத்தில் கச்சேரியை முடிக்க இயலாமல் திணறுகிறார். உரிந்தி அறிவிப்பாளரோ சரியாக அரைமணி முடிந்தவுடன் பாடலைத் திடீரென நிறுத்தி விட்டுச்செல்கிறார்.

ரேடியோ நிலையத்தார் சமீப காலத்தில் பல ரிலேயிங் ஸ்டேஷன்களை (Relaying Stations) ஏற்படுத்தி, ஏற்கெனவே ஓரளவு கேட்டு வந்த தென்னிந்திய நிலையங்களைத் தடை செய்து விட்டார்கள். மத்திய அலை வரிசையில் திருச்சி நிலையத்தின் ஒலிபரப்பு கடப்பா நிலையத்தால் பாதிக்கப்படுகிறது. சென்னை நிலையம் சிம்லா, முஜபர்பூர், நிலையங்களால் பாதிக்கப்பட்டுள்ளது. சிற்றலை 60 மீட்டரில் ஒலிபரப்பாகும் சென்னை ஹைதராபாத் நிலையங்களுக்கும் இதே கதி. இந்நிலை மாறுமா?

நாராயணன்

இந்த இதழில் உங்களுக்குப் பலப்பல அதிசயங்கள் காத்திருக்கின்றன! 6 ம் பக்கம் பார்க்க.

Kalki Shopping Page

Beauty **with HAL*brains**

(* Hindustan Aeronautics Limited)

Bharat TV



Available at:

VIVEK & CO.,
Mylapore Ph: 76923
Purasawalkam
Ph: 662462

TV TRADERS,
Alwarpet Ph: 71238
Annanagar Ph: 614899

STANDARD ELECTRIC CO.,
G. P. Road Ph: 811588

ACIL BT 33/79

THE UNIFORM VOICE OF THE SEASON

Wide range of BINNY Uniform fabrics Casement, Khaki drill, and white shirtings



SHOWROOM I
Exclusive for Binnys
SHOWROOM II
BASEMENT SHOWROOM (Airconditioned)

VENKATESH VASTRALAYA P. LTD
State Bank of Mysore Bldg.
Opp. High Court,
MADRAS-600 001, Phone : 20201.

PAM VVP 1081

Kalki Shopping Page

HMV STEREO 1515



HMV STEREO SYSTEMS

Available at:

UNIVERSAL AGENCIES
9, Mount Road,
Madras-600 002 Phone [illegible]098

HMV STEREO 3131 SUPERTRACK

Magnetic cartridge with diamond stylus.



HMV STEREO SYSTEMS

Available at:

MELODY HOUSE.
149, Purasawalkam High Road,
Madras-600 007 Phone: 663114

HMV STEREO 1010



HMV STEREO SYSTEMS

Available at:

SOUTH INDIA MUSIC EMPORIUM,
3, Broadway,
Madras-600 001 Phone: 21996
1/64, Pondy Bazaar,
Madras-600 017 Phone: 44025

supertrack 230

The professional stereo player



Rs 1027 plus taxes


Sophisticated Pick-up Arm
Magnetic Cartridge with
Diamond Stylus
Hydraulic Cueing · Floating Sub-chassis

His Master's Voice

Available at:

SINGH TRADING CO.,
9, Blackers Road,
Madras-600 002 Phone: 844359

Kalki Shopping Page







எங்கே போகிறோம்?



கல்வித் துறையில் கஷ்ட நஷ்டங்கள்!

[சென்னை பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தர வடிவேலு அவர்களிடம் கல்வித் துறையில் தற்போது தமிழகத்தில் காணப்படும் சில குறைபாடுகளைச் சுட்டிக் காட்டிய போது அது சம்பந்தமாக அவர் அளித்துள்ள பதில்களைக் கீழே வடித்துள்ளோம்.]

கேள்வி: கல்லூரிகளிலும், பல பள்ளிகளிலும் கூட 'டொனேஷன்' கொடுத்தால்தான் குறிப்பிட்ட வகுப்பில் சேர அனுமதி கிடைக்கும் என்கிற நிலை தற்போது தமிழகத்தில் மலிந்து கிடக்கிறதே? நன்கொடை பெறக் கூடாது என்று அரசு உத்தரவு இருந்தாலும் அதை வேறு விதங்களில் மறைமுக வரிபோல் வசூலித்து விடுகிறார்களே?

திரு சுந்தர வடிவேலு: ''ப்ளஸ் டூ'' முறையை அரசு திடீரென அமுலுக்குக் கொண்டு வந்துள்ளதால் அதிகப்படியாக ஒரு வகுப்பை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தில் இருக்கும் சுமார் 1150 பள்ளிகளில் 1000க்கு மேற்பட்டவைகளுக்கு விஞ்ஞான பரிசோதனைச் சாலை, வகுப்பறைகள், லைப்ரரி வசதி, மற்றைய தேவைகள் ஆகியவற்றை ஏற்படுத்தப் போதிய வசதி இல்லை. போதிய உதவியை இக்கல்வி நிலையங்களுக்கு அரசு அளிக்காத நிலையில் இவர்கள் மாணவர்களிடமிருந்து 'டொனேஷன்' வசூலித்து இத்தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றனர்.

கேள்வி: இத்தகைய நிலையில் இருக்கும் கல்விக்கூடங்கள் 'நன்கொடை' வாங்குவதை ஒப்புக் கொண்டாலும், நல்ல வசதி படைத்த பெரும்பான்மையான தனியார் கல்லூரிகள் ஆயிரம், ரெண்டாயிரம் என்று பட்டப் படிப்பு அனுமதிக்கு குறிப்பாக B.Com அனுமதிக்கு 'டொனேஷன்' வாங்குவதை எப்படி சரியாக எடுத்துக் கொள்ள முடியும்?

சுந்தரவடிவேலு: இத்தகைய கல்லூரிகள் நன்கொடை வாங்குவது வளரும் சமுதாயத்திற்கு இழைக்கும் பெரும் தீங்காகும். கல்லூரிகள் டொனேஷன் வாங்குவதைத் தடுக்க மூன்று விதமாகச் செயல்படலாம்.

அரசு, இத்தகைய கல்லூரிகளைக் கண்டு பிடித்து 'டொனேஷன்' மூலம் இக்கல்லூரிகள் பெறும் பணத்தை வரவாகக் கணக்கிட்டு அந்த அளவுக்கு அரசு தான் அளிக்கும் மான்யத்தில் குறைத்துக் கொண்டு இக்கல்லூரிகளுக்கு நிதி அளிக்க வேண்டும்.

கல்வி அதிகாரிகள், செனட் அங்கத்தினர்கள், அமைச்சர்கள் போன்றவர்கள் இக்கல்லூரிகள் நடத்தும் கூட்டங்கள் விழாக்கள், ஆகியவற்றில் பங்கேற்காமல் புறக்கணித்து இக்கல்லூரிகளுக்கு எதிரான பொது ஜன அபிப்பிராயத்தை உண்டாக்க வேண்டும்.

பெற்றோர்கள் தாங்கள் 'நன்கொடை' கொடுக்கக் கூடாது என்று உறுதியான முடிவெடுத்து நடை முறையில் அனுசரிக்க வேண்டும். அதோடு ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கூட்டம் போட்டு இக்கொடுமையினை ஒழிக்கும் விதமாகப் பொதுஜன அபிப்பிராயத்தை உண்டாக்க வேண்டும்.

கேள்வி: 11+1+3 என்றிருந்த கல்வித் திட்டத்தை 10+2+3 என்று மாற்றி யிருக்கிறார்களே, இம் மாற்றம் 'பழைய கள் புதிய மொந்தையில்' என்கிற பழமொழிக்கு ஒப்பானது என்று ஒப்புக் கொள்கிறீர்களா?

சுந்தரவடிவேலு: 10 + 2 என்று மாற்றியது அவசியம் இல்லாததாகத்தான் தோன்றுகிறது. அகில இந்திய அளவில் மற்றைய மாநிலங்களில் இம்முறை இருப்பதால் தமிழகமும் அதே போன்ற திட்டம் மேற்கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தில் இம்மாற்றம் செய்யப்பட்டது. ஆனால், 'அகில இந்திய அளவில் ஒரே மாதிரியான கல்வித் திட்டத்தைக் கொண்டு வருவது நடைமுறையில் சாத்தியமானது அல்ல' என்று மத்தியக் கல்வி மந்திரி திரு பி. வி. சுந்தர் அவர்களே பேசியுள்ளார்.

மற்றைய மாநிலங்களில் 10 + 2 + 2 என்ற முறைப்படி 14 வருடங்கள்தான் படிக்கின்றனர். மாறாக தமிழகத்தில் நூறாண்டுகளாக 15 வருடப்படிப்பு உள்ளது. திரு வி. சுப்பிரமணியம் தமிழகத்தின் கல்வி அமைச்சராக இருந்த போது 15 வருடத்தை 14 வருடத்திற்குக் குறைக்கலாம் என்கிற எண்ணத்தில் ஒரு முயற்சி நடத்தது. ஆனால் மாணவர்கள் 15 வருடப் படிப்பை 14 வருடத்திற்குள் படிக்க வேண்டிய கட்டாயத்தில் அதிக பாட அளவால், கஷ்டங்கள் பட்டதைக் கண்டு பின்னால் கல்வி அமைச்சராக வந்த திரு எம். பக்தவத்சலம் இதனைக் கைவிட்டு விட்டார்.

இதேமாதிரி மற்றைய மாநிலங்களும் ஒரு வருடம் படிப்பை அதிகரிப்பதும் முடியாத காரியம். ஏராளமான பணச்செலவோடு மற்றைய சிக்கல்களும் உண்டு.

கேள்வி: சென்னை சர்வகலா சாலையில் பயின்றவர்கள் என்றால் ஒரு காலத்தில் அகில இந்திய அரங்கில் மிக உயர்வாகக் கருதப்பட்டது. இந்நிலை மாறி தற்போது கல்வியின் தரத்தில் தமிழகமும், குறிப்பாக சென்னை சர்வகலாசாலையும் பின்தங்கி விட்டதாகத் தோன்றுகிறதே. உங்கள் அபிப்பிராயம் என்ன?

சுந்தரவடிவேலு: 1930ம் ஆண்டிலிருந்து 1965 வரை அநேகமாக ஒரே பாடத் திட்டங்களை (Syllabus) நாம் பின்பற்றி வந்து மிகவும் பின்தங்கி விட்டோம். மாறாக டெல்லி, அலிகார், ஜவாஹர்லால் நேரு சர்வகலாசாலை போன்று பல சர்வகலாசாலைகள் காலத்தின் தேவைக்கும், முன்னேற்றத்திற்கும் ஏற்றாற் போன்று தங்களது பாடத் திட்டங்களை மாற்றிக் கல்வியின் தரத்தை உயர்த்திக் கொண்டுள்ளனர். 1969 லிருந்து 1975 வரையிலான காலகட்டத்தில் சென்னை சர்வகலா சாலைக்கும் விழிப்பு ஏற்பட்டுப் பாடத் திட்டங்கள் மாற்றம் செய்யப்பட்டன. தற்போதும் இவ்வழி முறை தொடர்வதாகக் கேள்வி. ஆனாலும் நாம் அதிகம் தாங்கி விட்டதால் சோம்பல் தெளிந்து சுறுசுறுப்படைய இன்னும் சிறிது காலம் பிடிக்கும்!

கேள்வி: மேல்நாடுகளில் போஸ்ட் கிராஜுவேட் அளவில் சிறப்புப் படிப்பு படிக்கும் விதமாக பாட திட்டங்கள் உள்ளன. உதாரணமாக Banking, Monetary Theory, Public Finance போன்று வேண்டிய பாடத்தில் Specialize செய்யும் விதமாக 'போஸ்ட் கிராஜுவேட்' அளவில் உண்டு. நமது பாடத் திட்டமோ கடைசி நிலை வரை Politics, Economics என்று பொதுப்படையாகவே உள்ளது! இதனைக் குறையாக நீங்கள் கருதவில்லையா?

சுந்தரவடிவேலு: உயர்மட்டப் பள்ளி நிலையிலேயே பாடங்களில் சிறப்புப் பயிற்சி தொடங்கிவிட வேண்டும் என்பதுதான் என் கருத்தும். இத்தகைய சிறப்புப் பயிற்சி பட்டப்படிப்பு நிலையில் தொடரப்பட்டு 'போஸ்ட் கிராஜுவேட்' நிலையில் ஆழ்ந்த அளவில் பயிலுவிக்கப்பட வேண்டும்!

கேள்வி: கல்வித்தரம் பொதுவாகக் குறைந்து போனதற்கு ஒரு முக்கிய காரணம் மாணவர்களிடம் ஒழுங்குமுறை குறைந்ததனால்தான் என்று கூறப்படுகிறதே! தங்கள் கருத்து என்ன?

சுந்தரவடிவேலு: எங்கள் காலத்தோடு ஒப்பிடும்போது மாணவர்களுக்குப் படிப்பிலுள்ள ஆர்வமும், பொதுவான ஒழுங்கு முறையும் குறைந்துள்ளதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அதோடு ஆசிரியர்களுக்கும் கல்வி போதிப்பதில் இருக்க வேண்டிய ஆழ்ந்த ஈடுபாடு முன்போல் இல்லை. மாணவர்களைப் பொறுத்த மட்டில் அவர்களது கவனம் அரசியலில் திருப்பப்படுவதால் தான் கல்வியின் பால் இருக்கவேண்டிய சிரத்தை குறைகின்றது.

திரு ராஜாஜி அவர்களும் பெரியார் அவர்களும்தான் மாணவர்களை அரசியலுக்கு இழுக்கக் கூடாது என்னும்கொள்கையைக் கடைசிவரை தீவிரமாக ஆதரித்தவர்கள்.

1958இல் அண்ணாதுரை அவர்கள் சென்னை சட்டமன்றத்தில் 'மாணவர்களையும் ஆசிரியர்களையும் தீவிர அரசியலில் ஈடுபடுத்த எந்த அரசியல் கட்சியும் வழிவகுக்கக் கூடாது' என்ற கருத்தின்



அடிப்படையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 1965 வரை எல்லா அரசியல் கட்சிகளும் அதன்படி நடந்து கொண்டன. அத்தீர்மானத்தை அப்போது மத்தியக் கல்வி மந்திரியாக இருந்த திரு ஹுமாயூன் கபீர் எல்லா மாநிலங்களுக்கும் நகல் எடுத்து அனுப்பி அவர்களும் இதனைப் பின்பற்றலாம் என்று கருத்து தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது மாணவர்களை ஈர்க்கும் நிலை உண்டானதைத் தொடர்ந்து மாணவர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடும் நிலை மறுபடியும் தொடர ஆரம்பித்து விட்டது. தற்போதைய சூழ்நிலையில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒருங்கிணைந்து 'மாணவர்களை அரசியலில் ஈடுபடுத்தக் கூடாது' என்று முடிவெடுத்துச் செயல்பட்டால் தமிழகத்தில் கல்வியின் தரம் உயர்வதோடு, மாணவர்களிடம் ஒழுங்கு முறையும் அதிகரிக்க அது வாய்ப்பளிக்கும்!


கேள்வி: ஆசிரியர்களிடம் கல்வி போதிப்பதில் இருக்க வேண்டிய ஆழ்ந்த ஈடுபாடு இல்லை என்று குறிப்பிட்டீர்களே அதற்கு அடிப்படைக் காரணம் என்ன?

திரு சுந்தரவடிவேலு: தற்போது பெரும்பாலான பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பிலும் குறைந்தது 75 மாணவர்களாவது இருக்கும் நிலை உருவாகி உள்ளது. இந்நிலையில் பள்ளிகள் மேலும் ஆசிரியர்களை நியமிக்கத் தயாராகத்தான் உள்ளன. ஆனால் அரசு அனுமதி அளிக்க மறுக்கிறது. அரசு அனுமதித்தால் சுமார் 25 ஆயிரம் ஆசிரியர்களை வேலைக்கு அமர்த்த வாய்ப்பு உள்ளது. இதனால் வேலை இல்லாத் திண்டாட்டமும் ஓரளவு குறையும். மாணவர்களின் குறை, நிறைகளை நன்கு கணித்துச் சிறந்த முறையில் ஆசிரியர் கல்வி பயில்விக்க வேண்டுமானால் ஒரு வகுப்பிற்கு 35 மாணவர்களாக இருக்க வேண்டும், அதிகப்படியாக 45க்கு மேல் போகவே கூடாது!

கேள்வி: 'செமஸ்டர்' கல்வி முறை பற்றித் தங்களது அபிப்பிராயம் என்ன?

திரு சுந்தர வடிவேலு: செமஸ்டர் முறையினால் மாணவர்களுக்குச் சுமை குறைந்துள்ளது. ஆனால் வருட முழுவதும் தேர்வு பயத்துடன் படிக்க வேண்டியது அவசியம் ஆகிறது. கற்ற கல்வியின் திறனை ஆராயத் தேர்வுகள் இருக்க வேண்டுமே தவிர தேர்வுக்காகக் கல்வி கற்கிறோம் என்கிற எண்ணம் மாணவர் உள்ளத்தில் எழக்கூடாது. இந்நிலையில் 'செமஸ்டர்' முறை அவசியம் இல்லை என்பது என் அபிப்பிராயம்.

செமஸ்டர் முறையில் சுமார் 40 சதவீதம் மதிப்பெண்கள் *Internal Assessment* முறையில் வழங்கப் படுகின்றன. தற்போது பல கல்லூரிகளில் இம்முறையில் மதிப்பெண்கள் வழங்கப்படும் போது



அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் இவ்வாண்டு மாநாடு ஆபாச எழுத்து எதிர்ப்பு மாநாடாகவே இரண்டு நாட்கள் நடந்து முடிந்தது. ஆரூரன் அடியெடுத்துக் கொடுக்க, மற்றவர்கள் அனுபல்லவி, சரணம் சேர்த்து இதே விஷயத்தையே நிரவல் பண்ணினார்கள். "ஒரு கோட்டைச் சிறிதாக்க, அருகே பெரிய கோடு இழுக்கப்பட வேண்டும் என்பது போல், உயர்ந்த இலக்கியப் படைப்புக்கள் இங்கே தோன்ற வேண்டும்; அவை வரவேற்புக்குள்ளாகிப் பாராட்டப் படவும் வேண்டும்" என்ற ரகுநாதன் கருத்து குறிப்பிடத்தக்கது. அரசு, எழுத்தாளர்களுக்குப் போக்குவரத்துச் சலுகை தவிர, ஆண்டுதோறும் திரு. வி. க. விருது வழங்கப்படுவது என அமைச்சர் திரு வீரப்பன் அறிவித்தது மகாநாட்டின் நற்பயன்களுள் சில. இந்த ஆண்டுக்கான திரு. வி. க. விருதை காலஞ்சென்ற திரு ஜெகசிற்பியன் சார்பில் அவர் மகள் செல்வி அஜந்தா அமைச்சரிடம் பெறுவதைப் படத்தில் காணலாம்.


ஒழுங்கீனங்கள் தலை தூக்கி வருவதாக அறிகிறேன். இதன் அடிப்படையில் பார்த்தாலும் 'செமஸ்டர்' முறை தவிர்க்கத் தக்கது.


முடிக்குமுன் நானாக இன்னொன்று கூற ஆசைப்படுகிறேன்.

தற்போது கல்லூரிகளில் கல்வி போதிக்கும் முறை மிகவும் இயந்திரத் தனமாக ஆகிவிட்டது. புத்தகப் படிப்பைத் தவிர *Co-curricular activities* என்று சொல்லப்படும் சக பாடத் திட்டம் அனுசரிக்கப்படுவதில்லை. மாணவர்களுக்கிடையேயும், மாணவர் ஆசிரியர்களுக்கிடையேயும் கூட்டு சம்பாஷணைகளும் கருத்துப் பரிமாறல்கள், பட்டி மன்றங்கள் போன்றவை ஏற்பாடு செய்யப் படுவதில்லை.


இத்தகைய வழிமுறைகளை மேற்கொண்டால் மாணவர்களின் குணநலன் சிறப்பாகப் படிவதோடு அறிவும் கூர்மையாகும். உலகிலேயே சிறந்த இரு சர்வகலாசாலைகளாகக் கருதப்படும் கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலைகள் மிகச்சிறந்த மாணவர்களை உருவாக்குவதற்கு இவ்வழிமுறைகளைத்தாம் பின்பற்றுகின்றன.

பேட்டி: நாயகன்
புகைப்படம்: மன்னை மூர்த்தி





தற்கால அரசியல்வாதிகள் நேர்மையும் ஒழுக்கமும் அற்றவர்களாக இருக்கிறார்கள்— பட்வாரி



கல்கி



1979 ஜூன் 24
சித்தார்த்தி ஆனி 10
மலர்: 37 இதழ்: 47

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

ஒரு கண்ணில் வெண்ணெய்! மறு கண்ணில் சுண்ணாம்பு!

மதுவிலக்குக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்பது அரசியல் சாசனத்திலேயே வற்புறுத்தப்பட்டுள்ளது. இந்தச் சிறந்த பணியில் என்றுமே முன்னணியில் இருந்து வந்திருக்கிறது தமிழகம்.

மது விலக்கு அமல் படுத்துவதனால் மாநில அரசுக்கு ஏராளமான வருவாய் இழப்பு ஏற்படுகிறது.' அதன் விளைவாகத் தொழில் துறை அபிவிருத்தி அடையும் வேகம் கணிசமாகப் பாதிக்கப் படுகிறது. 'மதுவிலக்கு காரணமாக மக்களிடம் மிச்சப்படும் பணத்தைச் சேமிப்பு செய்ய வைத்து அதனைத் தொழில்துறைமுன்னேற்றத்துக்குப் பயன்படுத்தலாம்' என்ற வாதம் ஏட்டளவில் சரியாக இருக்குமே யொழிய யதார்த்த நோக்கில் பயன்படுவதில்லை. விலைவாசி உயர்வால் சேமிப்பு செய்வதே கடினமாக உள்ளது. மதுவில் விரயமாகாத பணத்தை மக்கள் சினிமாப் போன்ற கேளிக்கை அம்சங்களில் செலவழித்து விடுவதும் உண்டு.

திரு கருணாநிதி மது விலக்கை இங்கே தாற்காலிகமாக நிறுத்தி வைத்த போது அவர் கூறிய காரணம், 'முன்னேற்றத் திட்டங்களை அமல்படுத்த நிதி வசதி இல்லை' என்பதுதான். சென்ற இதழில் வெளியான பேட்டியில் கூட தொழில் துறை முன்னேற்றத்துக்குப் பெருந்தடையாக இருப்பது நிதிவசதி இல்லாமைதான் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

இவ்வாறான சூழலில் மதுவிலக்கை அமல்படுத்துவது எவ்வளவு பெரிய லட்சிய நோக்கு என்பதை எளிதில் உணரலாம். இதே நேரத்தில் மற்றமற்ற மாநிலங்கள் மதுவிலக்கினை அமல் படுத்தாததால் நிதிவசதி குறைவரப் பெற்று, தொழில் துறையில் வேகமாக முன்னேறி வந்திருக்கின்றன. எனவே மது விலக்கு அமல் படுத்தும் தமிழகத்துக்கு மத்திய அரசு விசேஷ நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் மத்திய அரசு இதற்குச் செவி சாய்க்கவில்லை.

இதுவே அநீதி என்றால் இப்போது பதவிக்கு வந்துள்ள ஜனதா அரசு இவ்விஷயத்தில் இதைவிட அநீதியான காரியம் ஒன்றைச் செய்திருக்கிறது. ஜனதா அரசு பதவிக்கு வந்த பிறகு பீகார் போன்ற சில வடமாநிலங்களில் மது விலக்கு அமல் படுத்தப்படுகிறது. இந்த மாநிலங்கள் இதனால் இழக்கப் போகிற வருவாயில் ஒரு கணிசமான பகுதியை மத்திய அரசு ஈடு செய்வதாக ஒப்புக்கொண்டு மதுவிலக்கினை அமல்படுத்த ஊக்கம் அளித்துள்ளது. ஆனால் அதே நேரத்தில் தமிழகத்தின் நீண்டகாலக் கோரிக்கை அடியோடு புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ளது.

முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ஆர். இப் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில், இந்த இதழில், ''என்ன செய்ய? நெல்லுக்கு ஒரு விலை, கோதுமைக்கு ஒரு விலை என்பது போல்தான் இதுவும் இருக்கிறது'' என்று கூறியதன் மூலம் அநீதிகள் ஒன்றல்ல, இரண்டு என்பதாக விசனத்துடன் சுட்டிக் காட்டியுள்ளார்.

கோதுமை விளைச்சலைவிட நெல் விளைச்சலுக்கு ஆகும் செலவோ தேவைப்படும் உழைப்போ சற்றும் குறைந்ததல்ல என்னும் போது மத்திய அரசுக்கு ஏன் இந்தப் பாரபட்சம்?

ஒரு கண்ணில் வெண்ணெய் இன்னொரு கண்ணில் சுண்ணாம்பும் என்ற கொள்கை அநீதியானது மட்டுமல்ல, ஆபத்தானதும் கூட என எச்சரிக்கிறோம்.

அத்தியாயம் 43

பிரமீளாவுக்குத் தன் அழகை நிலைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்வதில் ஒரு புதிய சுவாரஸ்யம் ஏற்பட்டிருந்தது. இது வரை நிலைக் கண்ணாடி என்பது அலங்காரம் செய்து கொள்ள ஒரு கருவியாக மட்டுமே பயன்பட்டு வந்தது. அதனுடைய அந்த உபயோகம் முடிந்த மறுகணம் அவள் அகன்று விடுவாள். வேறு வேலைகளைக் கவனிக்கப் போய் விடுவாள். ஆனால் இன்று அலங்காரம் செய்து முடித்துக் கொண்ட பிறகும், தன் முழு உருவத்தையும் பிரதிபலிக்கும் அந்தக் கண்ணாடியில் தன் எழிலை நின்று கவனிக்க ஆரம்பித்தாள். இவ்விதம் தன் அழகைத் தானே ரசிப்பதிலேயே வெட்கமுற்று இலேசாகக் கன்னங்கள் சிவக்க, கண்களில் நாணத்தை விரட்டி அடிக்கும் பெருமிதம் மின்ன, அதரங்களில் குறும்புப் புன்னகை தவழ, இவை காரணமாகவே தன் அழகு மேலும் சிறப்பதாக அவளுக்குத் தோன்ற, இப்படியும் அப்படியுமாகத் திரும்பிப் பக்க வாட்டிலும் பின்புறமும் தன் சௌந்தர்யங்களை ரசித்தாள். கழுத்தும் தோள்களும் இடையின் சரிவுகளும் அதற்கு மேலும் கீழுமாக எழுச்சிகளும் மற்ற மற்ற அவயவங்களும் அவற்றை ஆளப்போகின்ற சத்யாவுக்கு எந்த அளவுக்குத் திருப்தி தருமென்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டு, அழகு தொடர்பான ஓர் ஆராய்ச்சி மனப்பான்மையுடன் நின்றாள்.

''பிங்கி!'' என்று அழைத்துக் கொண்டே வந்தாள் தாயார் லலிதா. ''யாரோ நித்யா வாமே, உன் ஃப்ரெண்டாம். உன்னை அவசரமா பார்க்கணுமாம். கீழே வந்து காத்திருக்கா'' என்றாள்.

''நித்யாவா?'' என்று திடுக்குற்றவளாகக் கேட்டுத் திரும்பிய பிரமீளா, தன் திகைப்பைத்தாயாரிடமிருந்து மறைத்துக் கொள்ளவும் முயன்றாள்.

''ஆமாம். அவ பார்வையே சரியில்லே. அவளைப் பார்க்கவும் சகிக்கலே. எங்கோ அடிபட்டு மிதிபட்டு வந்தமாதிரி இருக்கு. ஏதோ தப்புப் பண்ணிட்டுத் திருதிருன்னு முழிக்கிறவ மாதிரியும் தோணுது. யாரு அவ? இதற்கு முன் அவளை இங்கே நான் பார்த்ததே இல்லையே?''



'அவனை நான் சந்திக்க விரும்பலே என்று கூறி அனுப்பி விடலாமா?' என ஒரு கணம் நினைத்தாள் பிங்கி. உடனேயே அவளுக்கு இயல்பான, எதிர்ப்பைச் சந்திக்கும் ஆர்வம் தலைதூக்கியது. 'எதற்கு வந்திருப்பாள்? என்னதான் சொல்கிறாள்? பார்த்துக் கேட்டு விடலாமே?' என்று தோன்றியது. ''அவளை முதலில் பேசி அனுப்பிவிட்டு வருகிறேன், அம்மா! அப்புறம் அவள் யார் என்று விவரமாகச் சொல்கிறேன்'' என்று கூறிவிட்டு மாடிப்படிகளில் இறங்கிச் சென்றாள்.

வரவேற்பு அறையில் பேயறைந்தது மாதிரி அமர்ந்திருந்த நித்யாவைக் கண்டதுமே



ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டது என்பதாகப் பிரமீளாவுக்குப் புரிந்து போய் விட்டது.

''என்ன நித்யா? என்ன விஷயம்?'' என்றாள் பரபரப்புடன்.

''நான் பெரிய தப்பு செய்துட்டேன் பிங்கி! நேரா போலீஸுக்குப் போக எனக்குப் பயமா இருந்தது; உன்னிடம் வந்தேன்'' என்று கூறும்போதே கரங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு நித்யா அழ ஆரம்பித்து விட்டாள்.

பிரமீளாவுக்குப் பாவமாகவும் இருந்தது; அவளுடைய பரபரப்பும் அதிகரித்தது.

''போலீஸா? என்ன நடந்தது நித்யா? சட்டுன்னு சொல்லேன்'' என்று அவள் அருகில் அமர்ந்து அவள் தோள்களை ஆதரவாகப் பற்றி, அதே நேரத்தில் அவசரத்தை உணர்த்தும் விதமாக உலுக்கினாள்.

''ஆனந்தை... ஆனந்தை... நான் ... கொன்னுட்டேன்!''

''என்னது!''

''ஆமாம். நான் கொலைகாரி! போலீஸில் சரணடைய வேண்டியவள். ஆனா எனக்கு அவங்களைச் சந்திக்கவே பயமா இருக்கு பிங்கி!''

பிரமீளா அவளுக்கு ஒரு பாதுகாப்பு உணர்வு ஊட்டக் கதவுகளைச் சாத்தித் தாளிட்டாள். மறுபடி வற்புறுத்தியும் தைரியமூட்டியும் நித்யாவைப் பேச வைக்க, தட்டுத் தடுமாறிய படியே விம்மல்களினூடே நடந்ததையெல்லாம் அவள் சொல்லி முடித்தாள். ''இறந்து விழுந்து கிடந்த அவன் டிரௌஸர் பாக்கெட்டிலிருந்து எப்படித்தான் வாசல் கதவு சாவியை எடுக்க எனக்குத் தெம்பு வந்ததோ, எப்படித்தான் அபார்ட்மெண்ட்டைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டு புறப்பட்டு ஒரு டாக்ஸி பிடித்து இங்கே வந்து சேர்ந்தேனோ? நினைச்சுப் பார்த்தா எல்லாம் ஒரு பயங்கர சொப்பனம் மாதிரி இருக்கு. ஆனா இந்தச் சாவி, நடந்தது எல்லாம் உண்மைன்னு சாட்சி சொல்லிக்கிட்டு இருக்கு!'' ஆனந்துடைய பாச்சிலர் அபார்ட்மெண்ட்டின் வாசல் கதவு சாவியை ஹேண்ட் பேகிலிருந்து அவள் எடுத்துத் தந்தாள். ''இந்தா இதை வைச்சுக்கோ. போலீஸுக்கு ஃபோன் செய்து வரச் சொல்லி, என்னையும் இதையும் அவங்களிடம் ஒப்படைச்சுடு.''

இடையே குறுக்கிடாமல் அனைத்தையும் கேட்டுக் கொண்ட பிங்கி, அவள் முடித்த பிறகு ஒரு கணமும் தாமதியாமல் சொன்னாள்: ''நித்யா! நீ ஆனந்தைக் கொல்லலே. அம்மனேதான் அவன் உயிரைப் பறிச்சுட்டா. அவன் தொடர்ந்து வாழ்வது பெரிய அநீதி என்ற எண்ணத்தில் உயிரை வாங்கிட்டா. அதற்கு உன்னை ஒரு கருவியா பயன்படுத்திக்கிட்டா, அவ்வளவுதான். நித்யா! நீ தைரியமா இரு. உன் விடுதலைக்கு என் மூளை மட்டும் பாடுபடுவேன். எவ்வளவு வேணுமானாலும் செலவு செய்வேன்.

ராஜசேக

கி.ராஜேந்திரன்

ருக்குக் குறைந்த தண்டனை பெற்றுத் தர ஆனந்த் முயற்சி எடுக்க முடியும்னு உனக்கு விடுதலை தேடித்தர என்னால் முடியாதா? ராஜசேகரின் சாட்சியமே உனக்கு உதவும். அவனிடம் உள்ள ஃபிக்ஸட் டெபாசிட் ரசீதும் ஆனந்த் எப்படிப்பட்டவன் என்பதை நிரூபிக்கும். மஹாபலிபுரத்தில் நடந்ததாக நான் கூறப் போகும், சாட்சியமும் உன்னுடைய வாக்குமூலம் பொய்யல்ல என்று உணர்த்த பக்கபலமாக நிற்கும். ஆனந்தை நீ கொல்ல நேர்ந்தது தற்காப்புக்காகத்தான், அது கொலையல்ல என்று சுப்ரீம் கோர்ட் வரை போய்ப் போராட நான் தயார்! உமன்ஸ் லிப் என்பது இனி என்னைப் பொறுத்த மட்டில் உன் விடுதலைதான்! பெண்கள் சமுதாயத்துக்கே நீ ஆனந்தைக் கொன்றதன் மூலம் பெரிய சேவை புரிந்திருக்கிறாய் என்று நான் நம்புகிறேன்!''

பிங்க் டெலிஃபோன் ரிஸீவரைக் கையிலெடுத்து எண்களைச் சுழற்றினாள்.



''போலீஸுக்கா ஃபோன்?'' என்று கண்கள் கலவரத்துடன் விரியக் கேட்டாள் நித்யா.

புன்னகை புரிந்து, கண் சிமிட்டி, தைரிய மூட்டிய பிரமீளா, ''இல்லை வக்கீலுக்கு'' என்றாள்.

அத்தியாயம் 44

அனாவசியமான வம்பு அரட்டைகளுக்கு இடம் தராமல் காரியாலயத்துக்கு வந்ததும் வராததுமாக வேலைகளில் மூழ்கும் தமது இயல்புப்படி வைத்தியலிங்கம் தமது அறை நோக்கி நடக்கும் போதே, ''அருள்! கானமேகத்தை வரச் சொல்லிட்டீங்களா? எத்தனை மணிக்கு வரார்?'' என்று கேட்டார்.

தம் இடத்தை விட்டு எழுந்து, அவருடன் இணைந்து நடந்த அருள், ''பத்தரையிலிருந்து பதினொன்றுக்குள் இங்கே இருக்கிறதாச் சொன்னார். இப்ப வர நேரம்தான்'' என்றார்.

''குட் குட்! ஐ ஆம் ரெடி ஃபார் ஹிம்'' என்று தன்னம்பிக்கையுடன் கூறியவாறு தமது அறைக்குள் நுழைந்து தமது ஆசனத்தில் அமர்ந்தார் வைத்தியலிங்கம். ''தொழிலாளர் நலனைக் கருதியே நான் செயல்பட்டு வருகிறேன் என்பதை இனிமேல் அவரால் மறுக்கவே முடியாது!''

''அப்படி என்ன ஸார் செய்யப் போறீங்க? என்ன திட்டம் வைச்சிருக்கீங்க?''

''ஆ! அதை இப்போ சொல்ல மாட்டேன்!'' என்றார் வைத்தியலிங்கம். ''கானமேகம் வந்தப்புறம்தான் சொல்வேன். என்னு நீங்க என் மனசை மாற்றப் பார்ப்பீங்க!''

''யூ ஆர் ராங்!'' என்றார் அருள்ராஜ். ''நல்லது கெட்டது எடுத்துச் சொல்ல வேண்டியது என் கடமை. அதுக்குத்தான் நீங்க எனக்குச் சம்பளம் தரீங்க. ஆனா, எதிலும் இறுதி முடிவு எடுக்க வேண்டியது நீங்கதான். அப்படி முடிவு எடுத்த பிறகு அது என் யோசனைக்கு விரோதமானதா இருந்தாலும் கூட நான் உங்களை விட்டுக் கொடுக்க மாட்டேன். ஐ வில் ஸ்டாண்ட் பை யூ!''

''யெஸ், யெஸ். அது எனக்குத் தெரியும். மணி என்ன ஆச்சு? கானமேகம் வந்தாச்சா, பாரேன்!''

''என்ன ஸார்! எதுக்கு இப்படி ஒரேயடியா பதற்றப்படறீங்க? என்ன தலைபோகிற அவசரம்?''

''நல்ல காரியம் ஒண்ணு செய்யத் தீர்மானிச்சா அதைச் சீக்கிரம் பண்ணிடணும். மனசு மாறுமுன் செய்துடணும்.''

பியூன் இந்த நேரத்தில் எட்டிப் பார்த்து, ''ஸார்! கானமேகம் வந்திருக்கிறார்'' என்றான்.

''வரச் சொல்லு! வரச்சொல்லு!'' என்ற வைத்தியலிங்கம் தாமே எழுந்து போய் எதிர் கொண்டழைத்து வந்தார். ''வாங்க கானமேகம் வாங்க, உட்காருங்க.''

கானமேகத்துக்குப் புதிராக இருந்தது. ''என்ன ஸார் வரவேற்பு இன்னிக்குப் பிரமாதமா இருக்கு?'' என்று சற்றுக் கிண்டலாகவே கேட்டார்.

''நான் ஒரு நல்ல முடிவுக்கு வந்துட்டேன். கேட்டா நீங்க ரொம்ப சந்தோஷப்படுவீங்க'' என்றார் வைத்தியலிங்கம். ''தொழிலாளர் எல்லாரும் சேர்ந்து என்னைத் தோளிலே தூக்கி வைச்சுக்கிட்டு கொண்டாடுவாங்க!''

''ஸார்! ஸஸ்பென்ஸை இனி தாங்க முடியாது. என்ன விஷயம்? சொல்லிடுங்க!''

''சொல்லட்டுமா? சொல்லியே விடட்டுமா? இந்தத் தொழிலகத்தைத் தொழிலாளர்களுக்கே உரிமையாக்கிட்டேன், மிஸ்டர் கானமேகம்! இனிமே எனக்கோ என் சந்ததியினருக்கோ இதில் எவ்விதமான சம்பந்தமும் கிடையாது!''

கானமேகம் திடுக்கிட்டு எழுந்து நின்றார். அருள்ராஜ் பதற்றமடைந்து வைத்தியலிங்கத்தை அணுகி, ''ஸார்! யோசிச்சுச் செய்யுங்க! அவசரப் படாதீங்க!'' என்றார்.

''நன்றாக யோசிச்சுச் செய்த முடிவுதான். நேற்று ராத்திரியே வக்கீலை வீட்டுக்கு வரச் சொல்லி எல்லாப் பத்திரங்களையும் தயாரிச்சு எடுத்து வந்திருக்கேன். இன்னும் ரிஜிஸ்டிரேஷன் மட்டும் தான் பாக்கி. பதினொரு மணிக்கு ரிஜிஸ்திரார் ஆபீஸ் திறந்ததும் அதையும் முடிச்சுக்கிட்டு வந்துடலாம். ...

என்ன காளமேகம்? என்ன அசந்து போய் நின்னுட்டீங்க? சந்தோஷம்தானே?''

''மிஸ்டர் வைத்தியலிங்கம்... நீங்க... நீங்க... அருள்ராஜ் சொல்கிற மாதிரி நல்லா யோசிச்சுச் செய்யறது நல்லது.''

''நிறைய யோசிச்சாச்சு. என் மகனும் மகளும் கூட சந்தோஷமா சம்மதிச்சுக் கையெழுத்துப் போட்டுட்டாங்க. இந்தாங்க, இந்தப் பத்திரத்தை ஒருதரம் பார்த்துட்டு ஓ. கே. பண்ணுங்க.''

பத்திரத்தைக் காளமேகம் கையில் வாங்கவில்லை. ''ஸார்! இது ஒரு திடீர்த் தாக்குதல். எனக்கு ஒண்ணும் புரியலே. யோசிச்சுத்தான் பதில் சொல்லணும்.''

''யோசிக்க என்ன இருக்கு?'' என்றார் வைத்தியலிங்கம். ''ஐ ஆம் கிவிங் அப் தி கம்பெனி லாக் ஸ்டாக் அண்டு பாரல் டு தி ஒர்க்கர்ஸ்! அவங்க சந்தோஷமா ஏற்றுக்கிட்டு நிர்வாகம் பண்ண வேண்டியதுதானே? 'நீ முதலாளி, நான் தொழிலாளி' என்கிற எண்ணத்தினால்தானே எல்லாத் தகராறும்? நானும் இன்றிலிருந்து ஒரு தொழிலாளியா இருக்கேன். அதாவது நீங்க என்னை இங்கே வேலை பார்க்க அனுமதிச்சீங்கன்னு — அட்வைஸரா இருக்கேன். எல்லாருமாச் சேர்ந்து வேலை செய்வோம். கிடைக்கிற லாபத்தைப் பகிர்ந்துப்போம். இனி ஊதிய உயர்வுப் பிரச்னை, ஓவர் டைம் பிரச்னை, போனஸ் தகராறு, கோ ஸ்லோ டாக்டிக்ஸ், பொறாமை பூசல், போராட்டம், ஒழிக கோஷம் எதுவும் இருக்காது! தொழிலாளர்களே தங்களுக்குள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து நிர்வாகப் பொறுப்பில் அவரை வைக்கட்டும்!''

''ஸார்! நிறுத்துங்க! ரொம்ப உற்சாகமாப் பேசிட்டுப் போறீங்களே? இது நடக்கிற காரியமா எனக்குத் தோணலே.''

''ஏன் நடக்கக் கூடாது? என்ன கஷ்டம் இதில்? ''

காளமேகம் அருள்ராஜ் பக்கம் திரும்பினார். ''என்ன அருள்ராஜ், பேசாம இருக்கீங்களே? நீங்க கொஞ்சம் எடுத்துச் சொல்லக் கூடாதா?'' என்றார்.


''பிரயோஜனமில்லே. அட்வைஸ் பண்ணற கட்டம் தாண்டிப் போச்சு என்கிறதை நான் புரிஞ்சுக்கிட்டிருக்கேன்'' என்றார் அருள்ராஜ்.

காளமேகம் சற்று யோசித்தார். பிறகு, ''சரி ஸார்! பன்னிரண்டு பர்ஸண்ட் போனஸ் கொடுங்க போதும். நான் தொழிலாளிங்களைச் சரிக் கட்டிடறேன்'' என்றார்.

''என்னது, நான் கம்பெனியையே கொடுத்துடறேன்கிறேன். நீங்க பிசாத்து பன்னிரண்டு பர்ஸண்ட் போனஸ் கொடுங்கன்னு கேட்டுக்கிட்டிருக்கீங்களே?'' என்றார் வைத்தியலிங்கம்.

''ஆல்ரைட், கடைசியா சொல்றேன். பத்து பர்ஸண்ட்! இதுக்குக் குறைவா ஒத்துக்கிட்டா என் முதுகுத்தோலை ஊழியர்கள் உரிச்சுடுவாங்க.''

''காளமேகம்! உங்களுக்கு இன்னும் புரியலையா?'' என்று அருள்ராஜ் இடைபுகுந்தார். ''போனஸ்ஸோ, ஊதிய உயர்வோ, அல்லது கம்பெனிசம்பந்தப்பட்ட வேறு எந்தவிதமான



பிரச்னையோ இனி வைத்தியலிங்கத்திடம் பேசிப் பிரயோஜனமில்லே. அவர் கம்பெனியைத் தொழிலாளிங்களுக்கு நன்கொடையாக் கொடுத்துட்டார். இனி பிரச்னைகளைத் தொழிலாளர்களேதான் தங்களுக்குள் பேசிச் சமாளிக்க வேண்டும்!''

''ஆமாம், கமான், டேக் இட் '' என்று வைத்தியலிங்கம் பத்திரத்தைக் காளமேகம் பக்கமாக நீட்டினார்.

காளமேகம் மெல்ல எழுந்தார். ''நான் இதுபற்றித் தொழிலாளர்களைக் கலந்தாலோசித்து விட்டுத்தான் ஸார் சொல்லணும்'' என்றார்.

''ஓகே வெளியேதானே நிற்கிறாங்க எல்லாரும்? போய்ப் பேசிட்டு வாங்க. சீக்கிரமா காரியம் முடியட்டும். கிஃப்ட் டாக்ஸ் பற்றிக் கூட யாரும் கவலைப்பட வேண்டாம். அதையும் நானே கட்டிடறதா பத்திரத்தில் எழுதியிருக்கேன். என் தனிப்பட்ட சொந்த சொத்து எதையாவது விற்றுக்கட்டிடறேன்.''

காளமேகம் தளர்ந்து போனவராக வெளியேறினார்.

''அனாவசியமா இந்தக் காளமேகம் தாமதப் படுத்தறான்'' என்று அலுத்துக் கொண்டார் வைத்தியலிங்கம்.

''அப்படிச் சொல்ல முடியாது. அவர் தொழிலாளர்களைக் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியம் இருக்கு'' என்றார் அருள்ராஜ். ''வயசுக் காலத்திலே நீங்க கவலையற்று நிம்மதியா இருக்கலாம்னு பார்க்கறீங்க. இப்ப உங்களுக்கு இருக்கிற பிரச்னைகளையெல்லாம் தொழிலாளர்த் தலையிலே சுமத்தறீங்க. அதைத் தாங்கிக்கிற சக்தி தங்களுக்கு இருக்கான்னு அவங்க யோசிக்க வேண்டாமா? முதல் தேதி பிறந்தா சம்பளம்னு கவலையற்று இருந்த அவங்களுக்கு இப்போ எல்லாப் பொறுப்பையும் ஏற்கணும்னு யோசனையா இராதா?''

''தொழிலகமே அவங்களுக்குச் சொந்தமான பிறகு பிரச்னைகளுக்குப் பயந்தால் முடியுமா?''

''பயப்படறாங்களா, இல்லே பிரச்னைகளைச் சந்திக்கத் துணியறாங்களா என்பது இப்போ காளமேகம் திரும்பி வந்தா புரிஞ்சு போறது'' என்றார் அருள்ராஜ்.

வைத்தியலிங்கம் நிலை கொள்ளாமல் குறுக்கும் நெடுக்குமாகத் தம் அறையில் அலைந்தார். ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகம் போலிருந்தது அவருக்கு. ஒரு வழியாகக் காளமேகம் மறுபடியும்அறைக்குள் நுழைந்தபோது அடக்கமாட்டா ஆர்வத்துடன், ''என்ன? என்ன முடிவு செய்தீங்க?'' என்று கேட்டார். ''ரிஜிஸ்திரார் ஆபீஸுக்குப் புறப்படலாமா?''

''ஸாரி ஸார்! உங்க யோசனையைத் தொழிலாளிங்க நிராகரிச்சுட்டாங்க'' என்றார் கான மேகம்.

''என்ன! ஏன்? ஏன்?''

''இது முதலாளி வர்க்கத்தின் ஓர் ஏமாற்று வேலைன்னு அபிப்பிராயப் படறாங்க ஸார்''

''ஏமாற்று வார்த்தையா?'' என்று படபடத்தார் வைத்தியலிங்கம். ''இந்த டாக்குமெண்ட்டைப் படிச்சுப்பாருங்க கானமேகம். நான் மட்டுமில்லே; என் மகன், மகள் எல்லாரும் கையெழுத்துப் போட்டிருக்காங்க.''

''அதெல்லாம் சரி ஸார்! கம்பெனி பிரமாதமா, லாபகரமா நடந்தபோது தொழிலாளிங்களைக் கூப்பிட்டுத் தொழிலகத்தை நன்கொடையா கொடுத்தீங்களா? அப்போ, கிடைச்ச லாபத்தை யெல்லாம் சுருட்டிக் கிட்டுப் போய் அனுபவிச்சீங்க. கணக்கிலே லாபத்தைக் குறைச்சுக் காட்டிப் பணத்துக்கு வடிகால் ஏற்படுத்திக்கிட்டுப் போனீங்க. இப்ப உங்க மகன் வந்து மிஸ் மானேஜ் பண்ணி கம்பெனியை ஏக நஷ்டத்துக்கு உள்ளாக்கிட்டான். எக்கச்சக்கமா கடன் ஏறிப் போச்சு. இப்ப வந்து தொழிலாளர்களுக்கே தொழிலகத்தை நன்கொடையாக் கொடுத்துடறேன்னு என்ன அர்த்தம்? உங்களுடைய தவறுகளால் நேர்ந்த தொல்லைகளையும் பாரங்களையும் எங்க தலையிலே சுமத்திடப் பார்க்கறீங்க. நாங்க ஏமாற மாட்டோம். உங்க நன்கொடை எங்களுக்குத் தேவையில்லே. செய்யும் வேலைக்கு ஏற்ற ஊதியம்தான் கேட்கிறோம். நியாயமான அளவில் இருபது சதவீதம் போனஸ்தான் கேட்கிறோம். அதைக் கொடுத்துட்டு லாக் அவுட்டை நீக்குங்க!''

இந்தத் தாக்குதலைச் சற்றும் எதிர்பாராத வைத்தியலிங்கம் திகைத்து நின்றார். ஆவேசத்துடன் குற்றம் சாட்டிப் பேசிய கானமேகம் பதிலை எதிர்பார்த்து அசைவற்று நின்றார். அருள்ராஜ் சொல்லி முடியாத சோகத்துடன் தலை குனிந்து நின்றார். வெளியேயிருந்து கோஷங்கள் கிளம்பி வந்து அறைக்குள் புகுந்து நிறைத்து வைத்தியலிங்கத்தை உயிரோடு வைத்துச் சுற்றிச் சுவர் எழுப்பிச் சமாதி கட்டுவது போல் சூழ்ந்தன.

''பசப்பு வார்த்தை பேசாதே!
பச்சைப் புள்ளையாய் நினைக்காதே!
பொறுப்பைத் தட்டிக் கழிக்காதே!
வெறுப்பை வளர்த்துத் தொலைக்காதே!
வைத்தியலிங்கம்... ஒழிக!
வஞ்சகன் வைத்தியலிங்கம்... ஒழிக!
வயிற்றிலடிக்கும் வைத்தியலிங்கம்... ஒழிக!''

ஒவ்வொரு வார்த்தையும் ஓராயிரம் உலக்கைகளாக மாறி ஒரே சமயத்தில் தம் இதயத்தைத் தாக்குவது போல ஒரு வலியை உணர்ந்தார் வைத்தியலிங்கம். வேதனை தாங்காது அவர் இரு கரங்களாலும் நெஞ்சைப் பற்றிய போது அக்கரங்களில் இருந்த நன்கொடைப் பத்திரம் மடங்கிக் கசங்கி, வியர்வையுடன் கலந்து நைந்து குப்பையாகியது.

அவர் தடுமாறுவதைக் கண்ட அருள்ராஜ் பதறித் துடித்தவராக ஓடிவந்து ''ஸார்! ஸார்!'' என்று அலறியபடியே அவரைத் தாங்கிக் கொள்ள முயன்றார்.

''என்னைத் தொடாதே அருள்'' என்று கொஞ்ச நஞ்சம் மிச்சமிருந்த தெம்பையெல்லாம் திரட்டிக் கூவினார் வைத்தியலிங்கம். ''எனக்கு உதவி செய்யாதே! என்னைச் சாக விடு! என் ஆணவத்துக்கு விழுந்த அடி இது! இந்தத் தடவை நான் உயிர் பிழைக்கக் கூடாது! பிழைக்கவே... கூ... டா... து!''

துடிதுடித்துத் தடால் என்று தரையில் விழுந்தார் வைத்தியலிங்கம்.

சிலையாகியிருந்த கானமேகம் பிரமை நீங்கியவராக, ''அருள்! என்ன ஸார் ஆச்சு, வைத்தியலிங்கத்துக்கு? ஹார்ட் அட்டாக்கா?'' என்று பரபரப்புடன் கேட்டார்.

''இல்லே ஸார் இது ஹார்ட் அட்டாக் இல்லே; ஹேட் அட்டாக்'' என்றார் அருள்ராஜ். ''அன்பும் சகிப்புத் தன்மையும் நிலவுவதற்குப் பதில் வெறுப்பும் பொறாமையும் வளர்ந்து விட்ட உலகிலே வாழப் பிடிக்காம அவர் போயிட்டார். புண்ணியவான். நான் மகாபாவி! இன்னும் வாழ்ந்துக்கிட்டிருக்கேன்'' என்று நாத்தழுதழுக்கக் கூறிவிட்டுக் 'கோ'வென்று கதறினார் அருள்ராஜ்.

முற்றும்

24ம் பக்கம் பார்க்க

6 X 6 ஓம்

திருமுருக கிருபானந்தவாரியார் ஆறு புனித நதிகள் பற்றிக் கூறுகிறார்:

கங்கை: கங்கா ஜலம் எந்தக் காலத்திலும் கெட்டுப் போகாதது. இரும்பு சக்தி அதிகமானது. அதில் நீராடினாலும், அதைப் பருகினாலும் நோய்கள் நீங்கி வலிமை வரும். இது



இமயத்தில் பல்வேறு பிரிவுகளாக ஓடுகிறது. இதனால் கங்கை ''சகஸ்ர முக கங்கை'' எனப் பெயர் பெற்றுள்ளது. கேதாரத்தில் மந்தாகினி என்றும், பத்ரியில் அளகா நந்தி என்றும் பெயர் உண்டு. இந்த இரு நதிகளும் ருத்திரப் பிரயாகை என்ற இடத்தில் கூடுகின்றன.

1961 ஆம் ஆண்டு ருத்திரப் பிரயாகைக்குச் சென்றபோது விடியற்காலை கடும் குளிரில் பல படிகள் இறங்கிச் சங்கமத்தில் நீராடினேன். ஓம்கார சப்தத்துடன் நதி இமயத்திலிருந்து குதித்துக் கொண்டு செல்கிறது. பனி உருகி நதியாக வருவதால் தீர்த்தம் பளிங்கு போல் விளங்குகின்றது. நான் வழிபடும் வயலூர் முருகனை அங்கு வைத்து மந்தாகினியுடன் என் கண்ணீரோடும் அபிஷேகம் செய்தேன்.

யமுனை: யமுனையும் கங்கையும் கூடும் இடம் பிரயாகை. அந்த இடத்தை அலகாபாத் என்கிறார்கள். பழங்காலத்தில் அதை ''பிரதிஷ்டானபுரம்'' என்று சொன்னார்கள். துஷ்யந்தன், சகுந்தலை, வாழ்ந்த இடம் இது. இங்கே கங்கை வெண்மையாகவும் யமுனை கருமையாகவும் பார்வதி பரமேஸ்வரான் போலக் காட்சி கொடுத்துச் சேருகின்றன. அந்தர்வாகினியாக சரஸ்வதி நதி சேர்வதாகச் சான்றோர்கள் கூறுகிறார்கள். இது ''இடா, பிங்கலை, சுகமுனை, என்ற மூன்று நாடிகளும் சேர்கின்ற தத்துவத்தைக் குறிக்கிறது. பலப் பல சித்தர்களும், அரசர்களும், முனிவர்களும் இருந்த புனிதமான இந்தச் சங்கமத்தில் நீராடினேன்.

சரஸ்வதி: யாத்திரை செல்பவர்கள் பலர் சரஸ்வதி நதியைச் சந்திப்பதில்லை. உதய்பூர் போகும் தனி ரயிலில் சென்று சித்பூரில் இறங்க வேண்டும். சித்பூர் என்பது மாத்ரு கயா என்று பெயர் பெறும். இங்கேதான் தாயாருக்குச் சிராத்தம் செய்ய வேண்டும். இங்குதான் தெளிவாகவும், நிதானமாகவும் ஓடிக் கொண்டிருக்கிற சரஸ்வதி நதியில் சரஸ்வதி ராகம் பாடிக் கொண்டே நீராடினேன். சப்த நதிகளில் ஒன்றான இந்நதியில் மூழ்குவோர் சரஸ்வதி தேவியின் அருளைப் பெறுவார்கள்.

கோதாவரி: இதுவும் ஏழு புண்ணிய நதிகளில் ஒன்று. ''நாசிக் பஞ்சவடி'' என்ற நகரிலிருந்து 18 மைல் சென்றால் ''திரியம்பகம்'' என்ற தலம் உள்ளது. அது பன்னிரண்டு ஜோதி லிங்கங்களுள் ஒன்று. அங்கிருந்து எழுமைல் மலைமேல் ஏற வேண்டும். அங்கு கௌதமர் ஆசிரமம் இருக்கிறது. அந்த இடத்தில் கண்டுவிரல் கனத்தில் கோதாவரி உற்பத்தியாகிறது. அது ஒரு சிறு குளத்தில் தேங்கிப் பின்னர் பெரு நதியாகமாறி ராஜமகேந்திரத்தில் கப்பல் மிதக்கும் அளவில் இரண்டு மைல் அகலமுள்ளதாகக் கடலில் சேர்கின்றது. இது மகான்கள் பிறக்கும்போது சிறிய அளவிலிருந்து பின்னர் உலகம் போற்றும் அளவுக்குப் பெருமையில் விரிவு அடைகின்ற உண்மையை உணர்த்துகின்றது. கோதாவரிக் கரையில் ''பஞ்சவடி'' என்ற தபோவனத்தில் ராமச்சந்திர மூர்த்தி பல காலம் தவம் செய்தார். பெரும் புகழ் பெற்ற பத்ராசலம் போன்ற பல தலங்கள் இந்தக் கோதாவரிக் கரையில் உள்ளன.

நர்மதா: எல்லா நதிகளும் கீழ்த்திசை நோக்கி ஓட, நர்மதை மட்டும் மேல் திசை நோக்கி ஓடுகிறது. மற்ற நதிகள் எல்லாம் பெண் நதிகள், ஆனால் நர்மதை மட்டும் ஆண் நதியாகும். நதிகளுக்கு நாயகன் என்றும், கங்கையைவிடப் புனிதமானது என்றும் சான்றோர் இதனைக் கூறுகிறார்கள்.

சப்த நதிகளுள் ஒன்றான நர்மதா நதியில் பாணாசுரன் என்ற சிவபக்தன் ஆயிரம் சிவலிங்கங்களை ஆயிரம் கைகளால் தினமும் பூசித்து சிவபதம் பெற்றான். அவன் பூசித்த லிங்கங்களை ''பாண லிங்கம்'' என்று இப்போதும் அடியார்கள் வழிபடுகிறார்கள்.

கார்த்திகை சோமவாரத்தில் நான் உபவாசம் இருந்து, ஓம்காரம் என்ற சிவஸ்தலத்தில் நர்மதையில் நீராடி, லிங்க வடிவினரான ஓம்காரேஸ்வரரை நீராட்டி, வில்வம் சூட்டி, வழிபாடு செய்தேன்.

காவேரி: புண்ணிய ஏழு நதிகளுள், ஆறு வடக்கே ஓட, காவேரி மட்டும் தான் தெற்கே ஓடுகிறது. காவேரி நதிக்கரையில் எண்ணிலா சிவ, விஷ்ணு, தலங்கள் சோழ நாட்டில் விளங்குகின்றன. இந்த நதியில் பொன்னின் ஆற்றல் இருப்பதால் ''பொன்னி'' என்றும் புகழ் பெற்றது. காவேரி கடலோடு கூடும் இடம்தான் காவேரிப்பூம் பட்டினம். இந்த நதியின் புண்ணியத் துறைகள் பலவற்றில் புண்ணிய காலங்களில் நான் நீராடி மகிழ்ந்துள்ளேன்.

பேட்டி: 'சிக்கி''

பலமான
உங்கள் நல்லெண்ணம்
அளித்தது
நலமான எங்கள் பயணம்

இரண்டு லட்ச ரூபாய்கள் மட்டும் மூலதனமாகக்கொண்டு, 1954-ல் துவக்கப்பட்ட சுந்தரம் பைனான்ஸ், இன்று அதிக எண்ணிக்கையுள்ள பங்குதாரர்களுடன் தவணை முறைப் பண உதவிக் கம்பெனிகளில் இந்தியாவிலேயே மிகப் பெரிதாக விளங்குகிறது. அதனுடைய இந்த வியக்கத்தக்க வளர்ச்சி தன்னை முழுமையாகப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டதன் மூலம் பெற்ற நம்பகத் தன்மையின் பயனாகும். சொல்லைவிடச் செயலில் உறுதிகொண்ட சுந்தரம் பைனான்ஸ் வெள்ளி விழாக்காணும் இத்தருணத்தில் "உங்களுக்கு நன்றி" என இரண்டே சொற்களில் அதன் நன்றிப் பெருக்கைத் தெரிவித்துக் கொள்கிறது.

முதன் முதலில் நாங்கள் எடுத்துக் கொண்ட உறுதிமொழி—"வாடிக்கையாளர்களின் சேவையில் முழுமையான ஈடுபாடு". 25 ஆண்டுகளுக்குப் பிறகும் எங்கள் நிறுவனத்தின் இந்தக் கொள்கையில் எந்தவித மாறுதலும் இல்லை.

பண உதவி மட்டுமல்ல, மனமுவந்த பணியும்கூட

எங்களுடைய எளிய நிர்வாகச் செயல்முறைகள் மூலம் பண உதவி விரைவாகக் கிடைக்கிறது. நாங்கள் நீடித்த தவணைக் காலங்களை அளிக்கிறோம். அத்துடன் தொழிலுக்குத் தேவைப்படும் சீரிய சேவைகளையும் அளிக்கிறோம்

மோட்டார்த் தொழிலுக்கு மேலும் ஒரு ஊட்டம்

சமீப காலத்தில், பல தடவைகள், நாங்கள் எங்கள் பைனான்ஸ் கட்டணங்களைக் குறைத்திருக்கிறோம். இதன் பலன்? போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ள பலர் தாங்கள் விரும்பும் வண்டிகளை நியாயமான கட்டணங்களில் அடைந்து, சீரான வருவாயும் கிடைக்கப் பெற்றனர்.

சுந்தரம் பைனான்ஸ், மிக அதிகமான அளவு வேலை வாய்ப்பளிக்கும் இந்தத் தொழிலுடன் இணைந்து, இதன் துரிதமான முன்னேற்றத்தில் பங்கு கொள்வதைப் பெருமையாகக் கருதுகிறது.

உங்கள் நல்லெண்ணம்: எங்கள் மிகப் பெரிய சொத்து.


போக்குவரத்துத் தொழிலின் வளர்ச்சிக்காக நாங்கள் தொடர்ந்து பணியாற்றி வந்துள்ளோம் என்றாலும், நீங்கள் எங்கள் மீது அளவு கடந்து வைத்துள்ள நம்பிக்கையும், நல்லெண்ணமும்தான் எங்கள் வளமைக்குக் காரணம் என்பதை மறக்க மாட்டோம்.

இன்றைக்கு, எங்களுடன் 6000க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் தொடர்பு கொண்டுள்ளனர். அவர்களில் பலர் பல ஆண்டுகள் எங்கள் வாடிக்கையாளர்களாகத் தொடர்ந்து வருகின்றனர். அதுமட்டுமல்ல, பொது மக்களில் 15,000க்கும் மேற்பட்டோர் தங்கள் சேமிப்புகளை எங்களிடம் டெபாசிட் செய்துள்ளனர்.


உங்கள் சேவையில் 25 ஆண்டுகளைக் கடக்கும் இந்த நேரத்தில், இனிவரும் ஆண்டுகளிலும் இதே போல நாங்கள் இயன்ற அளவிற்குச் சிறப்பாகப் பணியாற்றுவோம் என உறுதி கொள்கிறோம்.

உள்ளம் நிறைந்த இத்தருணத்தில் நலமான எங்கள் பயணத்திற்குப் பலமாக அமைந்த உங்கள் நல்லெண்ணத்தைக் கருதி "உங்களுக்கு நன்றி" எனக் கூறுகிறோம்.

மொத்த சொத்துக்கள்
(ரூ. லட்சங்களில்)




தவணை முறையில் வரவேண்டிய
மொத்தத் தொகைகள்
(ரூ. லட்சங்களில்)



சுந்தரம் ஃபைனான்ஸ் லிமிடெட்

180, மவுண்ட் ரோடு, சென்னை-600 006

மற்ற அலுவலகங்கள்: பங்களூர், கோழிக்கோடு, கண்ணனூர், கோயமுத்தூர், எர்ணாகுளம், கோட்டயம், கர்னூல், மதுரை, மைசூர், நெல்லூர், பாண்டிச்சேரி, கொல்லம், சேலம், செகந்திராபாத், திருநெல்வேலி, திருச்சூர், திருச்சி, திருவனந்தபுரம், விஜயவாடா, விசாகப்பட்டினம்.



SFI/524

பாட்டிமார்களும் பேத்திமார்களும்

ஜெயகாந்தன்

13. சகோதரர்கள் சண்டை!

பெரிய வீட்டுத் திண்ணையில் பிரப்பம் பாய் விரித்துப் பெரியசாமி கால்மேல் கால் போட்டு உட்கார்ந்திருக்கிறான். அவனுக்குப் பின்னாலுள்ள அறைச் சன்னலில் ஆர்வமும் ஆவலும், ஆத்திரமும் பதற்றமும் மாறி மாறிப் பிரதிபலிக்கிற பெண்களின் முகங்கள் தெரிகின்றன: ஒரு முகத்தைத் தள்ளிவிட்டு இன்னொரு முகம் வந்து பார்க்கிறது. எதிர் வீட்டுத் திண்ணையில் அவ்வையாரம்மாள் உட்கார்ந்து சிந்தை பூராவும் இங்கே கவிய சிவநாமாவளியை ஜபித்துக் கொண்டிருக்கிறாள்.



சாமியார் முன்னே வர அவரைப் பின் தொடர்ந்து சிங்காரமும் வைத்தியும் வருகிறார்கள்.

''விசுவாமித்திரரு கூட்டிக்கினு வரான் பாரு — ராமலட்சுமணருங்களே'' என்று கேலியாக மங்களத்தின் செவிகளில் — அவள் சந்தோஷப்பட்டுக் கொள்ளட்டும் என்பதற்காகப் பொய்யாக எரிச்சல் பட்டுக் கொள்ளுகிறாள் காந்திமதி.

''இந்தப் பையனைப் பாரேன் நல்ல பாம்புதான் படமெடுத்து ஆடுதுன்னு, நாக்குப் பூச்சியும் கூட சேர்ந்து ஆடற மாதிரி சிங்காரத்தோட சேர்ந்துக்கிட்டுப் பெரியவங்க சின்னவங்கன்னு மரியாதை இல்லாமல் என்ன பேச்சுப் பேசறான் தெரியுமா இந்தப் பையன் வைத்தி?'' என்று மோவாயில் கையூன்றி அதிசயித்தாள் காந்திமதி.

சாமியார் வந்து வழக்கம் போல் வீட்டுப் படிக்கட்டில் முழங்கை ஊன்றிச் சாய்ந்து உட்கார்ந்தார். சிங்காரம் திண்ணைத் தூணில் சாய்ந்து கொண்டு நின்றான்.

''உக்காரு தம்பி — காலைப் பலகாரமெல்லாம் ஆச்சா?'' என்று உபசாரமாகக் கேட்டான் பெரியசாமி.

''ஆச்சு.'' என்று ஒரு சொல்லில் பதில் கூறிய சிங்காரம் உட்காராமல் நின்று கொண்டே ''இப்படியே நின்னு பேசலாம். காந்திமதி அக்காகிட்டே நேத்து எல்லா விஷயமும் சொல்லி அனுப்பிச்சேன்.. சொல்லிச்சா இல்லே? அது விஷயமா நீங்க என்ன முடிவு பண்ணியிருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கிட்டுப் போகத்தான் வந்தேன். எனக்கு உக்கார நேரமில்லே'' என்று அண்ணனிடம் பேசிக் கொண்டே ஏதோ தலை போகிற அவசரக் காரியம் இருப்பதைப் போல் முருகேசனைத் தேடினான் சிங்காரம். ''எங்கே முருகேசன்? அவனை வண்டி கட்டிக்கிட்டு இங்கேயே வரச் சொல்லு. இப்படியே போய் விட்டு வந்துடலாம்'' என்று அதிகாரக் குரலில் இரைந்து கூவினான் சிங்காரம். முருகேசன் அவ்விடத்தில் இல்லாததால், இன்னொரு வேலையாள் சிங்காரத்தின் [illegible] உத்தரவைச் சுமந்து கொண்டு முருகேசனைக் கூவி அழைத்தவாறு ஓடினான்.

''ஏ! தம்பி எல்லா விஷயத்திலேயும் ரொம்ப அவசரமாத்தான் இருக்காரு'' என்ற பெரியசாமியின் ஏகத்தாளமான முனகல் குரல் சிங்காரத்தின் செவியில் விழுந்தது. உள்ளிருந்து காந்திமதியோ, மங்களமோ, எந்தப் பொட்டைச் சிறுக்கியோ 'களுக்'கென்று சிரித்த சப்தமும் கேட்டது.... சிங்காரத்தின் கண்கள் கணப்பொழுதில் கோபத்தால் சிவப்பேறின.

''உங்களுக்கே தோணியிருக்கணும் ... உரியவன் கிட்டே ஒப்படைக்கணும்னு!.... கல்யாணம் பண்றதுக்கு மட்டும் ஏற்பாடு பண்ணீங்க! உயில்படி சொத்தை ஒப்படைக்கிற விஷயமா பேசாமல் இருக்கீங்க! தம்பிக்கு அவசரமா, நிதானமாங்கறதெல்லாம் அநாவசியமான பேச்சு! மரியாதைக்கு நல்லதில்லே'' என்று சூடாகச் சொன்னான் சிங்காரம்.

வைத்தி ஏற்கெனவே ஒரு காரணமும் இல்லாமல் முறைத்துக் கொண்டு பெரியண்ணன் பக்கம் முகம் திரும்பாமல் முறுக்கிக் கொண்டு நின்றான். அவன் அணிந்திருந்த சிங்காரத்தின் உடைகளைப் போலவே இந்த முறுக்கும் விறைப்பும் வைத்திக்குப் பொருத்தமாயில்லை.

''தம்பி .... சிங்காரம் ... நீ உயிலைப் பத்திப் பேசினதனாலே சொல்றேன் ... உயிலில் இருக்கற வாசகத்தைச் சொல்றேன் கேளு... ஞாபகம் இல்லேன்னு போயி நல்ல புத்தியோட இன்னொரு தடவைபடிச்சுப்பாரு. சிங்காரமும் வைத்தியநாதனும் மைனர்களாயிருப்பதால், அவர்கள் மேஜர்களாகும் வரை எனது மூத்த மகன் பெரியசாமி இதையெல்லாம் பாதுகாவல் பண்ணி ஒப்படைக்கணும்னு தான் எழுதியிருக்கு. வைத்தியநாதனுக்கு வயசு வர இன்னும் ரெண்டு வருஷமிருக்கே?.... அதுக்குள்ளே உனக்கேன் இவ்வளது அவசரம்? பதற்றம்?''

''நீங்க இப்படியெல்லாம் சால்ஜாப்பு சொன்னா உங்க மேலே எங்களுக்குச் சந்தேகம் வருது....'' என்று சிங்காரம் சொல்லிக் கொண்டிருக்கும் போது பொறுமை இழந்த வைத்தி ஓடி வந்து பெரியசாமியின் எதிரே நின்று கொண்டு கத்தினான்.

''சந்தேகமா? உன் மேலே எங்களுக்கு நம்பிக்கையில்லே! நீ எல்லாத்தையும் கொண்டு போயி தாசித் தெருவிலே ஒழிச்சுடுவே!'' என்று ஆவேசம் வந்தது போல் ஆடினான். பெரியசாமிக்கு வந்த ஆத்திரத்தில் எழுந்து இரண்டு பயல்களையும் இழுத்துப் போட்டு அறையலாமா என்று இருந்தது... பல்லைக் கடித்துத் தனது உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டான்.

''டேய் மடையா, நீ வாயைத் திறக்கக் கூடாதுன்னு சொல்லியிருந்தேன் இல்லே.. போடா அந்தப் பக்கம்....'' என்று சிங்காரம் வைத்தியை ஆவேசமாக இழுத்தான். தொடர்ந்து பெரியசாமியின் முன்னே ஆள்காட்டி விரலை நீட்டி எச்சரிப்பது போல் சொன்னான்:

''இதோ பாருங்க... அப்பா இருந்த காலந் தொட்டுத் தொடர்ந்து வந்துகிட்டிருக்கிற கோவம் இது. இந்தக் குடும்பத்தோட உங்க உறவு யாருக்கும் பிடிக்கலே... நீங்களா அப்பா இறந்ததும் இங்கே

மேலட்டை:

உடையில் நவீனம்; இசையில் கர்நாடகம்!

குமாரி பூர்ணிமா சல்வார் கமிஸ் எல்லாம் அணிந்து மிகவும் மாடர்னாகத் தோற்றமளித்தாலும் இசையைப் பொறுத்தமட்டில் கர்நாடக சங்கீதம் தான் அவருக்கு ரொம்பப் பிடிக்கும் என்பது பக்கத்தில் உள்ள தம்பூராவைப் பார்த்தாலே தெரியவில்லையா?

வண்ணப்படம் எடுத்தவர்: பிரபு சங்கர்

வந்து உக்காந்துக் கிட்டீங்க! அதனாலே தான் நானும் சின்னம்மாவும் தனியாப் போனோம்... அப்புறம் உங்களுக்குப் புரியலே நிலைமை! அதனாலே எல்லாத்தையும் எவ்வளவு சீக்கிரம் ஒப்படைச்சிட்டு ஒதுங்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் நீங்க ஒதுங்கிக்கிறதுதான் மரியாதை!'' என்று அவன் என்னவோ மேலும் யோசித்துக் கொண்டிருந்த போது எதிர் வீட்டுத் திண்ணையிலிருந்த அவ்வையாரம்மாள் ஒரே இரைச்சலாக இருமி இருமிக் குரல் காட்டி, நான் சொன்ன விஷயத்தை நினைவூட்டினாள்.



''அப்புறம்?... இத்தனை வருஷமா எங்க ரெண்டு பேர் சொத்திலிருந்தும் கிடைச்ச வருமானத்துக்கு ஒரு கணக்கும்—அந்தத் தொகையும் வள்ளிசா வேணும்'' என்றான் சிங்காரம்.

பெரியசாமிக்கு இப்போது எதிரில் நிற்பது தன் உடன்பிறந்த சகோதரர்களாகத் தெரியவில்லை. ஏதோ கடன் காரர்களைப் போலவும் அந்நியர்களைப் போலவும் இவர்கள் இப்படி நடந்து கொள்ளுவதைப் பார்க்க ஆத்திரமும் அவமானமும் எல்லை மீறியது.

பெரியசாமியின் இரண்டு பையன்களும் தங்கள் தகப்பனைச் சித்தப்பன்மார் இருவரும் வந்து சண்டை பிடிக்கிறார்கள் என்ற திகிலுடன் வந்து சிங்காரத்தைப் பார்த்து ஏங்கி நின்றனர். சிங்காரம் அந்தக் குழந்தைகளைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

பெரியசாமி நெஞ்சில் அடைக்கின்ற துயரத்தையும் அவமானத்தையும் விழுங்கிக் கொண்ட செருமலுடன் சொன்னான்:

''தம்பிகளே! நீங்க ரெண்டு பேரும் என்னை மிரட்டிக் காரியம் சாதிக்க நினைச்சிங்கன்னு அதுக்கான பாடத்தை நீங்க கத்துக் கத்தான் வேணும்.... தம்பி சிங்காரம், நீ ரொம்பத்தான் பெரிய மனுஷன் ஆயிட்டே! அடாடா, என்ன சட்ட நுணுக்கங்கள் எடுத்துச் சொல்றே! உன் வாதத் திறமையைப் பார்க்கணும்னு எனக்கும் ரொம்ப ஆசையாயிருக்கு... இங்கேயிருந்து நேரே வடக்கே ஒரு கல்லு தூரம் போனா வெள்ளைக்காரன் நீதி வழங்கற கோர்ட்டு இருக்குது. அதைச் சுத்திலும் வக்கீலுமாரு ஐயருங்க இருக்காங்க... அவங்க கிட்ட போயி யோசனை கேட்டு என் மேலே வழக்குப் போட்டு உனக்குச் சேர வேண்டிய பாகத்தைக் கோர்ட்டிலேயே வாங்கிக்கலாம்... எனக்கும் வேலை இருக்கு..'' என்று எழுந்து தெருவிலிறங்கி விடுவிடென்று நடக்க ஆரம்பித்தான் பெரியசாமி.

எல்லாரும் ஒருவரை யொருவர் பார்த்துப் பரக்கப் பரக்க விழித்தனர். முருகேசன் சதங்கை ஒலி கெக்கலிக்க வில் வண்டியைக் கொணர்ந்து பெரிய வீட்டு வாசலில் நிறுத்தினான். (தொடரும்)



விக்கிரமன் பொன் விழா

அமுதசுரபி ஆசிரியரும் பல சரித்திரக் கதைகள் மூலம் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் இதயம் கவர்ந்தவருமான திரு விக்கிரமன் பொன் விழா வானது, கவியரங்கம் கருத்தரங்கம் கொண்ட இலக்கிய விழாவாகவே தொழிலதிபர் திரு நா. மகாலிங்கம் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. விழா மலரும், எழுத்துத்துறை தொடர்பான பல அரிய கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்திருக்கிறது. விழாக் குழுச் செயலாளர் டாக்டர் கிருஷ்ணஸ்ரீநிவாசன் நன்முயற்சியினால் சிறந்த இந்த விழாவில் விக்கிரமன் எழுதிய பல நூல்களும் வெளியிடப்பட்டன. விக்கிரமனின் நன்றியுரை ஒரு நகைச்சுவை விருந்தாக அமைந்து அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் நீந்தச் செய்தது. கல்கி வாசகர்கள் சார்பில் விக்கிரமனுக்குப் பல்லாண்டு கூறுகிறோம்.

'தர்மசங்கடம்' தம்பு!



குளோஸ் அப்

கோபாலய்யர்



● பழுத்த பழமாக உதிர்ந்த திரு கோபாலய்யர், லால்குடி திரு ஜெயராமனின் தகப்பனார், குரு, வழிகாட்டி எல்லாம். "கைக்கடிகாரம் போல் ஓசைப்படுத்தாமல் அமைதியாக நாம் நம் கடமைகளைச் செய்துகொண்டு போக வேண்டும்" என்பார். "வாட்டர் புரூப் என்பது போல் முகஸ்துதி புரூப், ஷாக் புரூப், பணத்தாசை புரூப்பாக விளங்க வேண்டும்!"

வீட்டுக்கு வருபவர்கள் யாரேனும் ஜெயராமனை ஒரேயடியாகப் பாராட்டிப் புகழ ஆரம்பித்தால், "ஜெயராமா! நீ ஏதோ அவசரக் கடிதங்கள் எழுத வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தாயே" என்று ஞாபகப்படுத்துவது போல் இடையில் புகுந்து விடுவார்.

"புகழ் பெற்ற வயலின் வித்வானின் தகப்பனாராக இருந்து கொண்டு நீங்கள் ஏன் இவ்வளவு ஒதுங்கி, அடக்கமாக இருக்கிறீர்கள்?" என்றும் "வேர் வெளியே தெரியக்கூடாது. மறைந்துதான் இருக்கணும்!" என்று கூறிச் சிரிப்பார்.

வயலின் தவிர மிருதங்கம், வீணை, புல்லாங்குழல் வாசிப்பார். தாமே வீணை, புல்லாங்குழல் ஆகியவற்றை மரபுப்படி தயாரிப்பார்.

ஆழ்ந்த முருக பக்தியுள்ளவர். கடைசிக் காலத்தில் எல்லாப் புலன்களும் அடங்கிவிட்ட நிலையிலும் திருப்புகழை மூன்று அடி பாடி நிறுத்தினால் நான்காவது அடியை அவர் வாய் முணு முணுத்தது!



திரு. சாண்டில்யன்

● இவருக்குத் தினமும் இரவு ஏழு மணி முதல் பதினொரு மணிவரை தான் படிக்கும் நேரம். எழுதுவது காலையில் நாலரை மணிக்குத் துவங்கும். எழுதி எழுதிக் குவித்துள்ள போதிலும் இவருக்கு எழுதுவதைவிட உயர் இலக்கியங்களைப் படிப்பதில்தான் மகிழ்ச்சி அதிகம்.

"யாராவது பணம் தந்து எழுதாமல் படித்துக்கொண்டிருங்கள் என்று சொன்னாலும் அதிலேயே வாழ்நாளைக் கழித்துவிடுவேன்" என்கிறார் இவர். பழக இனியவர். ஆனால் வாதப் போர் என்று வந்துவிட்டால் ஒருகை பார்க்காமல் விடமாட்டார். "நான் நம்பி வாழ்வது தமிழ் மக்களையும் தமிழ் மொழியையும் தான்" என்று சொல்லும் சாண்டில்யன் தேசிய விடுதலைப் போரில் பங்குகொண்டவர். கர்நாடக சங்கீதக் கச்சேரிகளும் சில நிகழ்த்தியதுண்டு.

விடுதலை கி. வீரமணி

● திரு. கி. வீரமணியிடம் சிகரெட் உட்பட எந்த வேண்டாத பழக்கமும் இடையாது. எப்போதாவது பார்க்கும் ஆங்கில அறிவியல் படங்களைத்தவிர சினிமா பார்ப்பதும் இல்லை.

ஈ.வே.ரா. பெரியாரின் சுயமரியாதைப் பிரசார இயக்கத்தில் ஈடுபட்டு அதிகாரபூர்வமாய்ச் சேலம் மாவட்டத்தில் 1944-ல் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது திரு வீரமணி பத்து வயதுச் சிறுவன்.

இப்போது திராவிடர் கழகப் பொதுச் செயலாளர். மாணவப் பருவத்தில் எந்த வகுப்பிலும் முதல் அல்லது இரண்டாம் நிலையிலேயே இருப்பாராம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ. ஆனர்ஸ் படிப்பில் சேருவதற்கு முதல் பருவக் கட்டணம் கட்டப் பொருளாதார வசதி இல்லை. மிகவும் தயக்கத்துடன் பெரியாருக்கு உதவி கேட்டுக் கடிதம் எழுதினார். எங்கோ சுற்றுப் பயணத்திலிருந்த பெரியார், குறிப்பிட்ட நாளில் பணம் இடைப்பதற்காகத் தந்தி மணியார்டரில் ரூபாய் 95-00 அனுப்பினார்.

பின்னர் முதலாவதாய்த் தேறித் தங்கப் பதக்கத்துடன் "அய்யா"விடம் சென்று நன்றி சொல்லப் போனபோது பெரியார் கூறியது: "அப்படியா? நான் பணம் அனுப்பிச்சேனா... இருக்கலாம். மறந்து போச்சு."

—வெல்லபால்



'புனரபி ஜனனம், புனரபி மரணம், புனரபி ஜனனீ, ஜடரே சயனம்...' எங்கோ இசைத் தட்டில் இசை மிதந்து கொண்டிருப்பது காதில் மோதுகிறது.

சூழ்நிலையையும் மீறி ஆட்கொள்ளும் சார்பு சக்தி!

ஆதி சங்கரர் உபதேசித்து விட்டுப் போய் விட்டார். ஆசா பாசங்களை அனுபவிக்காமல் சிறு வயதிலேயே ஒதுக்கி விட்டு சன்னியாசியாய் வாழ்ந்ததனுல் அவரால் தத்துவார்த்தமாக உபதேசிக்க முடிந்திருக்கிறது.

என்னுடைய தற்போதைய நிலையில், 'புனரபி ஜனனம், புனரபி மரணம்' என்ற தத்துவம் பேசிவிட்டுத் துக்கத்தை அடக்கிவிட முடியுமா?

காயத்ரி நெடுஞ்சாண் கிடையாக மல்லாந்து, வெறித்து, வெறுமையான பார்வையில்... சீச்சீ... பார்வையேது... சூன்யத்தில் கிடக்கிறுள்...

''சாரி மிஸ்டர் ரகு... ஷி இஸ் நோ மோர்...'' டாக்டர் நாடியைப் பிடித்துப் பார்த்து உதட்டைப் பிதுக்கி ஒரு மணி நேரத்துக்கும் மேலாகி விட்டது.

'யத்தா... என்னை விட்டுட்டுப் போயிட்டயே...' நாடியிலிருந்து கிளம்பிய ஓலம், வெடித்து, விம்மி தேம்பல்களாய், விக்கல்களாய், ஆழ்ந்த உள்மூச்சுக்களாய் உள்ளே இறுக ஆரம்பித்து விட்டன.

சாவின் தாத்பர்யம் புரியாமல், அதே சமயம் ஏதோ பெரிய அசம்பாவிதம் நடந்து விட்டிருக்கிறது என்று புரிந்த நிலையில் தாயின் புடவையைப் பிடித்து இழுத்தபடி 'அம்மா... அம்மா...'' என்று அழுது கொண்டிருந்த இரண்டரை வயது ஜானு, எவ்வித பதிலும் கிடைக்கப் பொருத நிலையில் என் லுங்கியைப் பிடித்துக்கொண்டு 'அப்பா...' என்று அழைக்கவும், என்னை என்னுள் அடக்கிக்கொண்டு ஜானுவை எடுத்துக் கொண்டேன்.

குழந்தையின் தழுவல் சற்று இறுகின துக்கத்தை மறுபடியும் கிளறிவிட மிகுந்த பிரயாசையுடன் அடக்கிக் கொள்ள முயல்கிறேன்.

சுற்றுப்புறம் கூடி விட்டிருந்தது. என்னையும் ஜானுவையும் பார்த்து எத்தனையோ 'த்க... த்க'க்கள்.

சென்ற 'வெட்டிங் டே'க்காக வாங்கிய நீல அமெரிக்கன் ஜார்ஜெட் புடவையும், அதற்கு ஏற்றாற்போல் கருநீல டெரிகாட்டனில் காலேஜ் மாணவிகள் போல் 'லோ கட்' பேஷனில் தைத்துக் கொண்ட ரவிக்கையுமாய்க் காயத்ரி நிர்மலமாய் எல்லாவற்றையும் ஒன்றுமில்லாததாக்கி விட்ட பெருமையில் கிடக்கிறுள்.

'யத்தா... என்னை ஏமாத்திட்டுத் தனியா தவிக்க விட்டுட்டுப் போயிட்டயே...' மறுபடியும் அவலம் அடிவயிற்றிலின்று கிளம்பித் தொண்டையைத் தாண்டி வரும்போது...

சீ... இந்தக் கூருத்து எதிரில் நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்...

ஆலகால விஷத்தை விழுங்கிய நீலகண்டன் போல் துக்கம் தொண்டைக் குழியிலேயே சிக்கி மாபாரமாய் அழுத்துகிறது.

''அத்திம்பேர் அழாதீங்கோ... அழாதீங்கோ...'' மச்சினன் கதறிக் கொண்டே என்னைத் தேற்றுவது போல் தன் துக்கத்திற்கு வடிகால் காண விழைகிறுன்.


''உங்க ஃபாதர் மதருக்கு டெலிகிராம் கொடுத்துட்டேளா... பிளேன்லே வருவாளா? எப்போ வருவா?'' யாரோ ஒருவர் என் மச்சினனைக் கேட்கிறுர்.

''டெலிகிராம் கொடுத்துட்டோம்... தொடர்ச்சியா மழை அடிக்கிறதுனுலே பிளேன் சர்வீஸ் சரியா யில்லையாம்... என்ன பண்றதுன்னே புரியலே...''

''சாருக்கு வேண்டியவா...''

''அத்திம்பேருக்கு ஒரு சிஸ்டர் மட்டும் தான். போபால்லே இருக்கா... அவா வர மாட்டா; லெட்டர் போட்டுக்கலாம்னு அத்திம்பேர் சொன்னுர்...''

''இன்னிக்கி வியாழக் கிழமையோன்னோ... எப்படியும் இன்னிக்கே எடுத்துடணும்... இல்லேன்னு 'தங்கு வியாழன் தன்னோட மூணு'ன்னு சொல்லுவா...'' எதிர் வீட்டுக்



காரர் என் மச்சினனிடம் சொல்வது காதில் விழுகிறது.

'ரொம்ப நல்லதாப் போச்சு... யத்தூனை இன்னிக்கு எடுக்காம தங்கும்படி வெச்சுடலாம்... தங்கு வியாழன் தன்றேடு மூணுன்றதுனுலே என்னையும் ஜானுவையும் தன்றேடு அழைச்சுண்டுடுவா...' என்று அந்த மனிதரிடம் சொல்ல நாத் துடிக்கிறது. அடக்கிக் கொள்கிறேன்...

காயத்ரியைப் பார்க்கிறேன்.

புன்னகைக்கும் போது அவளுக்குக் கீழ் உதடு சற்று சாய்வாகப் போகும். அது மாதிரி தற்போது அவளுடைய கீழுதடு . சற்றுச் சாய்ந்து இருப்பதைக் காணும்போது அவள் என்னைப் பார்த்துப் புன்னகைப்பதாக மனத்தினுள் வருடல்.

கேலிப் புன்னகையோ?

'யத்தூ! நீ ஒண்டி எனக்கு இல்லேன்னு ஆயிடுத்துன்னு ஒரு நிமிடம் கூட என்னாலே உயிரோட இருக்க முடியாது!' அப்படின்னு சொல்வேனே! நான் போய் ஒரு மணிக்கும் மேலாறதே... நன்னுத்தானே இருக்கேன்' —காயத்ரி என்னைப் பார்த்துக் கேட்கிறாளோ?

காயத்ரியைக் காதலித்த நாட்கள் என் நினைவில் படருகின்றன.

அவள் கல்லூரியிலும் நான் அலுவலகத்திலும் வேலை பார்த்துக் கொண்டிருந்த பருவத்தில் தான் எங்கள் காதல் அரும்பியது.

'பிடி.'யில் என்னுடன் தைரியமாக வரப் பயப்படுவாள். இருவரும் மட்டம் அடித்து விட்டு ஏதேனும் கிராமப்புற பஸ்ஸில் பிரயாணம் செய்தபடி பேசித் தீர்ப்போம்.

இம்மியளவு கூட அத்துமீறி நடப்பதற்கு அனுமதிக்க மாட்டாள்.

''ஒண்ணு வாழ்ந்தா ஒன்னோட வாழ்வேன். நீ இல்லேன்னு ஆயிட்டா அடுத்த நிமிஷம் எதையாவது முழுங்கிட்டு என்னையே இல்லேன்னு ஆக்கிண்டுடுவேன்'' என்பேன்.

''நான் இல்லேன்னு சாகணும்னு எழுதி வெச்சிருக்கா என்ன?''

''நீ இல்லேங்கற வேதனையோட சித்திரவதைப் பட்டுண்டு அப்படியாவது வாழணுமா?''

''உங்க ஆர்க்யூமெண்ட் சரியானதில்லே... சரி நான் வாழறதைத்தான் விரும்பறேன்!''

—வாழ ஆசைப்பட்டவள் போய்ச் சேர்ந்து விட்டாள். அவளில்லாமல் ஒரு கணம் கூட வாழ மாட்டேன் என்றவன் கல் மாதிரி முழுசாக இருக்கிறேன்.

கையிலேயே ஜானு தூங்கி விட்டிருந்தாள். மூலையில் பாய் போட்டு ஜானுவை விட்டேன்.

''ராகுகாலம் எமகண்டம் போயிடுத்து. ஏற்பாடுகளைப் பண்ணிடட்டுமா, யாராவது வர்றதுக்கு இருக்கா?'' சாஸ்திரிகள் முகத்தைச் சோகமாக வைத்துக் கேட்கிறார்.

காயத்ரியின் அருகில் போய் நான் உட்காருகிறேன் என்னைக் கண்டதும் காயத்ரியைச் சூழ்ந்திருந்த நாலைந்து சுற்று வட்டாரப் பெண்கள் விலகிப் போகிறார்கள். எல்லோருடைய கண்களிலும் ஆழ்ந்த சோகத்தின் பிரதிபலிப்பான கண்ணீர்த் தாரைகள்.



உயிருள்ள யத்ரா எனக்குள் மறுபடியும் படைவெடுக்கிறாள்.

என்னை மணந்து கொள்ளத் தன் பெற்றோர் ஒப்புக் கொள்ளவில்லை என்றதும் வீட்டை மீறி அவள்தான் முதலில் வந்தாள். எனக்குக் கூட உள்ளூற பயம்தான்.

திருநீர்மலையில் எளிமையாக நண்பர்கள் முன்னிலையில் மணந்து கொண்டோம். எனக்கான ஒரே உறவான அக்காவுக்கும் இதில் பிடித்தம் இல்லை. ஆனால் கல்யாணமான ஆறே மாதத்தில் காயத்ரியின் பெற்றோர்கள் மனம் மாறிச் சுமுகமாகி விட்டது.

ஞானுவை நிறைமாதம் சுமந்துகொண்டு கைநிறைய வளையலுடன் காயத்ரி இருந்த சமயம்.

''என்னு... தலைப் பிரசவம் எப்பவுமே ஒரு கண்டம்னுதான் சொல்லுவா... ஒரு வேளை குழந்தையை நல்லபடியா பெத்துட்டு நான் போயிட்டேன்னு...?''

''சீ... இது மாதிரி அசம்பாவிதமா ஏன் பேசறே? வேறே பேச்சே இல்லையா?''

''நெருப்புன்னு ஒண்ணும் வெந்துடாது...''

''யத்ரா... நீ மொதல்லே சப்ஜெக்டை மாத்து... 'நான் இல்லேன்னு... நான் போயிட்டேன்னு...' அப்படின்னு நீ இன்னொரு தடவை பேசினே நான் ரொம்பவும் பொல்லாதவனா இருப்பேன்.''

காயத்ரி தீர்க்கதரிசியோ அல்லது அவளது வாக்கில் சனி இருந்ததோ...?

ஞானுவுக்கு இரண்டு வயதான சமயத்தில் காயத்ரிக்கு 'ஜான்டீஸ்' வந்தது. உலகத்தில் எவ்வளவோ பேருக்கு வருகிறது... போகிறது... ஆனால் இவளுக்கு மட்டும்!

வந்தது. போனது போல் போக்குக் காட்டி மறுபடியும் வந்தது... கடைசியில் ரத்தச் சோகை என்று டாக்டர்கள் நிச்சயப்படுத்தி, அதிகப்படி ஆறுமாசமே உயிரோடு இருக்க முடியும் என்று உறுதிப் படுத்தின சமயம் –

அமுது, முழுவி ஆர்ப்பாட்டம் செய்தாள். ஸ்வாமி சன்னதியில் என்னைப் பிரமாணம் செய்யச் சொன்னாள்... ஞானுவைத் தவிக்க விட்டு நான் அவளைத் தொடர்ந்து விடக் கூடாதாம்... வேறு கல்யாணம் பண்ணிக் கொண்டு ஞானுவை நன்றாக வளர்க்க வேண்டுமாம்.

கற்பூரம் அணைத்துச் சத்தியம் செய்து கொடுத்த பின்புதான் அவளுக்கு நிம்மதி.

''சார்... எடுத்துடலாம்னு நெனைக்கறேன்... எல்லாம் ரெடியாயிடுத்து...'' சாஸ்திரிகள் காதில் மெதுவாகச் சொன்னதும் சூழ்நிலைக்கு மனம் திரும்புகிறது.

''யத்ரா... நா உன்னைப் போக விடமாட்டேன்... போக விடமாட்டேன்...'' அடக்கி வைத்திருந்த துக்கத்தைப் பீறிட விட்டுக் கதறுகிறேன்... ஊர்வலம் போய்... என் கையாலேயே நெருப்பு வைத்து... எல்லாமே முடிந்து வீட்டிற்கும் திரும்பியாகி விட்டது.

வீடு முழுக்க அமைப்பிக் கூடத்தில் விளக்கு.

''கார்த்தாலேந்து ஒண்ணும் சாப்பிடவே இல்லையே... ரூடா உப்புமா பண்ணி வெச்சருக்கேன்.'' பக்கத்து வீட்டு மாமி.

''எனக்கு ஒண்ணும் வேணாம்...''

''அது எப்படி... போனவளையே நெனைச்சுண்டு இருக்கறவா ஒடம்பைப் பாழாக்கிக்கறவா கெடையாது... ஞானுவுக்கு வேறேயார் இருக்கா...?'' என்கிறார் மாமியின் கணவர்.

''இப்போ சாப்பிடணும்னு இல்லே... வேணும்னா அப்புறமா சாப்பிடறேன்...'' என்றதும் இருவரும் போய்விடுகின்றனர்.

எத்தனை நாட்கள் சாப்பிடாமல் இருக்கப் போகிறேன்!

இன்று இல்லா விட்டால் நாளை சாப்பிடத்தான் போகிறேன்... எல்லோரையும் போல டிரஸ் பண்ணிக் கொண்டு ஒரு நாள் ஆபீஸ் போகத்தான் போகிறேன்... ஞானுவை ஒரு மாசம், ரெண்டு மாசம் மாமனார் மாமியார் வைத்துக் கொள்ளலாம்... பிறகு?... நான் தான் பார்த்துக் கொண்டாக வேண்டும்... ஞானுவுக்காக மனம் மாறி நானே இன்னொரு கல்யாணம் கூட பண்ணிப்பேனோ என்னவோ, யார் கண்டது? ஞானுவைக் கவனித்துக் கொள்ள என்ற சாக்கில் கல்யாணம் பண்ணிக் கொண்டு ஞானுவுடன் விளையாடத் துணை வேண்டும் என்கிற சாக்கில் வருபவள் மூலமாக இன்னொரு குழந்தையும் பெற்றுக் கொள்வேனோ என்னவோ யார் கண்டது?

யத்ரா.. உன்னை உன்னுக்குள்ளே புதைச்சுட்டு, எல்லாத்தையுமே நான் பழையபடி அனுபவிக்கத்தான் போறேன்... புது புது சுகங்கள்... புதுபுது துக்கங்கள்... எல்லாமே தான்!

இதெல்லாம் மனுஷ வாழ்க்கையின் பலஹீனங்களா? இல்லேன்னு பலங்களா?

புரியலையே!

SMALL ENTREPRENEURS!

IS MONEY YOUR MISSING LINK?

If you have the initiative and expertise to set up and operate a small scale enterprise, you can look to IOB for prompt assistance.

Come to IOB. We have great plans for you.

Indian Overseas Bank
Good people to grow with

தியாக வல்லபன்

விக்கிரமன்

அத்தியாயம் 15

வல்லபனின் உறுதி

அரிசிலாற்றங்கரை ஓரமாகச் சென்ற சாலையில், பெருமான் நம்பியும், வல்லபனும் குதிரைமீது அமர்ந்து சென்று கொண்டிருந்தனர். இன்னும் ஒரு காத தூரம் சென்றால் கூத்தனூரை அவர்கள் அடைந்து விடுவர். முதுபெரும் புலவரும் சோழ அரசவைப் புலவருமான ஒட்டக் கூத்தரின் இல்லத்துக்கு இருவரும் சென்று கொண்டிருந்தனர். சில நாட்களுக்கு முன்பு பெருமான் நம்பி அதே சாலைவழியே சென்றிருக்கிறார். இரவு நேரம். பிறைச் சந்திரனின் ஒளியில், துணைக்குக் குதிரை வீரன் ஒருவன் தீவர்த்தி ஒளி ஏந்தி வர அவர் விரைந்திருக்கிறார். அவர் சென்று சிறிது நேரம் கழித்துத்தான், சிவிகையில் முல்லையும் சோழ குலத்துக் குழந்தையும் வந்தனர். அரச சிவிகை அது. குழந்தையும் அரச குழந்தை. முல்லை பட்டாடை அணிந்திருந்தாள். அவள் முகத்தில் கவலைக்கோடுகள் இல்லை. பால் கொடுத்து வளர்க்கும் பொறுப்பேற்றிருந்த இளைய குழந்தை அவள் மடியில் துயின்று கொண்டிருந்தது.

'ஹோ ஹோ' 'ஹா ஹோ' என்று சிவிகை சுமப்பவர் எழுப்பும் ஒலி குழந்தைக்குத் தாலாட்டு பாடுவது போலிருந்தது. சிவிகை இப்படியும், அப்படியும் அசைவது தொட்டில் ஆட்டுவதைப் போலிருந்தது. இரு குழந்தைகளுள் முதலில் பிறந்த இரு வயது நிறைந்த குழந்தையை கேசவசுவாமி தாம் வளர்ப்பதாக ஏற்றுக் கொண்டு விட்டார். இரண்டு குழந்தைகளும் ஒரே இடத்தில் வளர வேண்டாம் என்பது முதல் அமைச்சரின் யோசனை. இரண்டாவது இளைய குழந்தையை, சோழ நாட்டு அரசவைக் கவிஞர் ஒட்டக் கூத்தர் தாம் வளர்ப்பதாக ஏற்றுக் கொண்டார்.

நிசிக்குச் சிறிது நேரம் முன்பு, பெருமான் நம்பி ஒட்டக் கூத்தர் வீட்டு வாயிற்கதவைத் தட்டினார்

பழங்கால வீடு. யானையும், குதிரையும், பல்லக்கும் சோழ மன்னர்கள் வேண்டுமளவுக்குப் பரிசாக அளித்திருந்தனர். அந்த ஊரையே கவிஞருக்குப் பரிசாக அளித்திருந்தார். மன்னர் இராஜராஜன். இராஜராஜனுக்குக் கூத்தர்பிரானிடம் மிகுந்த மரியாதை, அன்பு, பற்றுதல். எண்பது பிராயத்தையும் கடந்துவிட்ட அந்த நிலையிலும் அவரை ஆதரித்து மிக மரியாதையுடன் நடத்தி வந்தார். அந்த ஊருக்கே கூத்தனூர் என்று பெயரிட்டு இறையிலி கிராமமாக அளித்தார். கவிஞர் எந்தவிதக் கஷ்டமும் அடையாமல் நிம்மதியாக வாழ வழி செய்திருந்தார். கரியும், பரியும், பணியாட்களுமாக அவரது நலன்களைக் காக்க அரசாங்க அலுவலர்களையும் அளித்துக் கௌரவித்தார்.

கூத்தரும் மன்னர் இராஜராஜனிடம் மிகுந்த மரியாதையும் அன்புங் கொண்டார். இராஜராஜ னுலா பாடி வேண்டிய பொன் பரிசில் பெற்றார்.

தன்மகன்களுள் ஒருவரைப் பாதுகாத்து வளர்க்கத் தக்கவர் கவிஞரவர்களே என்று அரசர் கருதினார். மூத்த குழந்தையைக் கேசவசுவாமி ஏற்றது மிகவும் பொருத்தமுடையது என்று இராஜராஜன் கருதி, இளைய குழந்தையைக் கூத்தரிடம் ஒப்படைக்கும் யோசனையைப் பெரிதும் பாராட்டினார்.

நடுநிசியில் கூத்தர் வீட்டுக் கதவை உரிமையுடன் தட்டக் கூடியவர் பெருமான் நம்பி ஒருவரே. உறக்கம் கலைந்து எழுந்து வந்த கூத்தர் வாயிலில் சோழநாட்டு மாதண்டநாயகர் முதல் அமைச்சர் நம்பி நிற்பது கண்டு, வியப்படைந்து, தம் சோர்வும்



உறக்கக் கலக்கமும் மறந்து வரவேற்றார். சிறிது நேரத்தில் சிவிகையும் வந்து சேர்ந்தது.

அல்லியின் கரத்தில் தவழ்ந்த பச்சிளம் பாலகனை அரசுக் கவிஞர் கூத்தர் கண்டார்.

''அம்பலவாணா! உன் திருவிளையாடலை என்னென்று கூறுவேன். மூன்று பெருவேந்தர்கள் காலத்திலும் நான் பெருவாழ்வு வாழ்ந்துவிட்டேன். சோழ நாட்டு அரசிளங் குமரனை வளர்த்து ஆளாக்கும் வரையில் நான் வாழ்ந்தாக வேண்டும் என்பது உன் திருவுளமோ?'' என்று கூறிக் குனிந்து குழந்தையின் செவ்விதழில் முத்தமிட்டார்;

நம்பி மெல்ல முறுவல் பூத்து, ''அரசவைப் பெருங்கவிஞரே! மூன்று அரசர்களைப் பற்றி உலா பாடிய தாங்கள் இந்தக் குழந்தை வளர்ந்து பெரியவனான பிறகு உலா பாடும் வரை நீடுவாழ வேண்டும்'' என்று கூறினார்.

''எல்லாம் கலைவாணியின் அருள்'' என்று கூறிய கூத்தர், ''குழந்தையை மிகச் சிறப்பாக வளர்க்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஒரே ஒரு வீரனை மட்டும், சில ஆண்டுகள் கழித்து அனுப்புங்கள். வாள்வீச்சு, வேல் எறிதல், யானை — குதிரை ஏற்றம் கற்றுக் கொடுக்க'' என்றார்.

''ஆகா: தமிழுடன் ஆய கலைகளும் சோழ குலச் செல்வனுக்குக் கற்றுக் கொடுக்கும் கடமையை ஏற்ற தங்கள் இல்லத்தருகே போதுமான வீரர்கள் எப்போதும் இருப்பார்கள்'' என்றார்.

வல்லபனை அழைத்துக் கொண்டு குழந்தையைக் காட்ட வந்த நம்பி வழியில், சோழ நாட்டு அரசு அமைப்பைப் பற்றியும், உற்றவர்கள் விரோதிகள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்கள் அடையாளங்களையும் கூறி வந்தார்.


மெல்ல, மெல்லத் தம் மகளை அவனுக்கு மணம் புரிவிக்கும் தம் விருப்பத்தையும் தெரிவித்துக் கொண்டார். வல்லபன் உடனே ஏதும் பேசவில்லை. தர்ம சங்கடமான திருமணப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று



அவனுக்குப் புரியவில்லை. வேங்கியில் தான் விரும்பி வாக்களித்து வந்திருக்கும் மங்கையைக் குறித்துச் சொல்லி விட விரும்பினான்.

கூத்தர் வீட்டுக் கூடத்துத் தொட்டிலில் சோழ குலக் கொடி உறங்கிக்கொண்டிருந்தது. சோழ நாட்டின் இளவரசரை வரவேற்கக் கூத்தர் காத்திருந்தார்.

வல்லபன், கூத்தர் பாதங்களில் வீழ்ந்து ஆசி பெற்றுத் தொட்டிலில் உறங்கும் குழந்தையைக் காணச் சென்றான். அல்லி அங்கே நின்றுகொண்டு வல்லபனின் வனப்பு மிகுந்த கம்பீரத் தோற்றத்தை வியந்தவாறு இருந்தாள்.



"எப்படி சரேல்னு ப்ரேக் பிடிச்சேன் பார்த்தியா?"

விடுகிறோம். எட்டாண்டுகள் வரை குழந்தைகளுக்குப் போதாத காலமாம். பகைவர்கள் எந்தக் கணமும் உயிருக்கு ஊறு விளைவிக்கலாம். பிறகு சிறு குழந்தைகளுள் ஒருவர் நாட்டை ஆளும் பொறுப்பேற்பர். அப்போது, வல்லபன் நாட்டை அவரிடம் அளித்து விட்டு விலக வேண்டும். கேசவசுவாமி கூறிய சொல்லை அப்படியே கூறுகிறேன்'' என்றார் நம்பி.

கூத்தர் பிரான், வல்லபனின் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். பிறகு மெல்ல நகர்ந்து, கூடத்தின் அம்பலவாணர் சிலைக்கு அருகே சென்று, அங்கிருந்த இரு

'கூத்தர் வீட்டில் வளரும் குழந்தையா, கேசவசுவாமியின் வீட்டில் வளரும் குழந்தையா — எது நாளைக்கு நாட்டை ஆளும் உரிமையடையப் போகிறதோ — அவ்வாறு உரிமை வயதை அடையும் போது, இவர் தம் உரிமையை விட்டுக் கொடுப்பாரா?' என்று அல்லி எண்ணினாள்.

''இளவரசர் அவர்களே! தங்களை இங்கே அழைத்து வந்த நோக்கமே, 'குழந்தையைக் காண வேண்டும்' என்பது மட்டுமன்று. அரச அவைக் கவிஞர் எதிரே உறுதிமொழி பெறுவதற்கே. மனத்தை நன்றாகத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். அரச வாழ்வின் சுகபோகங்களை அனுபவித்துவிட்டு, அதைத் தியாகம் செய்வது என்பது எளிதான காரியமல்ல. பார்வையற்ற குருடனுக்கு விழியை அளித்துப் பிறகு பறிப்பது போல ஊமையனுக்குக் குரல் கொடுத்துப் பிறகு பறித்து விடுவதுபோல... வரலாற்றில் மிக முக்கியமான கட்டம். வருங்காலத்தவர் என்னையும் சேர்த்தே குறை கூறுவார்கள். பட்டத்துக்கு உரிமையுடையவனை மறைத்து வேறு ஒருவருக்கு நாட்டை ஆள உரிமையாக்கிய வர்களுள் முதல் அமைச்சர் நம்பியும் பெரும்பங்கு வகித்தார் என்று சாஸனத்தில் எழுதி விடுவார்கள். இளவரசர் வல்லபர் அவர்களே! அரச அவைக் கவிஞர் எதிரே, பச்சிளம் பாலகனுக்கு உறுதி செய்து கொடுக்கவே அழைத்து வந்தேன்...'' என்றார் நம்பி.

''இரு குழந்தைகளின் முன்னிலையிலும் உறுதி செய்து கொடுப்பதுதானே முறை?'' என்றார் கூத்தர்.

''ஆம், நாளைக்குக் கேசவ சுவாமியைச் சந்திக்கச் செல்கிறோம்.'' என்றார் நம்பி.

''ஆகா; கேசவசுவாமியா? முக்காலும் உணர்ந்தவர் அவர். அவருக்குத் தெரியும் வருங்காலம்...'' என்றார் கூத்தர்.

''அவர் வருங்காலம் உணர்ந்து கூறியபடிதான் எல்லாம் நடக்கின்றன. குழந்தைகளை அரசர்பார்க்கக் கூடாது என்ற அவர் கருத்துப் படி குழந்தைகளை வெவ்வேறு இடத்தில் வளர

நீற்றுக் கிண்ணத்திலிருந்து திருநீறு எடுத்து வந்து வல்லபனுக்கும் நம்பிக்கும் அல்லிக்கும் அளித்து ''எல்லாம் அவன் செயல். குறைவின்றி நடக்கும். இருப்பினும் என் உள்ளத்தின் ஒரு மூலையில் அச்ச உணர்வு சிறிது படர்கிறது. சோழ நாட்டில் சில நாட்களில் துக்ககரமான சம்பவமொன்று நடைபெறுமோ என்ற கவலை தோன்றுகிறது. இல்லை அம்பலவாணர் அருளால் எல்லாம் நன்மைக்கே'' என்று கூறித் தாமும் நெற்றியில் விபூதியை அணிந்து கொண்டார்.

நம்பியின் உடல் மெல்ல நடுங்கியது. ''கவிஞர் பிரானே! கேசவ சுவாமியும் இது போன்றே கூறினார். எதற்கும் அஞ்சாத என் உள்ளத்திலும் சிறிது அச்ச உணர்வு ஏற்படுகிறது'' என்றார்.

''பெருமான் நம்பி அவர்களே! தாங்கள் அருகிலிருக்கும்வரை ஒருவித இடரும் இந்த நாட்டை அணுகாது. மேலே ஆக வேண்டியதைக் கவனியுங்கள். இளவரசுப் பட்டம் சூட்டும் கோலாகலத் திருவிழாவை நடத்துங்கள்'' என்றார்.

வல்லபன் தலைநிமிர்ந்து நின்றான். தன் இடையிலிருந்து வாளை உருவினான்.

''சிபிச் சக்கரவர்த்தி, கோச் செங்கணான், விஜயாலயர் வழிவந்த சோழ நாட்டின் இளவரசுப் பொறுப்பை ஏற்கும் நான், இங்குள்ள முதல் அமைச்சர் அரச அவைக் கவிஞர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி. வேங்கிக்கும், கங்காபுரிக்குமாக அலைந்து கொண்டிருந்த எளியவனுக்கு இறையருளால் சோழநாட்டு இளவரசுப்பட்டம் கிட்டுகிறது. இங்கு தொட்டிலில் உறங்கும் பாலகனும், கேசவசுவாமியிடத்து வளரும் பாலகனும் இளவரசராகக் கூடிய பருவத்தை அடையும்போது அவர்களுள் ஒருவருக்கு இளவரசர்ப் பொறுப்பை அளிப்பேனென்றும், இளவரசராகும் செல்வன் என்று வேண்டுகிறாரோ அன்று அரசுப் பதவியையும் துறந்து செல்லச் சித்தமாயிருக்கிறேன் என்றும் உறுதி கூறுகிறேன். என் தாயின் கட்டளைப்படி அவ்வாறு, சொல்மாறாமல் நடப்பேன் என்று

உறுதி கூறுகிறேன். இங்குள்ள பெரியவர்கள் முன்னிலையில் நான் உரைத்த உறுதியை மீறமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்.''

இவ்விதம் கம்பீரமான, உறுதியான குரலில் கூறினான். நம்பியின் கண்களில் இன்பக் கண்ணீர் பெருகியது. கூத்தர் உணர்ச்சி வயப்பட்டார். வைத்த விழி எடுக்காமல் நோக்கியவாறிருந்த அல்லி, தொட்டிற் குழந்தையின் கன்னங்களைத் தொட்டு திருஷ்டி சுற்றினாள்.

குழந்தை விழித்துக் கொண்டது. தன் பொக்கைவாய் காட்டிச் சிரித்தது.

''என் செல்வமே!'' என்று எடுத்து அல்லி அணைத்துக் கொண்டாள்.

கூத்தரின் ஆசி பெற்றுப் புறப்பட்ட வல்லபனும் நம்பியும், கேசவசுவாமியிடம் சென்றனர். அங்கும் வல்லபன் உறுதிமொழி ஏற்றுக் கொண்டான்.

''பெருமான் நம்பி அவர்களே! எல்லாம் நல்லபடியாக நடக்கும். வல்லபனின் மிக அருகே அதிர்ஷ்ட தேவதை நிற்கிறாள். கிரக பலன்கள் மிகவும் உதவும் வகையில் உள்ளன. மகத்தான புகழோடு வல்லபன் விளங்குவான். ஆனால் — வருங்காலத்தில் இந்தக் குழந்தைகளுள் ஒருவருக்கு விட்டுக் கொடுக்காமல் உடும்புப் பிடியாக அரியணையில் அமர்ந்திருந்தால், சோழ நாட்டிற்குப் பெரிய ஆபத்து வருவது உறுதி'' என்றார்.

''சுவாமி, தங்களுக்குத் தெரியாதா? நான் எத்தகைய குணமுடையவன் என்பதைத் தாங்கள் உணர்ந்திருக்க மாட்டீர்களா?'' என்று கேட்டான் வல்லபன்.

''விதியை மாற்ற எந்த ஞானியாலும் சர்வேசுவரனாலும் முடியாது. அவன் இட்ட விதியை அவனாலேயே மாற்ற முடியாது. எல்லாம் அவன் ஆணைப்படி நடக்கும். வல்லபா! நீ எதிர்பார்த்ததை விட மகத்தான அதிர்ஷ்டங்கள் பதவிகள் உன்னை மிக விரைவில் நெருங்கப் போகின்றன. என்னிடம் வளரும் குழந்தையா, கூத்தரிடம் வளரும் குழந்தையா யார் வருங்கால அரசர் என்று இப்போது சொல்ல முடியாது. அதனால் தான் இரண்டு குழந்தைகளின் எதிரிலும் உறுதி எடுத்துக் கொள்ளுமாறு சொல்லியிருந்தேன். உலகிலேயே மிக முக்கியமான கடமைகள் மூன்று. தாய் சொல் தட்டாமை. கொடுத்த வாக்கு மீறாமை. பிறர் உடைமையை அபகரிக்காமை. ஆட்சிப் பொறுப்பில் அமர்பவர்கள் பின் இரண்டு தர்மங்களைக் கடைப் பிடிப்பது மிகவும் சிரமம். கடைப்பிடித்தாலோ அழியாப் புகழ் உறுதி'' என்று கூறி வாழ்த்தி அனுப்பினார்.

கேசவசுவாமியிடம் தனியாக நெருங்கின பெருமான் நம்பி, வல்லபன் திருமணத்தைக் குறித்துக் கேட்டார். தம் மகளை மணம் புரிவிக்க வேண்டிய ஓர் எண்ணம் உதித்திருப்பதைக் கூறி யோசனை கேட்டார்.

கேசவசுவாமி சிறிதுநேரம் தியானத்தில் இருந்து விட்டு, ''நம்பி! உன் எண்ணம் நிறைவேற வேண்டுமானால் நீ பலருடன் விரோதம் கொள்ள வேண்டும். ஆனால், வல்லபனுக்கோ பல தார யோகமிருக்கிறது. இதில் திட்டமாக நான் ஏதும் சொல்ல முடியாது. வல்லபனின் தாய் என்ன சொல்கிறாளோ அதன்படி நடக்கட்டும்'' என்றார்.

நம்பி வீட்டை அடைந்தவுடன், ஆவலுடன் காத்திருந்த அவருடைய மகள் கேட்டாள்: ''என்ன முடிவு ஏற்பட்டது அப்பா?'' என்று. நடந்தவற்றை விவரித்த நம்பி, ''நானே கேட்கவில்லை, வல்லபனே பேசினான். உன்னை ஒரு கணம் பார்த்ததிலிருந்தே அவனுக்கு உன்னைப் பிடித்து விட்டது. ஆனால், நான் அறிந்தது வரையில் வேங்கியில் அவனுக்கு ஒரு காதலி இருக்கிறாள். அந்தக் காதலைத் தடை செய்ய என்னால் முடியும். ஆனால், இருக்கோவலூர் மலையமானின் குறுக்கீட்டைத் தடை செய்ய வேண்டுமானால், நான் அவருடன் விரோதம் கொள்ள வேண்டும். என்ன செய்வதென்று புரியவில்லை. எல்லாம் அம்பல வாணன் அருள்'' என்றார்.

வல்லபன் தன் தாயிடம் நடந்தவற்றைக் கூறி ''இளவரசுப் பட்டம் ஏற்கும்போது, எனக்குத் திருமணம் நடந்துதான் ஆக வேண்டுமாம். நான் வேங்கியிலிருந்து சந்திரவல்லியை உடனே வரவழைக்கட்டுமா?'' என்று கேட்டான்.

வல்லபனின் தாய் செல்வி திடுக்கிட்டாள். கோபங்கொண்டாள். வல்லபன் திருமணம் குறித்து அவள் கூறிய யோசனை வல்லபனைத் திகைக்க வைத்தது. (தொடரும்)

பூமியைத் திருத்தி வண்ணப் பொன் மலர்கள் கண்மலர
பூவிதைகள் போடும்வரை மனிதன்! — வானப்
புனல்பொழிந்து வளர்ப்பவன் யார்? இறைவன்!
கடல் மலை, மணற்பரப்பு காணலாம் என நினைத்துக்
கண்ணிமை திறக்கும்வரை மனிதன்! — காணக்
கதிரொளி விரிப்பவன்யார்? இறைவன்!
வாழ்வினில் இணைந்து இன்பவாசலில் கைகள் கண்டு
வனிதையுடன் சேரும்வரை மனிதன்! — அங்கு
வளர்மழலை தருபவன் யார்? இறைவன்!
ஏட்டினை விரித்து நெஞ்சம் எண்ணுகின்ற கவிவரைய
எழுத்தெடுத்துச் சேர்க்கும்வரை மனிதன்! — கவிதை
இழையோடச் செய்பவன் யார்? இறைவன்!
நாடியோ மிகத்தளர்ந்து நாட்களோ மிகவளர்ந்து
நமனுலகை எண்ணும் வரை மனிதன்! — காற்று
நண்பனைப் பிரிப்பவன் யார்? இறைவன்!
ஆடிஓடி செல்வம் சேர்த்து—அதுஇதுவாய் வாங்கி ஒன்றாய்
அழகுடன் சேர்க்கும்வரை மனிதன்! — அவை
அனுபவிக்கச் செய்பவன் யார்? இறைவன்! — மதிவண்ணன்.





பாட்டியும் ப்யூட்டி பார்லரும்

ரமாமணி சுந்தர்

உங்களில் பலருக்கு நிறைவேறாத ஆசைகள் சில இருக்கலாம். எனக்கும் அப்படிச் சில ஆசைகள் இருக்கின்றன. அவைகளில் முக்கியமான ஒன்று... சொன்னால் உங்களுக்கெல்லாம் சிரிப்பு வரும். பார்க்கப் போனால் அது ஓர் அற்ப ஆசைதான். ஆனால் அது கூட நடக்கவில்லையே!

பதினாறு வயதினில், கல்லூரி வாயிலில் காலெடுத்து வைத்த பொழுது எனக்கேற்பட்ட அந்த ஆசை என்னவென்றால், தில்லியில் உள்ள நவநாகரிக நங்கைகளைப் போன்று நாமும் தலையை ஸ்டைலாக பாப்கட் அடித்துக் கொள்ள வேண்டும் என்பதுதான். ஆனால் பத்தாம் பசலிகளான என் பெற்றோர், நான் ஏதோ கேட்கக் கூடாத ஒன்றைக் கேட்டு விட்டது போல் பதறிப் போய் ''தலை மயிரையெல்லாம் வெட்டிக் கொண்டு அல்ட்ரா மாடர்னா இருந்தால், ஒரு பையனும் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டான்'' என்று என்னை ஒரேயடியாக பயமுறுத்தி, என் ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டு விட்டார்கள். நானும் எனது ஆசையைத் தாற்காலிகமாக மூட்டை கட்டி வைத்தேன்.

நான்கு வருடங்கள் கழித்து எனக்குத் திருமணம் ஆயிற்று. மெதுவாக என் ஆசையை ஒருநாள் வெளியிட்டேன். அவ்வளவுதான்! என் மாமியார் விளக்குமாறைக் கையில் எடுத்து விட்டார்.

''நன்னாயிருக்கு! கல்லாட்டம் புருஷன் இருக்கறச்சே, அச்சானியம் போல, தலையைச் சரைச்சுக்கறேன்கிறயே?'' என்று அவர் போட்ட கூச்சலில் பயந்து போய், என் ஆசைக்குச் சமாதி கட்டி விட்டேன்.

ஆனால் அன்றே ஓர் உறுதியான முடிவெடுத்தேன். எனக்குப் பெண் குழந்தை பிறந்தால், அவளுக்கு விதவிதமான பாப் கட்கள் அடித்துப் பார்க்க வேண்டும் என்று தீர்மானம் பண்ணினேன். நான் ஆசைப்பட்ட படியே, எனக்குப் பெண் குழந்தை பிறந்தது.

ஆனால் அவள் பக்கத்து வீட்டு மாலதி மாதிரி தானும் தலைமயிரை நீளமாகப் பின்னி, பூ வைத்துக்கொள்ள வேண்டும் என்று அடம் பிடிக்க ஆரம்பித்தாள்.

என் பெண் உமா பாப் வைத்துக்கொள்ளச் சம்மதிக்காததில் எனக்குப் பெரிய ஏமாற்றம். எவ்வளவோ கெஞ்சினேன். அவள் மசியவில்லை. இது, எப்படிப்பட்ட ஒரு விசித்திரமான தலைமுறை விரிசல் பாருங்கள்!

இப்பொழுது உமாவுக்கு ஐந்து வயதாகிறது. அடுத்த வாரத்திலிருந்து கான்வென்ட் பள்ளியில் சேர்ந்து படிக்கப் போகிறாள். (கான்வென்டில் படிக்க வேண்டும் என்பதும் எனது நிறைவேறாத ஆசைகளில் ஒன்று.) மந்திரி வரை சிபாரிசு பிடித்து அட்மிஷன் வாங்கியிருந்தோம். அப்படிக் கஷ்டப்பட்டு இடம் பிடித்தக் கான்வென்ட்டிற்குப் போகும் பொழுதாவது, என் பெண் மாடர்னாக பாப் தலையும், ஸ்கர்ட்டுமாகப் போக வேண்டும் என்று எனக்கு ரொம்ப ஆசை. அதனால் கடந்த சில நாட்களாகவே அவளைக் காக்காய் பிடித்துக் கொண்டிருக்கிறேன். சாக்லேட், ஐஸ்கிரீம், விளையாட்டுச் சாமான்கள், என்று அவளுக்கு லஞ்சம் கொடுத்துப் பணத்தை தண்ணீராய்ச் செலவழித்ததுதான் மிச்சம். காரியம் என்னவோ நடக்கவில்லை. உமாவிற்கு அவள் அப்பாவின் ஸப்போர்ட் வேறு. போதாக் குறைக்கு, இப்பொழுது என் மாமியார் வேறு ஊரிலிருந்து வந்திருக்கிறார்.

எனக்கு இது ஒரு பிரஸ்டிஜ் இஷ்யூவாகப் போய் விட்டது.

மாலை தலைமயிரை வெட்டுவதற்கு முன்னேற்பாடாகக் காலையில், உமாவை ஷாம்பூ தேய்த்துத் தலைக்குக் குளிப்பாட்டினேன். அன்று முழுவதும் உமாவுக்கு ஏகப்பட்ட சுதந்திரம். கோபித்துக் கொண்டாள், அவள் மனம் மாறி விடுமோ என்று பயந்துகொண்டு அவள் செய்யும் விஷமங்களை யெல்லாம் சகித்துக் கொண்டேன்.

மாலை உமாவைக் கூட்டிக் கொண்டு உற்சாகமாக ப்யூட்டி பார்லரை நோக்கிப் புறப்பட்டேன். வந்ததே ஆபத்து!

''டில்லியிலே எனக்கும் பொழுதே போக மாட்டேனென்கிறது. நம் ஊராக இருந்தா சாயங்காலம் கோவிலுக்காவது போவேன். இப்ப உங்களோடு கொஞ்ச தூரம் நடக்கலாம் போல இருக்கு'' என்று நீட்டி முழக்கினார் என் மாமியார்.

வேறு வழியில்லாது அவரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டோம். ஒரு நவநாகரிகமான ப்யூட்டி பார்லருக்குள் நுழைந்தோம். கொஞ்சம் கூட்டம் அதிகமாக இருந்ததால், சிறிது நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. அப்பொழுதுதான் கடையைச் சரியாகக் கவனித்த என் மாமியாருக்கு ஒரே ஷாக். ''நாவிதர் கடைக்கா என்னைக் கூட்டிண்டு வந்திருக்கே?'' என்று தலையில் அடித்துக் கொண்டார்.

''பாட்டி இது, நாவிதர் கடை இல்லை. பியூட்டி பார்லர். நான் தலையை 'பாப்' அடிச்

க்கப் போறேன்'' என்று உற்சாகமாகப் பதிலளித்தாள் உமா.

''இருக்கற நாலு மயிரையும் வெட்டிக்கப் போறயா? தலைவாரிப் பின்னிண்டா எவ்வளவு நன்னாயிருக்கும்?'' என்று தம் அபிப்பிராயத்தை வெளியிட்டார் என் மாமியார். எனக்கு வயிற்றைக் கலக்கியது.

''என்ன கண்ணறாவியோ? நான் இங்கே வந்து மாட்டிண்டேனே! என் தலையெழுத்து'' என்று ஓரேயடியாகப் புலம்ப ஆரம்பித்துவிட்டார் என் மாமியார்.

இரண்டு கை விரல்களையும் காட்டிக் கொண்டு ப்யூட்டீஷியன் எதிரில் உட்கார்ந்திருந்தாள் ஒரு பெண்மணி.

''அவள் எதுக்குக் கைவிரலையெல்லாம் நீட்டிண்டு உட்கார்ந்திருக்கா?'' என்று ஆச்சரியமாகக் கேட்டார், என் மாமியார்.

''அவள் மெனிக்யூர் பண்ணிக்கறா'' என்று வேண்டுமென்றே அவருக்குப் புரியாத பாஷையில் பதில் சொன்னேன்.

''நகத்தை வெட்டிக்கறான்னு சொல்லு. சந்திகாலம், விளக்கேத்தற சமயத்தில, நன்னாத்தான் நகத்தை வெட்டிண்டா? லக்ஷ்மி வீட்டை விட்டுப் போயிடுவா'' என்று அனாவசியமாகக் கவலைப்பட்டார், என் மாமியார். ''இவர்களிடம் லக்ஷ்மி நிறைய இருக்கிறதினால்தான் நகத்தை அழகு செய்து கொள்ள, இவ்வளவு பணம் செலவழித்து ப்யூட்டி பார்லருக்கு வரா. அதனால் இருக்கிற பணத்தில் கொஞ்சம் போனால் பரவாயில்லை'' என்று பதில் சொன்னேன்.

ஸ்கர்ட் அணிந்த பெண்மணி ஒருத்தி. சுமார் முப்பத்தைந்து வயதிருக்கலாம். (கஷ்டப்பட்டு மேக்கப் பண்ணிக் கொண்டிருந்தாலும், ஓரளவு வயதை மறைக்க முடிகிறது) இரண்டு கால்களையும் நீட்டிக் கொண்டு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள். அவள் கால்களில் பேண்டேஜ் போன்று கட்டியிருந்த துணியைப் பிரித்துக் கொண்டிருந்தான் ப்யூட்டீஷியன் ஒருவன்.

''என்னடி இது? ஒரு ஆம்பளை அவள் காலைத் தொட்டு என்னவோ பண்ணிண்டிருக்கானே, வெட்கமாயிருக்காதோ?''

''ஒன்றுமில்லை அவள் ஸ்கர்ட் போட்டுக்கறதினால், கால்களில் இருக்கும் மயிரையெல்லாம் எடுத்துக்கறா. பசை போன்ற மருந்தைத் தடவி அதற்கு மேல் துணி வைத்துக் கட்டித் துணியைப் பிய்த்து எடுத்தா, கால் மயிரெல்லாம் வெளியே வந்து விடும்'' என்று விவரித்தேன்.

''நாங்களெல்லாம், கஸ்தூரி மஞ்ச தேச்சுக் குளிப்போம். கைகால்களெல்லாம் வழவழன்னு இருக்கும். இப்படியா, நாவிதர் கடையில் வந்து, அதுவும் ஒரு ஆம்பளையைக் கொண்டு... என்ன கண்ணறாவியோ?'' என்று லெக்சர் பண்ணினார் என் மாமியார்.

எனக்குப் போதும் போதும் என்று ஆகிவிட்டது. சீக்கிரமாக எங்கள் முறை வராதா என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். திடீரென்று நாலைந்து பெண்மணிகள், க்யூவில் நிற்காமல் நேராக உள்ளே போனார்கள். அவர்கள் கல்யாணப் பெண்ணின் அலங்காரத்துக்காக வந்திருந்தார்கள்.

கல்யாணப் பெண்ணிற்கு முதலில் தலை அலங்காரம் ஆரம்பமாயிற்று. தலைமயிரை ஷாம்பூ போட்டு அலம்பி, ஹேர் டிரையரைத் தலைமீது பொருத்தி வைத்திருந்தார்கள். உமாவுக்கு இது வேடிக்கையாக இருந்தது. ''அந்த மாமி, எதுக்குத் தலையில் ஹெல்மெட் போட்டிண்டிருக்கா?''

''அது ஹெல்மெட் இல்லை. ஹேர் டிரையர். ஈரத் தலைமயிரை உலர்த்துகிறார்கள்!''

அதற்குள் என் மாமியார் ''ஏன் அவாளுக்கு வீட்டிலே தண்ணீர் கஷ்டமா? இங்கே வந்து எதுக்காகக் குளிக்கறா'' என்றார்.

''அந்தப் பொண்ணுக்கு இன்னிக்குக் கல்யாணம் போலிருக்கிறது. கொண்டை போடுவதற்காக, முதலில் தலைமயிரை ஷாம்பூ போட்டு அலம்பியிருக்கிறார்கள். கொண்டை போட்டுவிட்ட பிறகு, மற்ற அலங்காரங்களெல்லாம் செய்வார்கள்.''




கிரிக்கெட் கர்கணம்!

கோச்:
கே. சந்திரசேகர்
படம்: ராஜு..
தயாரிப்பு: குண்டுமணி

39

நடுவரின் சைகைகள்!



''என்னது! இன்னிக்குக் கல்யாணமா? அப்படின்னு நேரே இங்கேந்து போய் மணையில் உட்காருவான்னு சொல்லு! கல்யாணம்னு, பக்தி சிரத்தையா, மடியா தலைக்கு ஸ்நானம் பண்ணிட்டு, மணையில் உட்கார்ந்துப்பா. இந்த ஊர்லே, சலூன் கடையிலேந்து நேராக மணப்பந்தலுக்குப் போறீங்களே!'' என்று மூக்கில் விரல்வைத்தார் என்மாமியார்.

''கல்யாணப்பெண் மாத்திரம் இல்லை. அவளுடைய அக்கா, தங்கைகள், மன்னி, ஏன் அம்மாவும் கூட வந்து கொண்டை போட்டுக் கொண்டு, மற்ற அலங்காரங்களும் பண்ணிக் கொண்டு போவார்கள். இப்ப போட்டுக்கற கொண்டையை, நாளை ரிஸப்ஷன் முடியும் வரை கலைக்காமல் வைத்துக் கொள்வார்கள். தலையாக 25 ரூபாய் அல்லவா கொடுக்கிறார்கள்.''

''அப்போ, அவாள்ளாம் ராத்திரி எப்படித் தூங்குவா? தூங்கினால் நாளைக்கு ரிஸப்ஷனுக்குள்ள கொண்டை கலைந்து போயிடுமே?'' என்று உமா கவலையோடு கேட்டாள்.

''ஒரு நாள் தூக்கம் விழிப்பார்கள். அப்படித் தூக்கம் வந்து விட்டால், குப்புறப் படுத்துக் கொண்டு தூங்குவார்கள்!''

''இவ்வளவு கஷ்டப்பட வேண்டுமா, ஒரு கொண்டைக்காக?'' - என் மாமியார்.

''உங்களுக்கு என்ன தெரியும்? மாடர்னுக டிரெஸ் பண்ணிக்கணும்னு ரொம்பக் கஷ்டப் படவேண்டும்.''

ஒரு வழியாக என் பெண்ணின் முறை வந்தது. உள்ளே போனோம். உமாவை நாற்காலியில் உட்கார்த்தி வைத்தேன். கையில் கத்தரிக்கோலும், சீப்புமாக உமாவின் அருகில் வந்தான், ப்யூட்டீஷியன். அவ்வளவுதான்! ஓய்ரயடியாகக் கதறினாள் உமா.


''எனக்குத் தலையை வெட்டிக்க வேண்டாம். இவனைப் பார்த்தாப் பிடிக்கலே. வீட்டுக்குப் போகலாம்'' என்று ஒரே கூச்சல். அவள் கைகள் இரண்டையும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டேன். வந்த கோபத்தில் உமா கால்களால் மேஜைமேல் ஒரு உதை விட்டாள். அங்கிருந்த சாமான்களெல்லாம் உருண்டு கீழே விழுந்தன. எல்லோரும் எங்களை வேடிக்கை பார்த்தார்கள்.

இதற்குள் என் மாமியார் ''குழந்தையை எதுக்கு அனாவசியமா தொந்தரவு பண்ணறே? அவள் இஷ்டப்படி விட்டுவிடு'' என்றாள்.

''அஞ்சு ரூபாய் முன்பணம் கொடுத்திருக்கு. கடைசியில் இப்படி மாட்டேங்கறாளே?''

''குழந்தைக்குத் தலைவெட்ட முன்பணமே அஞ்சு ரூபாயா? நன்னா இப்படிக் காசைக் கரியடிச்சே. என் பிள்ளை எவ்வளவு கஷ்டப் பட்டுச் சம்பாதிக்கறான்!'' என்று என் மாமியார் கூச்சல் போட்டார்.

கடைக்காரன் பொறுமையிழந்து போய் ''சீக்கிரம் சொல்லுங்கள். வெட்டணுமா? வேண்டாமா?'' என்று அவசரப் படுத்தினான். இந்த ரகளையில், உமா மெதுவாக அங்கிருந்து நழுவிப் போய் வாசலுக்கு ஓட ஆரம்பித்து விட்டாள். அவளைத் துரத்திக் கொண்டு நானும் வெளியே வந்து விட்டேன். மறுபடியும் உள்ளே நுழைவதற்குத் துணிவில்லை!



''என்னப்பா... ஏற்கெனவே பட்டும் இன்னும் ஒனக்குப் புத்தி வரலியா?... போறது தானே எங்காச்சும்... கண்டக்டர் உத்தியோகத்துக்கு ஏன் வரணும்?''

பிரயாணிகளின் எதிரே மானம் போகிற கேள்விகளின் உக்கிரத்தில் அவனது முதுகுத் தண்டு ஜில்லிட்டது.

இந்தப் புதிய வழித் தடத்துக்கு மாற்றலாகி வந்து ஒரு வாரம் தான் ஆகிறது. அதற்குள் இதுபோன்ற எத்தனையோ சம்பவங்கள், பணியில் அசிரத்தை, நண்பர்களிடம் எரிச்சல், வீட்டில் அம்மாவுடன் சண்டை...

அவளை - அவளது முகத்தை – நிறைய சங்கதிகளை உள்ளடத்து, சின்னக் கோடாக இதழ்களை விரித்து உதிர்க்கும் அவளது புன்னகையை – நாளெல்லாம் பார்த்து ரசித்துக் கொண்டிருக்க மட்டுமே பிறந்திருக்கும் தன்னை, யாரோ நிர்ப்பந்தப்



ஒரு புன்னகையின் இழம்!

மும்தாஜ் யாசீன்

அவளது நினைப்பு வந்தவுடன் குப்புராஜுக்கு எல்லாமே மறந்துபோய் விடுகிறது. வாழ்க்கையின் மற்றப் பிரச்னைகளைப் பற்றிய பிரச்னையே அற்றுப் போய், அவளும், அவள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுமே நிஜம் என்கிற மயக்கம் வந்து விடுகிறது.

இன்றைக்குக் கூட அப்படித்தான் நடந்தது.

பஸ்ஸில் ஏகக் கூட்டம். பாதிப் பேருக்குப் பயணச் சீட்டு வழங்கி விட்டு, பாதையோரம் போன புது மணமக்களை மாலையும், கழுத்துமாகப் பார்த்தவனுக்கு, 'சட்'டென்று அவள் நினைப்பு வந்து விட்டது. அவ்வளவுதான்; கைகோத்துக் கொண்டு அவளுடன் கடற்கரையில் உலவுகிற மாதிரியும், சினிமாவில் வருவதைப் போன்ற ராட்சஸ மாளிகையில் கொஞ்சிக் குலவுகிற மாதிரியும் கனவு காண ஆரம்பித்து விட்டான்.

விளைவு? செக்கிங் இன்ஸ்பெக்டரின் கரி நாக்கில் விழுந்து புரள்கிற மாதிரி ஆயிற்று.

படுத்தி பிரித்து விட்ட மாதிரி அவனுக்கு இருந்தது. இந்நினைவின் உறுத்தலில், பார்க்கிற எல்லாமே கசப்பாகத் தெரிந்தது. திடீரென்று என்ன தோன்றிற்றோ? லீவு போட்டு விட்டு இன்றைக்கு அவளைப் பார்ப்பதற்காக பஸ் ஏறி விட்டான்.

போன வாரம் வரைக்கும் குப்புராஜ் பணி புரிந்து வந்த 'ரூட்'தான் அது. இதே பஸ்ஸில் ஏறித்தான் தேவகியும் உத்தியோகத்துக்குப் போக வேண்டும். பக்கத்துக் கிராமத்தில் ஆசிரியை வேலை அவளுக்கு. தினமும் தவறாத சந்திப்பு. அவளுடன் பரிச்சயம் ஏற்பட்டதற்கான ஒரே காரணம் அதுதான். பஸ்ஸில் ஏறும்போதும், இறங்கும் போதும் இமையைத் தாழ்த்தி அவனைப் பார்த்தபடி புன்னகை செய்வாள் அவள். ததும்பத் ததும்ப முகத்தில் நிறைந்திருக்கும் பூரிப்பில், ''உனக்கு இவ்வளவு தான்'' என அளவெடுத்துப் போட்ட மாதிரி இருக்கும் அது. அதைக் கண்டவுடன் அவனுள் சகலமும் கரைந்து விடும்.

அது வரைக்கும் தாங்கித் தாங்கி இரண்டு பர்லாங் தூரம் நடந்து பஸ் நிலையம் வந்து தான் அவளும் பஸ் ஏறிக் கொண்டிருந்தாள். அப்புறம் குப்புராஜ்தான் அதை மாற்றினான். அவளது வீட்டருகிலேயே பஸ்ஸை நிறுத்தி ஏற்றிச் செல்ல ஆரம்பித்தான். கம்பெனி விதிகளுக்கு மாறானது இது. அதற்குச் சப்பை கட்டுகிற விதமாக, ''அதெல்லாம் பாத்தா முடியுமா சார்? கால் ஊனமான பொண்ணு. அட்ஜெஸ்ட் பண்ணித்தான் போகணும்'' என்று சொல்லிக் கொள்வான்.

அவனுக்கு நன்றி சொல்கிற மாதிரி, அவளது புன்னகையும் சற்றுப் பரிணாம வளர்ச்சியடைந்தது.

பஸ்ஸுக்குள் ஏறியதும் தலையைக் கவிழ்த்துக் கொண்டு பெண்களுக்கான பகுதியில் மூன்றாவது சீட்டில் போய் அமர்ந்து கொள்வாள். பஸ்ஸில் எவ்வளவுதான் கூட்டமிருந்தாலும் அவளுக்காக ரிசர்வ் செய்யப்பட்டிருக்கும் அது.

ஆறு மாதங்கள் ஓடி விட்டன.

அவனது கற்பனைகள், கனவு உலகத்தை விட்டுத் தாண்டவே இல்லை. இந்நிலையில்தான் போன வாரம் அவனது மன சாம்ராஜ்யத்தில் இடி விழுகிற மாதிரி நடந்தது.

''ஒரு பொண்ணுக்காக பஸ்ஸைக் கண்ட எடத்துல நிறுத்தறான்'' என்று எவனோ மொட்டைக் கடிதம் போட்டிருந்தானும். முதலாளி அவனை வேறொரு 'ரூட்'டுக்கு மாற்றி விட்டார்.

புதிய கண்டக்டர் ரொம்பவும் இளைஞனாகத் தெரிந்தான். குப்புராஜைக் கண்டதும் சீனியருக்குக் காட்டும் மரியாதையுடன் ''வணக்கம்'' சொன்னான். தனது இருக்கையை விட்டு எழுந்து. ''உட்காருங்க அண்ணே'' என்றான். பிரயாணிகளிடம் இதமாகவே பேசினான். தோழமையாகப் புன்னகைத்தான். பெண்களிடம் கூட சகஜமாகப் பழகினான்.

''ஒரு வார சர்வீஸில் இவ்வளவு சாகசமா?''

குப்புராஜுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மனதார நேசிப்பவளிடம் கூடப் பேசத் தயங்குகிற தன்னை நினைத்துக் கொண்டான். எரிச்சல் வந்தது. தான் முற்றிலும் கோழை அல்ல என்கிற மாதிரி, என்றோ ஒருநாள் அவளிடம் பேசிய காட்சி நினைவுக்கு வந்தது. அவளது பெயர், உத்தியோகம் முதலியவற்றை அன்றைக்குத்தான் அவன் தெரிந்து கொண்டான்.

''மேடம்... ஸ்கூலில் என்ன சப்ஜெக்ட் எடுக்கிறீங்க?''

''கணக்கு.''

''கணக்கு வாத்தியாரம்மாவா நீங்க?''

''ம்...''

''அதான் எல்லா விஷயத்திலும் கணக்கா இருக்கீங்க'' கண் சிமிட்டலுடன் கூறினான்.

''இல்லாம முடியுமா? அதுவும் இந்தக் காலத்தில்...'' நிதானமாகவே அவளும் பதிலளித்தாள்.

இப்போது இந்தப் புதுப் பையன் போடுகிற போட்டைப் பார்த்தபோது, தன்னுடைய சாமர்த்தியம் ரொம்பவும் அற்பமானது எனப்பட்டது.

குப்புராஜுக்குப் போரடித்தது. மணியைப் பார்த்தான். 8. 20. அவளது ஊர் வருவதற்கு இன்னும் நாற்பது நிமிடங்கள் காத்திருக்க வேண்டும்.

''வேலை மாற்றலைச் சொல்லக் கூட முடியாமல் போச்சே. நிக்காமப் போகும் பஸ்ஸைப் பார்த்து எத்தனை நாட்கள் ஏமாந்தாளோ? பாவம்!... இரண்டு பர்லாங் தூரம்

'கீப் இட் அப்'

என் சகோதரியின் பையன் ஆங்கிலம் போதனா மொழியாக உள்ள ஒரு கான்வென்ட் பள்ளியில் U. K. G. படிக்கிறான். அவன் ஒருநாள் வீட்டிற்கு வந்து நோட்டுப் புத்தகத்தைத் தாயிடம் கொடுத்து ''அம்மா இதை பீரோ மேலே வைத்து விடு'' என்று கூறினான். ''உனக்கு வீட்டுக் கணக்கு போட நோட்டு வேண்டாமா? எதற்காக பீரோ மேல் வைக்கச் சொல்கிறாய்?'' என்று அவள் கேட்கவும் அவன் பளிச்சென்று ''மிஸ்தான் அப்படி அதில் எழுதியிருக்கிறு அம்மா! நீ வேணு பாரேன்'' என்றான். அன்று கணக்குப் போட்ட பக்கத்தில் பத்துக்குப் பத்து மார்க் போட்டு 'Keep it up!' என்று எழுதியிருந்தது!

என். சுப்பிரமணியன்



பஸ் நிலைய வேதனை


குறைந்தது இரண்டு மணி நேரம் பஸ் வராது. ஏன் பசியால் வாட வேண்டும்? எப்போதும் என்னிடம் குவாலிடி கோல்டன் பிஸ்கட் வைத்திருப்பேன். கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள். நல்ல ஊட்டம் தரும்.
நன்றி - இனி நானும் மறக்காமல் எடுத்துச் செல்வேன். ஒரு பாக்கெட் குறைந்தது 5 பஸ் நேரத்திற்குத் தாங்கும்.
ASP-KFP-7911
kwality's golden BISCUITS
கெட்டியான பாக்கெட்டுகளிலும் உதிரியாகவும் கிடைக்கும்.
KWALITY GOLDEN BISCUITS
IS 1011
போலிகள் ஜாக்கிரதை!
குவாலிடிஸ் கோல்டன்
ஆரோக்கியமான குடும்ப பிஸ்கட்
செலவு குறைந்தது
குவாலிடி ஃபுட் ப்ராடக்ட்ஸ்
பெங்களூர்-560039
குவாலிடி உயர்தர பிஸ்கோத்துகளைத் தயாரிக்கிறது.

நடந்து வந்துதானே இனி பஸ் ஏறனும்.'' அவளைப் பற்றிய சிந்தனைகள் மனத்தை முற்றுகையிட்டன.

பஸ் மறுபடியும் புறப்பட்டு விட்டது.

சில புதிய 'வரவு'களாலும், சற்று 'ரிலாக்ஸ்' செய்து கொண்டு வந்த 'பழக' களாலும் இலேசான சலசலப்பு. இன்னும் கொஞ்ச நேரத்தில் அடங்கி விடலாம்.

தேவகிக்கு பரிசளிப்பதற்காக வாங்கிய பேனு செட் சட்டைப் பையில் உறுத்தியது. கையில் எடுத்தான். சின்ன பிளாஸ்டிக் டப்பி. இளம் பச்சை வர்ணத்தில் அழகான இரண்டு பேனுக்கள் அதிலிருந்தன. தானும், அவளும் சேர்ந்து இருப்பதைப் போலிருந்தது குப்பு ராஜுக்கு. இன்னும் சற்று நெருக்கி வைத்தால் சரியாயிருக்கும்.

''அந்தச் சின்ன உதடுகளுக்கு முத்தம் தரனும். 'இவ்வளவு வசீகரமாகப் புன்னகை செய்ய யார் கத்துத் தந்தாங்க?' என்று கேட்க வேணும்.''

போன வாரத்தில் ஒருநாள் அவளுடன் சேர்ந்து நடக்க நேர்ந்தவும், அப்போது மிக அருகிலிருந்து அவளது முகத்தைக் கவனித்ததும் இந்நேரத்தில் அவனது நினைப்புக்கு வந்தன.

அன்றைக்கு என்னவோ அவள் வீட்டருகே பஸ்ஸை நிறுத்தி இரண்டு, மூன்று தடவை ஹார்ன் அடித்தும் தேவகி வெளியே வரவேயில்லே. மழை வேறு கொட்டிக் கொண்டிருந்தது. விட்டுப் போகவும் மனம் வராமல், ஓடினன், குப்புராஜ் இறங்கி அவளது வீட்டுக்கு. அதற்குள் அவளும் வாசலுக்கு வந்து விட்டாள். ''அம்மாவுக்கு உடம்பு சரியில்லே. நானே சமைக்க வேண்டியதாயிடுச்சு.''

''அதனுலென்ன? பரவாயில்லே...'' என்று சமாதானப் படுத்தினன் அவன். ஒரே குடையில் இருவரும் சேர்ந்தே நடந்தார்கள். அப்போதுதான் கிட்ட இருந்து அவளை நன்ருகப் பார்த்தான் அவன். கண்ணுடியைக் குழைத்துப் பூசியிருப்பதைப் போல் ஒரு பளபளப்பு. கழுத்திலும், கன்னத்தின் அடிப் பகுதியிலும் பச்சை நரம்புகள் ஓடுவது தெரிந்தது. அவளுக்குக் குறைபட்ட கால் அமைந்திருப்பதில் கூட அச்சமயத்தில் அவனுக்கு ஒரு திருப்தி உண்டாயிற்று. இல்லேன்னு தினமும் பத்து மைல் பிரயாணம் செய்து, வாத்திச்சி உத்தியோகம் பார்க்கிறவளாகவா இவ இருந்திருப்பா? எவனுச்சும் கொத்திக் கொண்டு போயிருக்க மாட்டானு?

இந்தச் சம்பவத்திற்கு அடுத்த நாள், அவன் வேறொரு 'ரூட்'டுக்கு மாற்றப்பட்டு விட்டான். எவன் எழுதிப் போட்டானே?

பஸ் ஸ்டாண்ட் வந்ததும் அவளைக் காணலாம் என்றிருந்த குப்புராஜுவுக்கு ஏமாற்றமாக இருந்தது.

நடை பாதைப் பிள்ளையார் கோவிலிலிருந்து எண்ணினுல் ஒன்று... இரண்டு... மூன்ருவது வீடு.

வண்டியை நிறுத்தும்படி சொல்ல வாயைத் திறக்கும் முன்பு, அதுவாகவே நின்றது.

''சடக்...''

ஆச்சரியமடைந்து கண்ணுடியின் வழியாகப் பார்த்தான் குப்புராஜ். தூக்கி வாரிப் போட்டது.

தேவகி. அவளேதான்.

தாங்கித் தாங்கி வேகமாக பஸ்ஸை நோக்கி வந்து கொண்டிருந்தாள். முழங்கை மடிப்பில் தொங்கும் பிளாஸ்டிக் பையில் டிபன் கேரியரும், ஓய்வு நேரத்தில் படிப்பதற்காகப் புத்தகமும் இருந்தன.

''சீக்கிரமா ஏறுங்க மேடம்...'' பஸ்ஸை அவளுக்காக நிறுத்திய கண்டக்டர் கூறினன்.

நன்றி சொல்கிற விதமாகப் புன்னகைத்தபடியே அவளும் ஏறிக் கொண்டாள். அதே புன்னகை. ''உனக்கே உனக்குத்தான்'' என்கிற தோரணையுடன், குப்புராஜிடம் உதிர்ப்பாளே அதுவே அது. சின்னதாக, கோடிழுத்த மாதிரி...

யாரோ மண்டையில் அடித்த மாதிரி இருந்தது அவனுக்கு.

''பாத்தீங்களா? நமக்காகன்னு பஸ் இந்த எடத்துல நிக்குமா? ம்ம்...'' 'சங்கதி' அறிந்த இரண்டு பெரியவர்கள் பேசிக் கொண்டார்கள்.

உணர்ச்சி கொப்பளிக்கத் தேவகியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் குப்புராஜ். அவள் எதையும் கவனிக்கவில்லே. தலையைக் குனிந்து கொண்டே, பெண்களுக்கான பகுதியில் மூன்ருவது ''சீட்''டிற்குச் சென்று அமர்ந்து கொண்டாள். பின் புத்தகத்தை எடுத்தாள்.

தன்னைத் தவிர்த்து அந்த பஸ்ஸில் எல்லாமே வழக்கம் போல் நடக்கிற மாதிரி பட்டது அவனுக்கு. தனக்கு முன்புகூட அப்படித் தானே? தான் எத்தனையாவது கண்டக்டர்?

அடிப்பாவி.

டிக்கெட் கொடுத்துவிட்டு, ஏதோ நகைச்சுவையாகப் புதுக் கண்டக்டர் அவளிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டபோது, ''அடேய்... அவளை நம்பாதே. அவ காதலிக்கறவ இல்லே. காரியவாதி. கால் ஊனத்துடன் நடக்கக் கூசி, வீட்டருகே பஸ்ஸை நிறுத்தி ஏறிக் கொள்ள நடிக்கிறவள். நம்பாதே...'' என்று கத்த வேண்டும் போல் இருந்தது.

ஆனல் குரல் எழும்பவில்லே. தொண்டை இறுகியிருந்தது.

43 ம் பக்கம் பார்க்க.



திருமலை-திருப்பதி தேவஸ்தானம் திருப்பதி

திருமலைக்குப் பிரார்த்தனைக்காக நடந்து செல்லும் பக்தர்களுக்கு வசதிகள்

பல பக்தர்கள் வேங்கடாசலபதிக்குப் பிரார்த்தனை செலுத்துவதற்காக மலையினை நடந்தே கடப்பார்கள். திருமலை திருப்பதி தேவஸ்தானம் திருமலை மீது ஏறும் பாத சாரி பக்தர்களுக்குக் கீழ்க்கண்ட வசதிகளைச் செய்துள்ளனர்.

1. பாதசாரி பக்தர்களின் மூட்டை முடிச்சுக்கள் திருமலைக்கு இலவசமாகப் போக்கு வரத்தில் எடுத்துச் செல்லப்படும். பாதசாரி பக்தர்கள் தங்கள் மூட்டை முடிச்சுக் களைத் திருப்பதியிலுள்ள சத்திரங்களில் ஒன்றிலோ அல்லது அலிப்பிரியிலுள்ள டோல்கேட்டிலோ டோக்கன் பெற்றுக் கொடுத்துவிட்டு, பிறகு திருமலை மத்திய வரவேற்புக் காரியாலயத்தில் திரும்பப் பெறலாம்.

2. இரவும் பகலும் பாதைகள் முழுக்கப் போலீஸ் பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டு சமூக விரோதிகளால் பக்தர்கள் ஏமாற்றப்படுவதையும், திருடப்படுவதையும் தடுக்கப்பட்டுள்ளது.

3. திருமலை ஏறும்வரை பாதை முழுவதும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

4. மலைப் பகுதிப் பாதைகளில் இரவு முழுவதும் பிரகாசமான, தரமான ஒளி விளக் குகள் நிறுவப்பட்டு, இரவு நேரங்களிலும், அதிகாலை நேரத்திலும் மலையேறிச் செல்வதற்குப் பல பக்தர்களின் பிரார்த்தனையை நிறைவேற்றுவதற்கு வசதி உண்டு.

5. திருமலைப் பாதை வழியில் முதல் உதவி உபகரணங்களுடன் கூடிய வைத்திய சாலை வசதியும் இருக்கிறது.


6. திருமலை மத்திய வரவேற்புக் காரியாலயத்தில் இந்தியாவின் முக்கிய மொழிகளில் வேண்டிய தகவல்கள் பக்தர்களுக்குக் கிட்டும்.

7. திருமலையில் போக்குவரத்து வசதிகளும் செவ்வனே இயங்குகின்றன. (சிறு குடில் களிலிருந்து கோவிலுக்கும், பஸ் ஸ்டாண்டுக்கும் போக்குவரத்து வசதி உண்டு.)

8. அஞ்சநாத்ரி, சேஷாத்ரி, கருடாத்ரி, சங்குமிட்டா குடில்களில் விசேஷக் குடில்களுக் குள்ள அத்தனை வசதிகளும் இங்கும் கிடைக்கும்.

P.V.R.K. பிரசாத் I.A.S.
எக்ஸிக்யூடிவ் ஆபீசர்
திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

வாயில்லா ஜீவன்



கமலா நடராஜன்

"ம்மா..."

இரவெல்லாம் அந்த எதிர்வீட்டுப் பசு கத்திக் கொண்டே இருந்தது.

கோதைக்குத் தூக்கம் வரவில்லை. சில நிமிடங்களுக்கொரு முறை அதன் குரல் அவள் காதைத் துளைத்தது.

ஏன் இப்படிக் கத்துகிறது?

யாரும் எழுந்து பார்த்ததாகவும் தெரியவில்லை. அவளுக்கே அந்தச் சத்தம் அவ்வளவு இடைஞ்சலாக இருக்கும் போது அந்த வீட்டிலுள்ளவர்கள் எப்படித்தான் தூங்கிக் கொண்டிருக்கிறார்களோ?

கோதை புரண்டு படுத்தாள்.

எதிர் வீட்டு மாமாவும் அவர் மகனும் வெளியூர் போயிருக்கிறார்கள். மாமி மட்டும் தான் வீட்டில் இருந்தாள். இரவில் எழுந்து வெளிவரப் பயந்து பேசாமல் இருக்கிறாளோ என்னவோ.

ம்மா...

மீண்டும் அதன் குரல்.

அவளுக்கு இப்போது ஒரு நிம்மதி ஏற்பட்டது. மாட்டைக் கடத்திச் செல்பவர்கள் அதை இப்படிச் சத்தம் போட விட மாட்டார்கள்.

பாவம் அதற்கு என்ன இம்சையோ?

கோதை அந்தப் பசுவை அநேக முறை பார்த்திருக்கிறாள். அது கன்றாக இருந்த போது பால் குடித்து விட்டு எதிர் வீட்டுக் காம்பவுண்டுக்குள்ளிருந்து துள்ளிக் குதித்து வெளியில் ஓடிவரும்.

அவள் தாய் உயிரோடிருந்த போது அவளது குழந்தைப் பருவத்தில் அவள் அந்தக் கன்றுக்குட்டியைப் போலத் தான் பயமறியாது கவலையறியாது துள்ளிக் குதித்து விளையாடி மகிழ்ந்திருக்கிறாள். பத்தாவது வயதில் தாயைப் பறி கொடுத்தபின் ஏதோ ஓர் ஏக்கம் நெஞ்சத்தில் சூழ அவள் அநேகமாக அடங்கி விட்டிருந்தாள்.

அப்பாவுக்குச் சித்தி இளையவளாக வந்த பின் அந்த அடக்கம் நிரந்தரமாகி, சித்தியின் ஏவல்களுக்கும் ஏசல்களுக்கும் ஆளானபோது அதுவரை அவள் அறியாத கவலையும் பயமும் அவளைச் சூழ்ந்து கொண்டு விட்டன.

ஆரம்பத்தில் அப்பா அவளிடம் எவ்வளவோ பிரியமாகத்தான் இருந்தார். அவளுக்குப் பரிந்து கொண்டு சித்தியிடம் அநேக முறை சண்டை பிடித்திருக்கிறார். ஆனால் அவள் வயதுக்கு வந்த பின்னர், அந்த வீட்டில் அவள் அவர்களுக்கு ஒரு பாரமாகவும் இடைஞ்சலாகவும் இருப்பதைப் போன்ற நிலை உருவாகத் தொடங்கி விட்டது.

அவளது கல்யாணத்துக்குக் கூட அப்பாவை விடச் சித்திதான் அதிக அவசரப்பட்டாள். வயது வந்த பெண்ணை அதிக நாட்கள் வீட்டில் வைத்திருப்பது வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பது போலிருக்கிறது என்பாள்.

கடைசியாக...

அப்பாவுக்கு அவன் ஏதோ தூரத்து வழி உறவு என்றும், வேறு எந்தவிதமான பிக்கல் பிடுங்கலுமில்லை என்றும் கோதையை அவனுக்கு மணம் முடித்து வைத்தனர்.

கூண்டிலிருந்து விடுபட்ட ஒரு சுதந்திரப் பறவையின் உணர்வை அந்தச் சமயத்தில் அவள் அனுபவித்தது என்னவோ உண்மை!

ஆனால்...

அந்த இன்ப நினைவுகள் அனைத்தும் அத்தனை சீக்கிரம் மாறிப்போய் விடும் என்பதை அவள் எதிர்பார்க்கவில்லை.

அப்பா சொன்னதுபோல அவள் கணவனுக்குத் தாய் தந்தை, அண்ணன் தங்கை உறவுகள் ஏதுமில்லைதான். ஆனால் அத்தனை உறவுகளும் ஒன்றாய்ச் சேர்ந்து காசநோய் என்ற உருவில் அவன் உடலுக்குள் ஒளிந்து கொண்டிருந்ததைப் பிறகுதான் அவளோ மற்றவர்களோ ஏன் அவனேகூடப் பூரணமாகக் கண்டு கொள்ள முடிந்தது.

ஒரே வருடம்.

அந்த ஒரு வருட காலத்திலும், மண வாழ்க்கையைப் பற்றிய உணர்வுகள் எதையும் சரிவர அறியப் பெறாத நிலையில், மலர வேண்டிய பருவத்தில் கருகிப்போன மொட்டாக — அவனது காரியங்கள் அனைத்தும் முடிந்தபின் — அவள் தன் பிறந்த வீடு வந்து சேர்ந்தாள். அவள் முடங்கிப் போய் இப்போது மூன்று ஆண்டுகள் முடிந்துவிட்டன.

எதிர் வீட்டுப் பசு மீண்டும் குரல் கொடுக்கிறது. அதுதான் இப்பொழுது எவ்வளவு வளர்ந்து எப்படித் தளதளவென்று தோற்றமளிக்கிறது!

இன்றைக்கு அதற்கு என்ன வந்துவிட்டது?

மெல்ல விடிகிறது.

அப்பா சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது சித்தி சொன்னாள்.

"ராத்திரி எல்லாம் அந்த எதிர் வீட்டுப் பசு விடாமே கத்திக்கிட்டே இருந்தது."

"டவுனுக்கு ஓட்டிப் போகணும். பஞ்சாமியும் அவர் மகனும் ஊரில் இல்லே. போன தடவையும் காலம் தவறி ஓட்டிப் போனதினால்தான் பலன் படாமப் போச்சு. மாட்டை வளர்த்து என்ன செய்யறது? இதை எல்லாம் சரியா கவிக்காட்டா என்ன பிரயோ

ஜனம்'' — அவர் வெறுப்பும் அருவையும் கலந்த உணர்வோடு பேசினார்.

முற்றத்தில் நின்று கொண்டிருந்த கோதைக்கு அவர்களது உரையாடல் அரைகுறையாகக் காதில் விழுகிறது. தற்செயலாக வாசற்புறம் திரும்பியவளின் கண்களில் யாரோ ஓர் இளைஞன் கையில் சூட்கேஸ் ஒன்றுடன் நிற்பது தெரிகிறது.

சிவந்த ஒல்லியான உயரமான தோற்றம்.

''திரு சத்யமூர்த்தி வீடு இதுதானே?''

அவள் உள்ளே திரும்பி ''அப்பா யாரோ வந்திருக்காங்க'' — சொல்லி விட்டு அடுக்களைக்குள் சென்றாள்.

சாப்பிட்டு முடித்த சத்யமூர்த்தி வாசலுக்கு வந்தார்.

''வணக்கம்.''

''வணக்கம்! யார் நீங்க?''

''ராஜா ராமனின் கல்லூரித் தோழன்'' — சொன்னவன் அவரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

மதுரையிலிருக்கும் அவரது அண்ணன் மகன் ராஜாராமன் அவருக்கு அந்த இளைஞனைப் பற்றி எழுதியிருந்த அறிமுகக் கடிதம் அது.

படித்து முடித்தவர் ''உள்ளே வாங்க'' என்று கூறிவிட்டு அந்த இளைஞன் பின் தொடர ஹாலில் வந்து அமர்கிறார்.

அறிவுச் சுடர்விடும் அவனது கூர்மையான கண்களும், அடக்கமான தோற்றமும் அவருக்கு ரொம்பவும் பிடித்திருந்தது.

எம். ஏ — இலக்கியம் படித்த வாலிபன் அவன்.

அவர் அவனை வியப்போடு பார்த்தார்.

''சோழர் காலக் கல்வெட்டுகள் அநேகம் உங்கள் ஊர் கோவிலில் இருப்பதாக ராஜாராமன் என்னிடம் கூறினான். ஒரு வார காலம் இங்கு தங்கி அவற்றின் குறிப்புக்களையும், சில கல்வெட்டுக்களின் நகல்களையும் எடுப்பது எனது ஆராய்ச்சி நூல் வெளியீட்டுக்கு மிகவும் தேவையாக இருக்கிறது.''

''விவாகமாகி விட்டதா?''

''இல்லை.''

''ஏன் செய்து கொள்ளவில்லை?''

''அதில் நான் சில கொள்கைகளை வைத்திருக்கிறேன். வரதட்சணை வாங்காமல் கல்யாணம் செய்து கொள்வதாகத் திட்டம். ஏழை, வஞ்சிக்கப்பட்டவள்,



இளம் விதவை இப்படி எவரேனும் ஒருவர்.''

படித்த முட்டாள் என்று கேள்விப் பட்டிருக்கிறார் இப்படித்தான் இருப்பாரோ?

''ராஜாராமன் தங்களைப் பற்றிய எல்லா விவரங்களும் எனக்கு எழுதி இருக்கிறான். இங்கிருக்கும் ஒரு வார காலமும் நீங்கள் நம் வீட்டில்தான் தங்க வேண்டும்.''

மூன்று தினங்களாக அந்த இளைஞன் — மணிவண்ணன் அந்த வீட்டில்தான் தங்கி இருக்கிறான் என்றாலும் கோதை அவன் முகத்தைக் கூடச் சரிவரக் கவனித்ததில்லை.

அன்று...

தினமும் கோதை தண்ணீர் கொண்டுவரக் கோவில் கிணற்றுக்குத்தான் செல்வது வழக்கம். அங்கு பெரும்பாலான வீடுகள் குடி தண்ணீருக்குக் கோவில் கிணற்றைத்தான் நம்பியிருந்தன.

அன்று அவள் அங்கு சென்றபோது கோவில் முன் மண்டபச் சுவர் ஒன்றின் அடியில் அமர்ந்து ஒரு வெள்ளைக் காகிதத்தைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் மீது வைத்து ஏதோ ஓர் உபகரணத்தினால் தட்டிய படி அதிலுள்ள எழுத்துக்களைக் காகிதத்தில் பதிவு செய்து கொண்டிருந்தான் அந்த இளைஞன்.

அவனும் அவனது கண்களில் படாமல் திரும்பி விட எண்ணியவளாக விரைவில் தண்ணீர் எடுத்துக் கொண்டு கோபுர வாயிலை நெருங்கியபோது...

''ஒரு நிமிடம்.''

குரல் கேட்டுத் திரும்பியவளின் அருகில் அவன் நின்று கொண்டிருந்தான்.

இரண்டு தினங்களுக்கு முன் கோவிலில் மணிவண்ணன் அவளிடம் கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவளது செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தன.

''நான் உன்மீது கொண்ட அன்புக்கு அடிப்படைக் காரணம் காதலா, கருணையா என்பதை என்னாலேயே முடிவு செய்ய இயலவில்லை. ஆனால் நிச்சயமாக அது உடலிச்சை ஒன்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டதல்ல. எனது லட்சியம் நிறைவேற உன்னைப் போன்ற ஒரு பெண்ணைத்தான் நான் மனைவியாக ஏற்றுக் கொள்ளக் காத்திருக்கிறேன். உனக்கும் மனப்பூர்வமாக என்னை ஏற்கச் சம்மதமானால், உனது முடிவை இன்னும் இரண்டு தினங்களுக்குள் எனக்குத் தெரியப்படுத்து. நான் உன் தந்தையிடம் நேரிலேயே பேசி நம் திருமணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன்.''

அவனது தூய மென்மையான அந்த உள்ளத்தை அவள் நேசிக்கிறாள், போற்றி வணங்குகிறாள். ஆனால் —

அப்பாவிடம் அவள் என்ன பேசிவிட முடியும்? அவரோ மிகவும் பழைமையில் ஊறியவர்.

சித்தியைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்.

மேலும் இதைப் பற்றித் தன்னுடைய எண்ணம் என்ன என்பதையே கோதையால் இன்னமும் தீர்மானிக்க முடியவில்லை.

பதினாறு வயதில் தன்னை விதவையாக்கி விட்ட அந்த நிகழ்ச்சிக்கு முக்கியத்துவமளித்து இன்று தன்னுடைய எதிர்கால வாழ்வே பாழாகிக் கொண்டிருக்கும் நிலையில் இப்படியோர் ஆதரவு தெய்வாதீனமாகக் கிடைப்பதையும் அவளால் நம்பத்தான் முடியவில்லை.

நான் பெண். உங்களுக்குள்ள மனோதிடமும் துணிவும் எனக்கு இல்லை. அப்பாவையும் சித்தியையும் மீறி எதுவும் செய்ய முடியாத நிலையிலிருக்கிறேன். ஓடிப்போனவள் என்ற பட்டத்தை ஏற்கவும் நான் விரும்பவில்லை. அதைத் தாங்களும் ஒப்ப மாட்டீர்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

ஒன்று மட்டும் உறுதி. என்னையும் மீறி ஏதோ ஓர் உணர்வால் உங்களை நான் உளமார விரும்புகிறேன்.

இந்த எண்ணம் நான் வாழும் காலம்வரை என் மனத்திலேயே புதைந்திருந்து, இறந்த பின் என் உடலோடு மண்ணுக்குள் போய் விடட்டும். — இப்படி அவனிடம் கூற எண்ணினாள் முடியவில்லை. துணிவு வரவில்லை.

மறுநாள் அவள் கோவிலுக்குப் போகவில்லை. உடல்நிலை சரியில்லை என்று ஏதோ காரணம் சொல்லிப் படுத்து விட்டாள். சிடுசிடுவென்று விழுந்தபடி சித்தியே அன்று எல்லாக் காரியங்களும் செய்யும்படியாயிற்று.

உலகிலேயே தன்னிடம் அனுதாபம் கொண்ட அந்த ஒரே ஒரு அன்புள்ளத்தையும் நோகச் செய்ய வேண்டியிருப்பதன் கொடுமையை எண்ணிக் கோதை நைந்து போனாள். என்னவோ தெரியவில்லை, அவனைக் காணவும் பேசவும் அவளுக்கு இப்போது ஒரு பயமும் தயக்கமும் ஏற்படுகிறது.


ஊருக்குப் புறப்படுவதற்கு முதல்நாள் வரை அவளிடமிருந்து எந்தப் பதிலும் பெற முடியாதது அவனுக்கு ஏமாற்றமளித்திருக்க வேண்டும்.

எனினும் அவன் கடைசி முயற்சியாகப் புறப்படுவதற்கு முதல்நாள் சத்திய மூர்த்தி

வாத்தியார்: டேய் ராமு! புஸ்தகம் கொண்டு வராமல் ஏன் பள்ளிக்கு வந்தாய்?

மாணவன்: நேத்து அடிச்ச காத்திலே நம்ம பள்ளிக்கூடம் இடிந்திருக்கும் என்ற நம்பிக்கையிலே வந்துட்டேன் ஸார்.

— அரண். ஆறுமுகன்





திண்டுக்கல் நகரப் பிரமுகர் ஸ்ரீ A. சுவாமிநாதன் அவர்களின் குமாரரும் 'கல்கி' பத்திரிகையின் ஏஜெண்டுமான ரெகுபதி ஜெயச்சந்திரன் B.Sc.க்கும், கேரளா கோவாப்பரேட்டிவ் நில அடமான 'பாங்க்' ரீஜினல் மானேஜர் ஸ்ரீ V. ஸ்ரீனிவாசன் அவர்களின் குமாரத்தி சௌபாக்கியவதி மகாலக்ஷ்மிக்கும் சமீபத்தில் திண்டுக்கல்லில் வெகு சிறப்பாக விவாஹம் நடைபெற்றது. வாழ்க மணமக்கள்.

யிடம் தனது விருப்பத்தை மனம் திறந்து கூறியபோது...

அவரோ, கல்யாணியோ இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

சில நிமிட நேரம் கழுத்தின் பின்புறம் தமது கைகளைக் கோத்தபடி ஈஸிச்சேரில் கண் மூடிச் சாய்ந்திருந்தவர் பிறகு பேசத் தொடங்கினார்.

''வழி வழியாக வந்த தமது சம்பிரதாயங்களையும் கட்டுப்பாடுகளையும் அநுசரிக்கும் போது கோதையைப் போன்று சிலர் பாதிக்கப்படுவது உண்மைதான். ஆனால் அவர்கள் இவற்றை யெல்லாம் காப்பாற்றுவதற்குத் தியாக வாழ்வை மேற்கொள்ள வேண்டியது தான்.''

சீரியசாக அவனிடம் தான் பேசி முடித்ததாகக் கருதியவருக்குச் சிறிதும் பதற்றமின்றி அவன் பதில் கூறி விதவா விவாகத்துக்குச் சாதகமாக வாதாடினான்.

கடைசியில், ''நீர யோசித்து எனக்கு எழுதுங்கள். எனது தந்தைமுற்போக்கு எண்ணங்கள் கொண்டவர். காந்தியவாதி. தாயும் அவர் வழிதான். அவர்களது சம்மதத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்'' என்றான்.

அவன் முடித்துக் கொண்டு எழுந்து போய் விட்டான்.

''என்ன தைரியம் பாத்தீங்களா? அண்ணன் மகனோட சிநேகிதன், பெரிய அறிவாளின்னு சொல்லி உபசாரம் பண்ணினதுக்கு நம்மையே 'நறுக்'குன்னு கேட்டுட்டுப் போறான். இப்போ தான் தெரியுது. இவனுக்கு எப்படி இவ்வளவு தைரியம் வந்திருக்குதுன்னு'' — கல்யாணி பொரிந்தாள்.

''என்ன சொல்றே நீ'' — சத்தியமூர்த்தி கேட்டார்.

''புரியல்லியா? அவன் பொழுதுக்கும் கோவில்லேதான் இருந்திருக்கான். இவ தண்ணி எடுக்கப் போயிட்டிருந்தா. இவங்களுக்குள்ளே பேச்சு வார்த்தை நடக்காமே, இவ சம்மதமில்லாமே அவன் வந்து இப்படித் துணிஞ்சு கேட்டுட முடியுமா?''

வேலைகளுக்கிடையில் இதைக் கேட்டுக் கொண்டிருந்த கோதைக்குத் 'திகீர்' என்கிறது.

''என்னடி சொல்றே? அவ போனதும் வந்ததுமாய்த்தானே போய் வந்திட்டிருக்கா?''

''உங்களுக்கு என்னதான் தெரியறது. இதற்கெல்லாம் நேரக் கணக்கு வாரக் கணக்கு வேணுமாக்கும்''

அன்று இரவு முழுவதும் கோதைக்குத் தூங்கவே இல்லை. உள்ளம் ஊமையாக அழுது கொண்டிருந்தது.

அன்று காலை ஐந்து மணி வண்டிக்கே மணிவண்ணன் புறப்பட்டு விட்டான். போகும் போதுகூட அவன் அவரிடம் இதைப் பற்றிச் சொல்லி விட்டுத்தான் போனான்!

தயாரித்து எடுத்து வந்த காப்பி டம்ளரைச் சத்திய மூர்த்தியிடம் நீட்டிய கல்யாணி ''போய் விட்டானா?'' என்று கேட்டாள்.

''ஏன் உன்னிடம் சொல்லிக் கொள்ளவில்லையா?''

''நான் அவனோடு பேசவேயே இல்லை. அவன் நேற்று அப்படிக் கேட்ட பிறகு அவன் முகத்தில் விழிக்கவே எனக்குப் பிடிக்கவில்லை... ஆமாம் கோதை எங்கே?''

அவர் அப்போதுதான் கவனித்தார்.

அவள் எங்கே?

கோதை எங்கே?

இருவருமே பரபரப்படைகின்றனர்.

''போங்க, சீக்கிரம் போங்க. நம்ம மானம் ரயிலேறுறதுக்கு முன்னாலே ஸ்டேஷனுக்குப் போங்க. அந்தப் பழிகாரி நம்ம தலையிலே கல்லைப் போட்டுடப் போறா'' — அவள் அலறத் தொடங்கினாள்.

அவசரமாகக் காப்பியைக் கொட்டிக் கொண்ட சத்தியமூர்த்தி துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு புறப்படத் தொடங்கிய போது —

குனிந்த தலை நிமிராமல் கோதை உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள்.

''எங்கேடி போனே?'' — கல்யாணி கேட்டாள்.

''அவர்கிட்டே நேரிலேயே சொல்லிட்டேன்.''

சத்தியமூர்த்தியும் கல்யாணியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''எவர் கிட்டே?'' — கல்யாணியின் குரலில் ஆத்திரம் தொனித்தது.

முடிசூடிய பிரதமரின் முடி!



இங்கிலாந்தின் பிரதமராகியுள்ள திருமதி மார்கரட் தாட்சரின் அடர்த்தியான தலைமுடி அனைவரின் கவனத்தையும் கவரக்கூடியது. சில வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு சிரிப்புக் கவிதைப் போட்டி பரிசு பெற்ற கவிதை அவரது தலைமுடிக்கு (*coiffure*) முக்கியத்துவம் கொடுத்திருந்தது. *People who catch a Glimpse of Margaret Thatcher notice her Coiffure rather than the rest offure!*

(*offure* என்பதை '*of her*' என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.)

- கதிர்

''மணிவண்ணன் கிட்டே.''

''ஓகோ நேரிலேயே நான் போய்ச் சொல்லணுமா?''

''என்ன செய்யறது? என்மீது இரக்கம் கொண்ட ஒரே மனிதர் என்னை நம்பி இருந்து ஏமாறலாமா?''

''அதனாலே...?''

''எனக்காக நீங்க காத்திருக்க வேண்டாம். முடிஞ்சா என்னை மாதிரியே உள்ள வேறு ஒருத்திக்கு வாழ்வு கொடுங்கன்னு சொல்லிட்டு வந்துட்டேன்.''

''உனக்கு எவ்வளவு திமிர் இருந்தா வீட்டை விட்டு வெளியே போகாதேன்னு நான் சொன்னதையும் மீறிப் போயிருப்பே?''

''சித்தி! இப்போ நான் ஒண்ணும் தப்புப் பண்ணிடலையே. இரண்டும் கெட்ட நிலையில் அவரை ஏன் விட்டு வைக்கணும்னு நானே முடிவைச் சொல்லிட்டு வரேன். உங்க கௌரவத்துக்கெல்லாம் குறைவு வர்றாப்போல நான் என்னிக்குமே நடந்துக்க மாட்டேன்.''

''வாயில்லா ஜீவன்னு சொல்லுவீங்களே, பாத்தீங்களா அவ பேசற பேச்சை.''

''என்ன செய்யறது சித்தி? வாயில்லா ஜீவன்கள் கூடச் சில வேதனைகளை வாய் விட்டுக் கத்தித்தான் தெரியப்படுத்த வேண்டியிருக்கு. மற்றவர்கள் அதன் வேதனையைப் புரிஞ்சுக்க செயல்படா விட்டாலும், அதன் உணர்வுகளைத் தாண்டி விடாமலாவது இருந்தால் பரவாயில்லையே?''

கல்யாணி எரிமலையாகிப் போனாள்.

புயல் இடி மழைக்கு பயந்தொடுங்கும் புறாக்குஞ்சு போல, பயத்தால் மூலையில் ஒடுங்கி நின்றாள் கோதை.

கோதை புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.


அந்த நடு இரவில் காமரா உள்ளில் சித்தி எதற்காகவோ 'களுக்'கென்று சிரிக்கிறாள்.


ம்மா...

ஒருமாத கால இடைவெளிக்குப் பின்னர் எதிர்வீட்டுப் பசு மீண்டும் குரல் கொடுப்பது இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு கேட்கிறது.

இப்போதெல்லாம் அவளுக்கு அதன் காரணம் புரிகிறது.

உலகத்து உயிரினங்கள் வயிற்றுப் பசி ஒன்றுக்கு மட்டும்தானா ஏங்கிக் கொண்டிருக்கின்றன?







எல்லாவற்றிலும் ஆர்வம்!
எப்பொழுதும் துடிதுடிப்பு!

உங்களுடைய குழந்தை, வளரும் பருவத்தில் ஒவ்வொரு விநாடியும் அதிகமான சக்தியை செலவழிக்கின்றான். அவனுக்கு வேண்டிய சக்தியை அளிக்கிறது—மால்ட், சாக்லேட், பால் நிறைந்த, சுவைமிகுந்த பூஸ்ட். ஏனெனில், பூஸ்ட் முழு ஆடைப் பால் கோதுமை, பார்லி மால்ட், மற்றும் கோகோவிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

உங்களுடைய குழந்தை ஒவ்வொரு நாளும், நாள் முழுவதும் படிப்பில் ஆர்வத்துடனும், விளையாட்டில் துடிதுடிப்புடனும் இருப்பதற்கு, சக்தி தரும் எரிபொருள்களை அவனுக்கு அளியுங்கள்.



துடிதுடிப்புடனும், ஊக்கத்துடனும் விளங்க சக்தியளிக்கும் எரிபொருள்.

பூஸ்ட்

மால்ட் சாக்லேட் மில்க் ட்ரிங்க்

B-5621 TAM 10



தமிழக முன்னேற்றம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கேள்வி எண் 7. வினு 1: போராட்டங்களும் ஸ்டிரைக்குகளும் அரசியல் கலப்புள்ளதா?

ஆம்.

தமிழ் நாட்டிலுள்ள தொழிற் சங்கங்கள் ஒவ்வொரு அரசியல் கட்சிகளுடனும் இணைக்கப்பட்டுள்ளன.

அகில இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் (ஏ. அய். டி. யூ. சி.).	இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.
இந்திய தொழிற் சங்க மையம். (சி. அய். டி. யூ.).	மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி.
இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் (அய். என். டி. யூ. சி.).	காங்கிரஸ் (அய்).
தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை.	திராவிட முன்னேற்றக் கழகம்.
அண்ணு தொழிற் சங்கப் பேரவை.	அ. இ. அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம்
தமிழ்நாடு தேசிய தொழிற்சங்க காங்கிரஸ்	ஜனதா.

வினு 2: அரசியல் கட்சியின் தூண்டுதலின் பேரில் தான் இவைகளெல்லாம் நடைபெறுகின்றனவா?

விடை: மேலே குறிப்பிட்டுள்ள தொழிற் சங்கங்கள் அரசியல் கட்சியுடன் இணைக்கப்பட்டுள்ளதால் பெரும்பாலும் அக்கட்சித் தலைவர்களுடன் கலந்தே போராட்டங்களை நடத்துகின்றன. அய். என். டி. யூ. சி. (காங்கிரஸ்), அண்ணு தொழிற் சங்கப் பேரவை (அ. இ. அ. தி. மு. க.) பெரும்பாலும் போராட்டங்களில் ஈடுபடுவதில்லை.

ஏனைய கட்சிகள் சார்புடைய தொழிற் சங்கங்கள் போராட்டங்களில் ஈடுபடுகின்றன.

வினு 3: இவைகளைத் தவிர்க்கப் போராட்டங்களும் ஸ்டிரைக்குகளும் இல்லாமல் சுமுகமான ஒரு நிலையை அடைய வழி என்ன?

விடை: (1) நான் சட்ட மன்றத்திலும் பொதுக் கூட்டங்களிலும் கூறியபடி தொழிற் சங்கங்களின் தலைவர்களும், நிர்வாகக் குழு உறுப்பினர்களும் அத்தொழிற்சாலையின் தொழிலாளர்களாகவே இருக்க வேண்டும்.

(2) வேலைநிறுத்தம் செய்வதற்கு முன் அந்த முடிவை அனைத்துத் தொழிற் சங்கங்கள் உறுப்பினர்களிடையே வைத்து ரகசிய வாக்கெடுப்பு மூலம் 60 சதவீதம் ஒப்புதல் பெற வேண்டும்.

(3) நிர்வாகத்தினரும் தொழிற் சங்கங்களின் கோரிக்கைகளின் பேரில் தாமாகவே முன் வந்து பேச்சு வார்த்தை நடத்த முன் வரவேண்டும்.

(4) கதவடைப்பு செய்யுமுன் மாநில அரசின் ஒப்புதல் பெற வேண்டும்.


கேள்வி 8: தமிழ்நாட்டுக்கு வரும் உல்லாசப் பயணிகள் முன்பு இருந்ததைவிட இப்பொழுது அதிகரித்துள்ளனரா? அவர்களை மேலும் தமிழ்நாட்டுக்கு வரவழைக்க என்னென்ன வழிகள் மேற்கொள்ளப் படுகின்றன?

தமிழ் நாட்டிற்கு வருகை தந்த அயல் நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 1978-ம் ஆண்டில் 2,25,000 ஆகும். அதாவது



1. பொது மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெறுகிறார் முதல்வர்
2. லதாவுக்கு முதல்வரிடமிருந்து நடிப்பாற்றலுக்குப் பரிசு





3. எதிர்க்கட்சித் தலைவர்கள், தொழி லாளர் தலைவர்களுடன் முதல்வர் சந்திப்பு

4. சுருளியாறு மின் திட்டம்

இந்தியாவுக்கு வருகின்ற அயல்நாட்டு சுற்றுப் பயணிகளில் 30 சதவிகிதத்தினர் தமிழ் நாட்டுக்கு வருகின்றனர். 1978—ல் இந்தியா வுக்கு வந்த அயல்நாட்டுப் பயணிகளின் எண் ணிக்கை சுமார் 7.48 லட்சமாகும். நம் நாட்டின் பல மாநிலங்களிலிருந்து தமிழகத் துக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண் ணிக்கையினை உயர்த்துவதற்குப் பல்வேறு நட வடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். அதன் காரணமாக 1978—ம் ஆண்டில் 27,00,000 உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழகத் துக்கு வந்து தமிழகத்தின் சிறப்பினைக் கண்டு களித்துள்ளனர்.

சுற்றுலாத் துறையினை வளர்ச்சி செய்யும் பொருட்டுப் பல்வேறு அன்னிய நாடுகளிலும் விளம்பரம் செய்யப்படுகிறது. தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறையும், சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் பல்வேறு ஆக்கப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. கடல் கடந்து வாழும் தமிழ்நாட்டு மக்களும் தமிழகத்துக்கு வந்து நமது பண்பாட்டையும், வளர்ச்சியை யும் காண ஏற்பாடு செய்யப்படுகின்றது. மேற்கு வங்காளம், குஜராத், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களிலிருந்து அதிகமான மக்கள் தமிழகத்துக்குச் சுற்றுலாப் பயணம் வரவும் முயற்சியினை மேற்கொண் டுள்ளோம். பல்வேறு புதிய இயற் கைக் காட்சிகள் நிறைந்த இடங்கள், கோயில்களில் உள்ள கலைப் பொருள்களின் பெருமைகள் புதிய ஆராய்ச்சிகளின் வாயிலா கப் புதை பொருட்கள் கண்டு பிடித்தல், அதன் வரலாற்று விளக்கங்களைப் பல நாட்டவரும் அறிந்து வியக்கும் வகையில் ஆதா ரங்களோடு தெளிவுபடுத்துதல், பல அரும் பொருட்களைச் சீராகப் பாதுகாத்துத் தமிழகத்தின் பண் டைய நாகரீகத்தைப் பற்றி உல கறியச் செய்தல், இசை நாட்டியம் போன்றவைகளை இணைத்து நமது கலை எத்தனை ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னமேயே ஓர் ஒழுங்கு முறையை உருவாக்கிக் கொண்டது என்பன போன்றவற்றை எல்லாம் விளம்பரப் படுத்து தல் போன்ற வகையில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும் தமிழகத்தின் தனிச் சிறப்பை உலகம் அறியவும் வகை செய்தல், போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

கேள்வி 9: விவசாயிகள் போராட்டத்தைத் தீர்ப்பது எப்படி? இது சம்பந்தமாகத் தாங்கள் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

விவசாயிகளின் பிரச்னைகளை அணுகு வதிலும் அவர்களுக்குச் சலுகைகள், வசதிகள் அளிப்பதிலும் இந்த அரசு ஒரு புதிய முறை யினைக் கைக்கொள்கிறது. பலமுறை விவசாயி களை நானும், இதர அமைச்சர்களும், சந்தித்து மனம் விட்டுப் பேசியுள்ளோம். அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் இப்பிரச்னை கலந்து விவாதிக்கப்பட்டது. இவ்வாறு நிகழ்ந்த பேச்சு வார்த்தைகளின் பலனாகப் பின்வரும் சலுகைகள் வழங்கப்பட்டன:

1. விவசாயத்துக்கான மின்சாரக் கட் டணம் யூனிட் ஒன்றுக்கு 16 பைசாவாக இருந்ததைப் பெரிய விவசாயிகளுக்கு 14 பைசாவாகவும், சிறு விவசாயிகளுக்கு 12 பைசாவாகவும் குறைக்கப்பட்டது.

2. பம்புசெட் மீட்டர் வாடகையை மாதம் 5 ரூபாயிலிருந்து 4 - ரூபாயாகக் குறைக்கப்பட்டது.

3. பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதம் ரூ. 100க்கு 12.60 ஆக இருந்தது. ரூ. 12 ஆகக் குறைக்கப் பட்டது. சிறு விவசாயி களுக்கு ரூ. 100 -க்கு 10.50 ஆக குறைக்கப் பட்டது.

4. சிறு விவசாயிகள் மீது கூட்டுறவுக் கடனை வசூலிப்பதற்காக ஜப்தி நடவடிக் கைகள் எடுப்பதில்லை என்று முடிவு செய் துள்ளது.

5. மாநில அரசுக்கு இதில் அதிகாரப் இல்லையென்ற போதிலும் 16 கோடி ரூபாய் குறுகிய காலக்கடனை மத்தியக் காலக் கடன் களாக மாற்ற ரிசர்வ் வங்கிக்கு இந்த அரசு பரிந்துரை செய்தது.

6. மாநில அரசுக்கு இதில் அதிகாரம் இல்லையென்ற போதிலும் 14 கோடி ரூபாய் அளவுள்ள மத்திய காலக் கடன்களுக்குத் திருப்பித் தரும் காலத்தை நீடிப்புச் செய்ய ரிசர்வ் வங்கிக்குப் பரிந்துரை செய்தது.

7. நிலவள வங்கியில் கடன் பெற்று வெட்டி, பொய்த்துப் போன கிணறுகளுக்கு ரூபாய் பத்தாயிரம் வரை கடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

8. புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட இடங்களில் அரசுக் கடன் வசூல் ஒத்தி வைக்கப்பட்டது.

9. மற்றப் பகுதிகளில் அரசுக் கடன் தொகையில் எத்தனை தவணைகள் பாக்கியிருந் தாலும் ஒரு தவணை மட்டும் இந்த ஆண்டு (1978) வசூல் செய்வதென்று முடிவு செய்யப் பட்டது.

10. சிறு விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக் கைகள் எடுக்கக்கூடாது என்றும் உத்தரவிடப் பட்டது.

11. சில பணப் பயிர்களுக்குக் குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது விதிக்கப்பட்ட வரி, (சென்ற ஆண்டு) 1977ல் ஒத்தி வைக்கப் பட்டிருந்தது. இந்த வரி இப்பொழுது தள்ளு படி செய்யப்பட்டு விட்டது.

12. வெற்றிலை, திராட்சை, வாழை, கரும்பு, தென்னை போன்ற சில பணப் பயிர் களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரி ஏக்கருக்கு 20 ரூபாயிலிருந்து 15 ரூபாயாகக் குறைக்கப் பட்டது. 1387'ஆம் பசலியில் பணப் பயிர் களுக்கு விதிக்கப்பட்டுள்ள இந்த வரி வசூ லிக்கப்பட மாட்டாது. புகையிலை, மிளகாய், பாசன வசதி பெற்ற பருத்தி, வேர்க்கடலை ஆகியவற்றின் மீதான வரி முழுமையாக நீக்கப்பட்டது.

13. நெல்லின் கொள்முதல் விலையைக் கணிசமாக உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசிடம் இந்த அரசு வலியுறுத்தி வருகிறது. இதற்கிடையில் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலமாக வாங்கும் நெல்லுக்கு மத்திய அர சினரால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் அதிக மாக மோட்டா ரகம் குவிண்டாலுக்கு ரூ. 90 - என்றும் நடுத்தர ரகம் குவிண்டா லுக்கு ரூ. 95 - என்றும் உயர்த்தியது.

14. எங்கு வேண்டுமாயினும் நெல் கொண்டு செல்லலாம். கேரளத்திற்குக் கொண்டு போக இருந்த தடை கூட நீக்கப் பட்டு விட்டது. தமிழகத்தில் லெவி கொள் முதல் முறையும் அதையொட்டிய கட்டுப் பாடுகளும் அடியோடு நீக்கப்பட்டு விட்டன.

15. வெளி மாநிலங்களுக்கு மணிலாப் பருப்பு (வேர்க்கடலை) எடுத்துச் செல்வதற்கு இருந்த தடை நீக்கப்பட்டது.

விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்ப்பதில் முழுக்கவனம் செலுத்தும் இந்த அரசு ஓர் உயர் மட்டக் குழுவினை அமைத்து, அதன் சிபாரிசுகளின் பேரில் பல சலுகைகளை வேளாண்மைப் பெருங்குடி மக்களுக்கு அளித் துள்ளது. விவசாயிகளின் வரலாற்றிலேயே முதன் முறையாக இவ்வளவு அதிகமாகச் சலுகைகள் இந்த அரசால்தான் வழங்கப் பட்டுள்ளது.

நெல்லின் கொள் முதல் விலையைக்குவிண்டா லுக்கு ரூ. 120 ஆக நிர்ணயிக்குமாறு மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டுமென்று உயர் மட்டக்குழு பரிந்துரைத்துள்ளது. குவிண்டா லுக்கு ரூ. 129 - ஆக நெல்லின் கொள் முதல் விலையை நிர்ணயிக்க வேண்டுமென்றும், உடனடியாக அது சாத்தியமில்லையென்றால் கோதுமையின் கொள்முதல் விலைக்கு ஒத்த அளவிலாவது முதல் கட்டமாக நிர்ணயிக்க வேண்டுமென்றும், தமிழக அரசு வலியுறுத்தி வருகின்றது. 21.5.1979 அன்று நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டிலும் இக்கருத்து தமிழகஅரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. மத்திய அரசின் முடிவு இன்னும் இரண்டு மூன்று வாரங்களில் எதிர் பார்க்கப்படு கின்றது. தமிழகம் மட்டுமல்லாமல் நாட்டில் பல மாநிலங்களும் வற்புறுத்தியுள்ள இக் கோரிக்கைக்கு மத்திய அரசு செவி சாய்க்கும் என்று எதிர் பார்க்கிறோம். மத்திய அர சின் முடிவு நமக்கு மனநிறைவு அளிக்காத நிலை ஏற்பட்டால் சிறு விவசாயிகளுக்குக் கணிசமான நெல் விலை கிடைக்கச் செய்யத் தமிழக அரசு தன் சொந்தப் பொறுப்பிலேயே சில நடவடிக்கைகளை மேற்கொள்ள உறுதி கொண்டுள்ளது. நெல் கொள்முதல் விலை பற்றி மத்திய அரசின் அதிகார பூர்வமான அறிவிப்பு வந்ததற்குப் பின் இத்திட்டம் செயல்படுத்தப் படும். அதே நேரத்திலே,

56ம் பக்கம் பார்க்க.

ஒரே ப்ளக்-பாயிண்ட்டில் பல ப்ளக்குகளை பொருத்துகிறீர்களா?

அவ்வாறு செய்யாதீர்கள்



மின்சார கருவிகளை தவறாக பயன்படுத்தினால்— பயங்கர தீ விபத்து தான். அதுதான் நீங்கள், அறியாமலே உங்களுக்கும் குடும்பத்தினர்க்கும் தேடிக்கொள்ளும் அபாயம்.

மின்சாரம் உங்கள் ஆதாயத்திற்கு, அபாயத்திற்கன்று

1. பல கருவிகளை ஒரே மின் தொடர்புடன் பொருத்தாதீர்கள். ஓவர்லோடால் தீ விபத்து நேரலாம்.
2. மின் கருவியைப் ப்ளக்-பாயிண்ட்டில் பொருத்த மின்சார கம்பிகளை அப்படியே பயன்படுத்தாதீர்கள். ப்ளக்கை உபயோகிக்கவும்.
3. நிர்ணயித்த அளவு ஃப்யூஸையே உபயோகிக்கவும்.
4. எலெக்ட்ரீஷியன் வேலையை நீங்கள் செய்யாதீர்கள். ரிப்பேருக்கு, லைசென்ஸ் உள்ள எலெக்ட்ரீஷியனை அணுகவும்.
5. பழுதடைந்த மின் கம்பிகள் உடைந்த ப்ளக்குகள், ஸ்விட்சுகள் போன்றவற்றை மாற்றியமையுங்கள்.
6. துணிகளை சூடடையக்கூடிய கருவிகளுக்கு அருகில் தொங்கவிடாதீர்கள்.

கத்தரித்து வையுங்கள்

லாஸ் ப்ரிவென்ஷன் அசோஸியேஷன்—நாங்கள் ஒத்த மனமுடையவர்களுடன் ஒத்துழைக்க விரும்புகிறோம். அப்படிப் பட்டவர்களின் ஈடுபாட்டை வரவேற்கிறோம். தயவு செய்து விவரங்களுக்கு எழுதவும்.

LPA

सुरक्षित सम्पदा

இழப்பைத் தவிர்த்திடுவோம். வளத்தைப் பெருக்கிடுவோம்.

லாஸ் ப்ரிவென்ஷன் அஸோஸியேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்

வாடன் ஹவுஸ், சர் பி. எம். ரோடு, பம்பாய் 400 001.

CASLPA-8-172 TM

சவாலுக்குரிய பிரச்னை!

ஆந்திரப் பிரதேசத்தில் நகர்ப்புற அபிவிருத்தி ஒரு சவாலுக்குரிய பிரச்னையாகும். தற்போதுள்ள துரிதமான நகர்ப்புற விஸ்தரிப்புப் பிரச்னைக்குச் சமீப காலத்தில் ஒரு நிறுவனம் தேவைப்படுகிறது. இந் நிறுவனம் நம் எல்லா நகர்ப்புறத்திலுள்ள நகரங்களையும் ஒழுங்கு முறைப்படி வளரச் செய்ய வேண்டும். அதோடு நகர்ப்புறப் பகுதிகளில் வருங்காலத்தின் வளர்ச்சிக்கேற்பத் திட்டமிடும் கண்ணோட்டமும் தேவை.

ஹைதராபாத், விசாகப்பட்டினம், விஜயவாடா ஆகிய மூன்று நகரங்களிலும் மூன்று நகர்ப்புற அபிவிருத்திக் கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவை தற்போது மாஸ்டர் திட்டம், பிராந்தியத் திட்டம் தயாரித்து, இணைந்த நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்குப் பணிபுரியும்.

நகர்ப்புற அபிவிருத்தித் திட்டங்கள் வளரும் நகரங்களுக்கு ஒரு எதிர்காலச் சிந்தனையோடு திட்டமிடப்படுகின்றன.

D. I. P. R. 52

வெளிச் சந்தையில் விவசாயிகளுக்கு நியாய மான விலை கிடைப்பதற்கு மேலும் வசதி செய்யும் பொருட்டு வெளி மாநிலங் களுக்கு எடுத்துச் செல்லப்படும் நெல்லுக்கும் அரிசிக்கும், இப்போது மிகக் குறைவாகவே விதிக்கப்பட்டுவரும் 20 விழுக்காடு லெவியைக் கூட ஜுன் முதல் தேதி முதற்கொண்டு அடி யோடு நீக்கிவிட அரசு முடிவு செய்துள்ளது. விவசாயிகள் பெறும் கடன்களை இரண்டு பிரிவு களாகப் பிரிக்கலாம். தக்காவிக் கடன், கூட்டுறவுக் கடன், விவசாய இடுபொருள் களுக்காக வழங்கப்பட்ட கடன்கள் எல்லாம் (தக்காவி) நிலமில்லாத விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதர விவ சாயிகளுக்கு ரூ. 500 - தள்ளுபடி செய்யப் படும். அடுத்த ரூ. 5000 - வரையில் 50 விழுக்காடு தள்ளுபடி செய்யப் படும். தக் காவிக் கடன்களைப் பொறுத்தவரை அளிக்கப் படும் இச்சலுகைகளின் காரணமாக, ஏறத் தாழ 15 லட்சம் விவசாயிகளுக்கு 13 கோடி ரூபாய் அளவில் நிவாரணம் கிடைக்கிறது.

கூட்டுறவுத் துறையில் தமிழகம் முன்னணி யில் உள்ளது என்பதும், முன்னோடி என்பதும் எல்லோருக்கும் தெரியும். குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன், நீண்ட காலக் கடன் என விவசாயிகளுக்குக் கூட்டுறவு சங் கங்கள் கடன் உதவி வழங்குகின்றன. இக் கடன்களைப் பொறுத்தவரை வட்டி தள்ளு படியும், தவணைகளை நீடித்து மாற்றி யமைத்தலும், கால அவகாசம் அளித்தலும் இப்போது இந்த உயர்மட்டக் குழுவின் பெரி சின்படி வழங்கப்பட்டுள்ளன. கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த வரையில் அளிக்கப்பட் டுள்ள இச்சலுகைகளின் காரணமாக ஏறத் தாழ 16 இலட்சம் விவசாயிகளுக்கு 27 கோடி ரூபாய் அளவில் நிவாரணம் கிடைக் கிறது. மொத்தமாக விவசாயிகளுக்கு ரூ. 40 கோடி வரை நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

கேள்வி 11: மின்சார உற்பத்திதான் தொழில் முன்னேற்றத்துக்கு அடிப்படை. ஆனால் நாம் பிற மாநிலங்களிலிருந்து கடன் வாங்கும் நிலையில் உள்ளோம். ஆகவே, மின் உற்பத்தி யில் தமிழகம் தன்னிறைவு நிலைமை அடையும் சூழ்நிலை என்று அமையும்?

பதில்: தமிழ் நாட்டைப் பொறுத்தவரை மின்சாரத் தேவை உற்பத்தியைவிட எப் பொழுதும் அதிகமாகவே இருந்து வந்திருக் கிறது. இதற்கான காரணங்கள் இரண்டு.

ஒன்று: துரிதமாக வளர்ந்து வரும் தேவைகள்.

இரண்டு: போதுமான அளவு நிறுவப் படாத புதிய திட்டங்கள். மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் ஆண்டொன்றுக்கு 10 சதவீதத்துக்கும் மேலாக உள்ளது. சென்ற ஆண்டில் (1978-79ல்) ஏறத்தாழ 1,800 மெ. வா. அளவுக்குத் தேவைப்பட்டது. நவம்பர் மாதத்தில் இதைவழங்கமுடிந்தாலும் அதன் பின்னர் முடியாமற் போயிற்று. வழக்கமாக 400 மெ. வா. அளவுக்கு நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சாரத் தில் பாதி அளவே பெற முடிந்தது. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனத்தார் பழுப்பு நிலக்கரியைத் தேவையான அளவுக்கு வெட்டி எடுக்க முடியாததால் 600 மெகா வாட் திறனுள்ள மின் இயந்திரங்களை முழு வதும் பயன்படுத்த முடியவில்லை. இன்னும் ஒன்று இரண்டு ஆண்டுகளில் நிலைமை சீர்ப் படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காலங் கடந்து வரும் திட்டங்களும் ஒரு காரணமாகும். சான்றாக, மத்திய அரசினரால் நிறுவப்பட்டு வரும் 2×235 மெ. வா. திற னுள்ள கல்பாக்கம் அணு மின் நிலையம் ஆகும். முதல் பிரிவு முதலில் 1973-74லும், பிறகு 1976-77-லும் இப்போது 1980-81-லும் எதிர்பார்க்கப்படுகிறது.

பணிகள் எடுத்துக் கொள்ள முடியாமற் போன திட்டங்களும் ஒரு காரணமாகும். 630 மெ. வா. நெய்வேலி இரண்டாவது சுரங்க மின் திட்டம் பல ஆண்டுகளாக நாம் கேட்டிருந்தும் இப்பொழுதுதான் எடுத்துக் கொள்ளப்படுகிறது. உதாரணத்துக்கு பாண்டியாறு - புன்னப்புழா (100 மெ. வா.)



விவசாயிகளுக்குப் பூச்சி மருந்து தெளிப்புக் கருவி வழங்குகிறார் தமிழக முதல்வர்

நெல்லித்துறை (50 மெ. வா.) ஹொகனக் கல் (1000 மெ. வா.) திட்டங்களையும் சொல்லலாம். முதல் இரண்டும், கேரள மாநிலத்தோடும், மூன்றாவது திட்டம் கர் நாடக மாநிலத்தோடும் பேசித் தீர்த்து உடன்பாடு காண வேண்டிய திட்டங்கள் ஆகும்.

மற்றுமொரு காரணமும் உண்டு. ஒரு பத்து ஆண்டுகளாக மின் திட்டங்கள் மண்ட லத்தின் நிறைவு என்ற அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. நாமோ மாநிலத் தன்னிறைவு என்பதை வலியுறுத்தி வந்திருக்கிறோம். மத்திய அரசின் கொள் கையை மனமார ஒப்புக்கொள்ளாவிட்டாலும் கூட முழுக்கத் தவறு என்று சொல்லவில்லை. அந்தக் கொள்கையின் விளைவால் கணிசமான முன்னேற்றமும் தமிழகத்தின் தேவைகள் முழுவதும் பூர்த்தியாகும் என்ற நிலைமையும் ஏற்படுமா என்பதுதான் கேள்வி.

ஆந்திர மாநிலத்தில் மத்திய அரசால் நிறுவப்பட்டு வரும் 1100 மெ. வா. திற

ஜுள்ள ராமகுண்டம் பெரு மின் நிலையத்திலிருந்து தமிழ்நாட்டுக்குப் போதுமான அளவு நியாயமான அளவு, மின்சக்தி கிடைக்க வழி வகை செய்யப்படுமானால் தொழில் உற்பத்தி பற்றி நாம் வெகுவாகக் கவலைப்படத் தேவையில்லை.

மேலும் ஏறத்தாழ 1000 மெ. வா. திறனுள்ள அணு மின் நிலையம் ஒன்றைத் திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரியின் அருகில் கூடங்குளத்தில் நிறுவப்பட வேண்டுமென வலியுறுத்தி வருகிறோம். இந்தத் திட்டம் உருவாகுமானால் தொழில் வளர்ச்சிக்கு மிக்க துணையாக இருக்கும்.

மொத்தத்தில் மாநிலத்தின் தேவைகளையும் பொறுப்புக்களையும் மாநில அரசோடு மைய அரசு முழுக்க முழுக்கப் பகிர்ந்து கொள்ளும் கட்டம் வரும்போது, மின் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் நல்ல சூழ்நிலை உருவாகும்.

கேள்வி 12: ஷா கமிஷன் ரிப்போர்ட்டை ஒட்டி மத்திய அரசு தனிக் கோர்ட்டுகளை அமைத்துள்ளது. இது சம்பந்தமாகப் பிரதமர் பேசும்பொழுது மாநிலங்களும் அவர்கள் விரும்பினால் தனிக் கோர்ட்டை அமைத்துக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார். இதுபற்றி உங்கள் எண்ணமென்ன? சர்க்காரியா கமிஷனையொட்டி மத்திய அரசைப் போல் தமிழ்நாட்டிலும் தனிக்கோர்ட்டு அமைக்கப்படுமா?

பதில்: மைய அரசின் கருத்தைப் பற்றி முன்னமேயே இந்தியத் தலைமை நீதி மன்றத்திலும் நாடாளு மன்றம் மாநிலங்களவையிலும் எடுத்துக் கூறியுள்ளோம்.

மாநிலங்களவையில் மாற்றங்கள் செய்ததைப் பற்றி நாங்கள் குறை கூற விரும்பவில்லை.

தமிழகத்தில் அதைச் செயற்படுத்த வேண்டுமா வேண்டாமா என்பதை அமைச்சரவை முடிவு செய்யும்.

கேள்வி 13: முதன் முறையாக மதுவிலக்கைக் கொண்டு வரும் மாநிலங்களுக்கு மத்திய அரசு நஷ்ட ஈட்டுத் தொகை அளிக்கிறது. உதாரணம் பீகார் போன்றவை. ஆனால் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தமிழகத்தில் மதுவிலக்கு அமுலில் இருக்கிறது. ஏன் நஷ்ட ஈடு அளிக்கப்படவில்லை என்று நாங்கள் கூற முடியுமா?

பதில்: கோதுமைக்கு அதிக உதவியும் நெல்லுக்கு உதவியே இல்லை என்பதும் எப்படியோ அப்படித்தான் இதிலும் மைய அரசு நடந்து கொள்ளுகிறது.

கேள்வி 14: தமிழ்நாடு மந்திரி சபையிலுள்ள மந்திரிகள் எல்லோருக்கும் இடையில் சுமுகமான உறவு இருக்கிறதா? அப்படியில்லை என்று பரவலாகப் பேசப் படுகிறதே?

பதில்: உறவு என்பது வேறு பாசம் என்பது வேறு. முதல்வர் சொல்லுகிற அனைத்திற்கும் ஆமாம் போடுபவர்கள் என்றிருந்தால் ஒன்று எதுவும் தெரியாதவர்களாக இருக்க வேண்டும் அல்லது அமைச்சராக இருக்க முடிந்தவரையில் இருந்து விட்டுப் போவோம் என்ற பொறுப்பில்லாதவராக இருத்தல் வேண்டும்.

அமரர் அண்ணா அவர்கள் கட்சியைப் பொறுத்த வரையில் பாச உணர்வோடு இணைந்து வாழக் கற்றுக் கொடுத்துள்ளார்கள். கடமையைச் செய்யும்போது தலைமைக்குக் கட்டுப்படும் ராணுவ வீரனின் செயல் முறையைச் சொல்லித் தந்துள்ளார்கள். கருத்தை வெளியிடும்போது எதற்கும் அஞ்சாது மனசாட்சிப்படி கண்ணியத்தோடு எடுத்துரைக்கும் உரிமையையும் அளித்துள்ளார்கள். அந்த வகையில் எனது அமைச்சர்கள் தங்களின் அறிவாற்றலைப் பயன்படுத்தி விவாதிப்பார்கள். ஆனால் தலைமையின் முடிவிற்குக் கட்டுப்படுவார்கள். நான் முதல் அமைச்சராக இருப்பதாலேயே எல்லாம் அறிந்தவன் என்ற தவறான துணிச்சலை எனது அறிவுக்குச் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை. எனவே மாறுபட்ட கருத்து வேறுபாட்டிற்கு இடமே ஏற்படவில்லை இதுவரையில். இனியும் ஏற்படாது. கருத்து மாறுபாடு (கொள்கை வேறுபாடு) ஏற்படுமானால் அதை விட்டுக் கொடுத்துப் பதவியைப் பிடித்துக் கொண்டு இருக்கும் குணம் எங்களில் யாரிடமும் இல்லை.

பேட்டி: **சவன்**

ஆளுனரையும் "டிரில்" வாங்கிய நிகழ்ச்சி!

சென்னை கலைவாணர் அரங்கில் இயல் இசை நாடக மன்றத்தின் ஆதரவில் 37 கலைஞர்களுக்குக் கலைமாமணி பட்டம் வழங்கும் விழா நடந்தது. பட்டம் பெற்ற ஒவ்வொருவரையும் தங்கப் பதக்கம் அணிவித்துப் பெருமைப்படுத்தும் பொறுப்பு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரியிடம் விடப்பட்டது. ஒவ்வொருவருக்கும் அவர் தமது இருக்கையிலிருந்து எழுந்து பதக்கத்தை அணிவித்தார். இது குறித்து அவர் பேசியது:

"இன்று குடியரசு தின அணிவகுப்பைப் பார்வையிடச் சென்றதால் தினமும் நான் "வாக்கிங்" போகும் செயலைச் செய்யவில்லை. அதை ஈடுகட்டுவது போல் இன்று எழுந்து எழுந்து பரிசளித்தது சரியே. ஆனால் இவ்வளவு அதிக கலைஞர்களுக்கு வழங்க வேண்டியிருக்கும் என முன்பே தெரிந்திருந்தால் ஒருவார காலத்துக்கு வாக்கிங் போகாமல் இருந்திருப்பேன்!"

தகவல்: "சங்கரபுத்திரன்"




அரிப்பும் எரிச்சலும் தரும்
வியர்க்குருத்
தொல்லையிலிருந்து
விடுதலை பெறுவீர்!
நைஸில்
உபயோகிப்பீர்
மிகத்துரித நிவாரணம்
அளிக்கும்
வியர்க்குரு பவுடர்.
கிடைப்பது
பேக்குகளில்
'ப்ரூ' மற்றும்
'சாண்டல்வுட்'
Glaxo
nycil
PRICKLY HEAT
POWDER
வாங்குவீர் நைஸில் –
விரட்டுவீர்
வியர்க்குருவை.
விலை
ரூ. 63 பைசாதான்.*
* அதிகபட்ச சில்லறை விற்பனை விலை.
உள்ளூர் வரிகள் தனி.
GN-78-Tam-368 E

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி



ஏப்ரல் 23ம் தேதி முதல் 28 வரை பெஷாவர் நகர் ''ஆண்டவனின் ஊழியர்கள்'' என்ற அமைப்பின் வசம் இருந்தது. அப்துல் கஃப்பார் கான் இந்த அமைப்பின் தலைவர். அஹிம்சைப் பிரமாணம் எடுத்துக் கொண்டிருந்த கஃப்பார் கானின் தொண்டர்கள் ஏராளமானவர் இயந்திரத் துப்பாக்கித் தோட்டாக்களுக்கு இரையாகி இருந்தனர். ஆனால் ஒரு சந்தர்ப்பத்தில் ஹிந்துக்களான இரு கார்வாலி பட்டாளங்கள் நிராயுதபாணிகளாயிருந்த முஸ்லீம்களைச் சுட மறுத்து விட்டன.

● ● ●

ஏப்ரல் 10ம் தேதி. வங்காள விரிகுடாவில் சூரியோதயம் ஆகவில்லை. ஸி. ஆரும் பதினாறு சகயாத்திரிகர்களும் கடலை நோக்கிச் சென்றனர். வேதாரண்யம் முகாமிலிருந்து இரண்டுமைல் தொலைவில் இருந்த எடந்தேவர் உப்புக்களம் அவர்களது இலக்கு. அவ்விடத்தை அடைந்து ஸி. ஆர். தொடங்கி வைக்க அனைவரும் குனிந்து கொஞ்சம் உப்பை அள்ளியதுதான் தாமதம். போலீஸ் சூப்பரின்டெண்டு கோவிந்தன் நாயர் அவ்விடத்தில் இருந்தார். அவருக்குத் துணையாக சில அதிகாரிகளும் ஐம்பது போலீஸ்காரர்களும் இருந்தனர். ஸி. ஆரும் மற்றவர்களும் கையிலிருந்த உப்பைக் கொடுத்து விட வேண்டும் எனக் கோரப்பட்டனர். அவர்கள் மறுத்த போது நாயர் ஸி. ஆரைக் கைது செய்தார்.

அனுதாப ஆர்ப்பாட்டங்களைத் தவிர்த்து விட வேண்டும் என்று தீர்மானித்த நார்ன், கடலோரப் பகுதியில் உப்பு சேமித்து வைக்கும் ஒரு கொட்டகையில் மூன்றும் பேருக்குத் தெரியாமல் துரிதமாக வழக்கு நடந்து விட ஏற்பாடு செய்திருந்தார். அகஸ்தியம்பள்ளி ரயில் நிலையத்திலிருந்து காலை 8.35க்குப் புறப்படும் ரயிலில் கைதியை ஓசைப்படுத்தாமல் ஏற்றி அனுப்பிவிடவும் ஏற்பாடாகியிருந்தது. அதோடு, கைதானது பற்றிக் கொடுக்கப்பட்ட தந்திகள் எதையும் மாலை வரை அனுப்பக் கூடாது என்று தபால் நிலையங்களுக்கும் உத்தரவிட்டிருந்தார்.

விசாரணைக்கு முன்பு ஸி. ஆர்., உப்பு படிந்த தமது கரங்களையும் மண்படிந்த கால்களையும் கழுவிக் கொள்ள நாயர் ஒரு பக்கெட் தண்ணீர் கொண்டு வந்தார். கொட்டகைக்கு அழைத்து வரப்பட்டிருந்த நீதிபதி பொன்னுசாமிப் பிள்ளை, ஸி. ஆர்., வழக்கறிஞராக சேலத்தில் பணியாற்றிய காலத்தில் அங்கிருந்தவர். அரசுத் தரப்பு வக்கீலுக்குச் சாமர்த்தியம் போதவில்லை. வழக்காடுவதில் வல்லவரான ஸி. ஆர். அவருக்கு உதவினார்!

''ஆறுமாதக் கடுங்காவல் அத்துடன் ரூ 200 அபராதம் அல்லது மேலும் மூன்று மாத சிறைவாசம்'' என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. ஸி. ஆர்., அபராதம் கட்டுவதை விட அதிகரித்த சிறைவாசத்தையே தாம் விரும்புவதாகத் தெரிவித்தார். பின்னை தமது தீர்ப்பை அமைதியாக வாசித்தார். ஆனால் சிறை வாரண்டில் கையெழுத்திட வேண்டிய வேளை வந்தபோது நிலைகுலைந்து அழுது விட்டார்!

காரியங்கள் எல்லாம் மளமள வென்று நிறைவேறிய போதிலும் கைதியை 8.35 ரயிலில் ஏற்றுமளவுக்கு வேகமாக நடக்கவில்லை. நார்னின் அதிகாரிகள் தங்கள் தலைவரைக் கைவிட்டு விட்டனர். ஸி. ஆரைத் திருச்சிக்குச் சுமந்து கொண்டு அடுத்த ரயில் புறப்படுவதற்குள் அவர் கைதான விவரம் பரவி விட்டது.

உப்பு சத்தியாகிரஹிகள் உள்பட ஒரு மாபெரும் கூட்டம் வேதாரண்யத்தில் ரயிலைச் சந்திக்கக் கூடியது. பெட்டியின் வாசலில் நின்று கூட்டத்துக்கு முகமன் கூற ஸி. ஆர். அனுமதிக்கப்பட்டார். ''சிறையில் சந்திப்போம்'' என்று கூறி அவர் நமஸ்கரிக்க ரயில் புறப்பட்டது.

சில ஸ்டேஷன்களில் வண்டி நின்று கிளம்பிய பிறகு, தோற்றத்தால் சிறிய உருவத்தினரான வெள்ளைக்காரர் ஒருவர் ஸி. ஆர். காவலிலிருந்த பெட்டிக்குள் ஏறினார். தமது கையை நீட்டிக் கைதியுடன் கரம் குலுக்கினார். அவர் தாம் நார்ன். அரசின் சட்டத்தை அமல்படுத்துபவரும் சட்டத்தை மீறுபவரும் அருகருகே அமர்ந்து அளவளாவினர்.

சந்தானம்



சர்தார் வேதரத்னம்



''உங்கள் திட்டம் துணிவானது தான். ஆனால் நாங்கள் எங்களுக்குச் சொந்தமான தேசத்தில் இருக்கிறோம் என்பதை நீங்கள் மறந்து விடுகிறீர்கள்'' என்றார் வி. ஆர். தார்ன் புன்னகை புரிந்து கூறினார்: ''ஆமாம். சிறப்பாகவோ மோசமாகவோ நாம் இருவருமே நம்மால் இயன்றதையெல்லாம் செய்ய முயன்றோம்.'' இதன் பிறகு தார்ன், வி. ஆருக்கு காப்பியும் டிபனும் கொண்டு வரச் செய்தார்.

ரயில் பயணத்தின்போது வி. ஆர். பதினோறு வயதான லக்ஷ்மிக்கு எழுதினார்:

''அ... ...ன குழந்தாய்! எனக்கு ஒன்பது மாதம் விடுமுறை கிடைத்திருக்கிறது... நமது போராட்டத்தின் வெற்றிக்காகக் கடவுளைப் பிரார்த்திக்கவும்.''

வி. ஆர். கைது செய்யப்பட்டதன் தொடர்பாக தமிழ்நாடு முழுவதும் மறுநாள் கடைகள் மூடப் பட்டிருந்தன. எந்த வியாபாரமும் நடைபெறவில்லை. வேதாரண்யத்தில் இப்போதுசந்தானத்தின் தலைமையில் தொடர்ந்து உப்பு அள்ளப்பட்டு வந்தது. அந்த உப்பைப் போலீஸார் பறிமுதல் செய்யவும் மறுபடி புதிதாக உப்பைத் தொண்டர்கள் அள்ளினர். இப்படி மாறி மாறி அள்ளுவதும் பறிமுதல் செய்வதும் பல வாரங்களுக்குத்தொடர்ந்தது. மே முதல் தேதி சந்தானம் கைது செய்யப் பட்டார். அடுத்து வேதரத்தினம் பிள்ளையும் கைதானார். இருப்பினும் போராட்டம் நீடித்தது.

தார்ன் அவர்களைக் கைது செய்யாமல் பயமுறுத்தியே அனுப்பி விடலாம் என்று நம்பினார். உப்பை அள்ளியதும் மணிக்கட்டின் மீது தடியால் அடித்தனர். உப்பு பலவந்தமாகப் பிடுங்கப்பட்டது. ஆயினும் சாத்விகப் படையினர் இம்மியளவும் அசையவில்லை. சட்டத்தை மீறுவதையும் நிறுத்தவில்லை. தார்ன் ஒட்டுமொத்தமாக அனைவரையும் கைது செய்யும்படி உத்தரவிட்டபோதுதான் உப்பை அள்ளும் பணிக்கு முடிவு ஏற்பட்டது. பாத யாத்திரிகர்கள் தங்கியிருந்த கூடாரங்களைப் போலீஸார் பிரித்துப் போட்டு விட்டு அவர்களுடன் புதிதாகச் சேர்ந்திருந்தவர்கள் உள்பட சத்தியாக்கிரஹக் குழுவினர் அனைவரையும் கைது செய்தனர். புதிதாகச் சேர்ந்து கொண்டிருந்தவர்களில் இருவர், அவர்களுடைய புதிய தலைவர் ஸ்ரீமதி லக்ஷ்மிபதியும் டாக்டர் ராஜனும் ஆவர்.

பாத யாத்திரிகர்கள் உள்பட மொத்தம் 375 பேர் தஞ்சை ஜில்லாவில் புரட்சி செய்ததாகக் கருதப்பட்டுக் கைதானார்கள். தார்ன் சென்னைக்கு அனுப்பிய ரகசிய அறிக்கையில் வி. ஆர். ஓரளவு வெற்றி பெற்றுவிட்டதாக ஒப்புக் கொண்டார். ''முஸ்லீம்களும் ஆதித் திராவிடர்களும் கூட வரவேற்புகளில் கலந்து கொண்டார்கள்'' என்று எழுதியிருந்தார். மேலும் அவர், ''வி. ஆர். தமது தொண்டர்களிடையே மிகச் சிறந்த முறையில் ஒழுக்கத்தை நிலைநாட்டியிருந்தார்; அவர்கள் எப்போதும் அஹிம்சையைக் கடைப்பிடித்தனர்; கிளர்ச்சியைத் தூண்டும் வகையில் எதையும் செய்வதைத் தவிர்த்தனர்'' என்றெல்லாம் குறிப்பிட்டார்.

''அரசிடம் ஆழ்ந்த பயபக்தியுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மக்களுக்கு எப்போதாவது இருந்திருக்குமேயானால் அது இப்போது பழங்கதையாகி விட்டது'' என்று தார்ன் தெரிவித்தார். இதையடுத்து சென்னை அரசும், ''இந்த இயக்கம் அரசுக்கு எதிரான உணர்ச்சிகளை மக்கள் உள்ளங்களில் ஏற்படுத்தியிருக்கிறது'' என்று டில்லிக்கு எழுதியது.

இவ்வாறு அரசு, வேதாரண்யப் போராட்டத்தின் தூய்மையையும் வெற்றியையும் ஒப்புக் கொண்டது.

மகாத்மாவும் வெகுகாலம் சுதந்திரமாக இருக்கவில்லை. வி. ஆர். கைதாகி ஐந்து நாட்கள் முழுவதாக முடியு முன்னரே மே மாதம் ஐந்தாம் தேதி நள்ளிரவில் ஆங்கிலேயரான சூரத் மாகாண மாஜிஸ்திரேட், கைத்துப்பாக்கியுடன் இரு போலீஸ் அதிகாரிகள், துப்பாக்கி ஏந்திய சுமார் முப்பது போலீஸ் காரர்கள் ஆகியோர் கராடியிலிருந்த காந்தியின் வைக்கோல் கூரை வேய்ந்த குடிசையைச் சூழ்ந்தனர். அவர் உப்பு எடுத்த இடத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் இது இருந்தது. மணி 12-45. ஆங்கிலேயன் மகாத்மாவின் முகத்தில் டார்ச் ஒளியைப் பாய்ச்சி எழுப்பினான். ''நீங்கள்தான் மோகன் தாஸ் கரம்சந்த் காந்தியா?'' என்று கேட்டான்.

''என்னை அழைத்துப் போக வந்திருக்கிறீர்களா?'' என்று வினவினார் காந்தி.

ஆம், அழைத்துப் போகத்தான் வந்திருந்தார்கள். வைஸ்ராயின் பொறுமை ரொம்பவும் சோதிக்கப்பட்டு விட்டது. தராசனாவிலிருந்த உப்புத் தயாரிப்பு நிலையத்தைத் தமது ஆதிக்கத்துக்கு உட்படுத்திக் கொள்ளத் திட்டமிடுவதாக மகாத்மா இர்வினுக்கு எழுதிய போது வைஸ்ராயின் பொறுமை எல்லை கடந்து விட்டது. (தொடரும்)

தமிழாக்கம்: கி. ராஜேந்திரன்

ஜேசுதாஸ் செய்தது தவறா?

பிரபல பின்னணிப் பாடகர் ஜேசுதாஸ், கிறிஸ்துவராயிருந்தும், அவர் சபரிமலை கோயிலுக்குச் செல்வதால் அவர் மகனுக்கு ஞானஸ்நானம் செய்விக்க சர்ச் மறுத்து விட்டது.

இச்செய்திக்கு விளக்கம் தருகிறார் சென்னை ஆர்ச் பிஷப் திரு அருளப்பா ;

''கிறிஸ்துவக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு அதன் வழி நடப்பதாக ஒப்புதல் அளித்தபின் ஒருவருக்கு சர்ச் ஞானஸ்நானம் செய்து வைக்கும்.

சிறிய குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் செய்யும்போது குழந்தையின் பெற்றோர் உண்மையாக கிறிஸ்துவக் கொள்கைகளைப் பின்பற்றுகிறார்களா என்பதை உறுதிப்



ஆர்ச் பிஷப்
திரு அருளப்பா





திருமுக்கூர்
லக்ஷ்மிநரசிம்மாசாரியார்

படுத்திக்கொண்ட பிறகே அதற்கு ஞானஸ்நானம் செய்து வைப்போம்.

ஞானஸ்நானம் புனிதமான சடங்கு. கிறித்துவப் பெற்றோர்கள் குழந்தையைத் தேவாலயத்துக்கு அழைத்துவருவார்கள். ஞானஸ்நானம் என்பது தண்ணீராலும் பரிசுத்த ஆவியாலும் புதுப்பிறப்பு அடைவதுதான்.

குழந்தையின் தலையில் தண்ணீரை ஊற்றி அதற்குப் (பெயர் வைத்து) ஞானஸ்நானம் செய்து ''பிதாசுதன் பரிசுத்த ஆவி'' என்ற கடவுள் பெயரை உச்சரித்து பைபிளிலிருந்து சில பகுதிகளை வாசிப்போம். குழந்தை பிற்காலத்தில் கடவுள் பக்தியோடு கிறிஸ்துவக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் நல்ல கிறித்துவனாகத் திகழ எல்லோரும் ஆசீர்வதிப்பார்கள். பெற்றோர் இதற்கேற்பக் குழந்தையை வளர்ப்பதாக ஒப்புதல் கொடுப்பார்கள்.

இனி ஜேசுதாஸ் விஷயத்துக்கு வருவோம். தம் முதல் குழந்தைக்கு ஞானஸ்நானம் செய்த சர்ச், அடுத்த குழந்தைக்கு ஏனோ மறுத்து விட்டது என்கிறார் ஜேசுதாஸ்.

முதல் குழந்தை பிறந்த பிறகு சமீப காலமாக இவர் சபரிமலை செல்வதும் பல கோயில்களுக்குச் சென்று பாடுவதும் முன்னிலும் அதிகமாகி விட்டன.

திருச்சபை சட்டத்தின்படி ஒரு உண்மை கிறிஸ்துவன், மாதா கோயில், தவிர வேறு எந்த மதக் கோயிலுக்கும் சென்று வழிபாடு செய்யக் கூடாது. ஒரு கிறிஸ்துவன், தன் மதம் தவிர வேறு மதக்கொள்கைகளைப் பின்பற்றக் கூடாது. கிறிஸ்துவனாக இருந்து கொண்டே மற்ற தெய்வங்களை வழிபடுவதும் வேற்று மதங்களின் கருத்துக்களை ஏற்பதும் தவறாகும். மேற்சொன்ன தவறுகளை ஜேசுதாஸ் செய்துள்ளார் என்பது, அவர் சபரிமலைக்கும் மற்றும் குருவாயூர்க் கோயிலுக்கும் செல்வதும், பாடுவதும் நிரூபிக்கிறது.


ஜேசுதாஸ் வேற்று மதங்களின் கொள்கைகளைத் தெரிந்து கொள்வதில் எந்தவிதத் தடையுமில்லை. அதற்காக அவர் கோயில்களுக்கு (சபரிமலை, குருவாயூர்) செல்ல வேண்டும் என்று அவசியமில்லை. மற்றவர் சொல்லக் கேட்டோ, புத்தகங்களின் வாயிலாகவோ தெரிந்து கொள்ளலாமே! ஒரு டூரிஸ்ட் போல இவர் கோயிலுக்குப் போனால் யாரும் ஆட்சேபிக்கப் போவதில்லை. ஆனால் ஜேசுதாஸ் அப்படிச் செல்லவில்லையே? திருச்சபை சட்டத்தின்படி ஒழுக்க முறைகள், கல்வி முதலியவை ஒரு குழந்தைக்கு அளிப்பது அதன் பெற்றோர். பெற்றோர் இப்படி மற்ற மதங்களை நாடினால் அவர்களின் குழந்தைகளுக்கும் அதே பழக்கம் தான் வரும். இதனால்தான் இவர் குழந்தைக்கு ஞானஸ்நானம் தடைப்பட்டுள்ளது. தான் சபரிமலைக்குச் செல்வதால் அங்கு ஜாதிமத பேதமற்ற சமுதாயத்தைப் பார்ப்பதாக அவர் கூறியுள்ளது ஆச்சரியமாகத் தான் உள்ளது. அது எந்த அளவுக்கு உண்மை?

''எம்மதமும் சம்மதம்'' என்கிற கொள்கையை நாங்கள் ஏற்கவில்லை. ஏசு கூறிய ''நானே வழி, நானே சத்தியம், உயிர்'' என்ற உயரிய கருத்தைத்தான் நாங்கள் பின்பற்றுகிறோம்.

ஒருவர் ஒரு மதத்தைத்தான் பின்பற்ற வேண்டும். இருமதங்களையல்ல. அது தவறு.''

திருமுக்கூர் லக்ஷ்மிநரசிம்மாசாரியாரின் கருத்து:

திரு ஜேசுதாஸ் ஜன்மாந்தர புண்ணியத்தில் இப்பிறவியில் சிறந்த பாடகராக விளங்குகிறார். பாடல்கள் பல தெய்வங்களைக்குறித்து இயற்றப்பட்டிருப்பதினால் அவற்றை நல்ல



"இந்தக் கம்பத்திலுள்ள விளக்கு எரியாது! இதுவே அரசின் சாதனை!"—இப்படியொரு அறிவிப்பு அட்டையுடன் மதுராந்தகம் பஸ் ஸ்டாண்டுக்கு எதிரிலுள்ளது ஒரு விளக்குக் கம்பம்!

எஸ். குமாரகிருஷ்ணன்

முறையில் பாடுகிறார். எந்தத் தெய்வத்தைப் பாடுகிறாரோ அந்தத் தெய்வத்திடம் பற்றுக் கொண்டவர் என்று சொல்ல முடியாது. ஒருவர் ஒரு நாடகத்தில் பெண்வேடம் போட்டுக் கொள்கிறார், அதனால் அவர் பெண்ணாகி விடுவாரோ? தான் பெண்தான் என்றும் நினைப்பாரோ? இரண்டுமில்லை. அது வெறும் நடிப்பாகும். அதுபோன்று ஜேசுதாஸ் அவர்கள் வாழ்ந்த சூழ்நிலையும் அவர் கற்ற சங்கீதமும் அவர் வாழ்க்கைச் சக்கரம் சுழல்வதற்கு உபயோகப்படுகிறதே தவிர அவர் கிறிஸ்துவர் அல்லர் என்பதை மறுக்கலாமோ?

அவர் தம் பெயரை ராமசாமி யென்றோ, கிருஷ்ணமூர்த்தி யென்றோ மாற்றிக்கொண்டு இந்து சமயாசாரியார்களை அணுகி, முகத்தில் அந்த சமயத்திற்கேற்ற குறியை அணிந்து தம் குழந்தைக்கு ஜாதகர்ம நாம கரணாதி சடங்குகளை இந்துமத முறைப்படி செய்தால் அவரை இந்து என்று சொல்லலாம். ஆனால் அவர் செய்யவில்லையே? திருவனந்தபுரம் சர்ச்சுக்கல்லவோ சென்று மதகுருவை அணுகி கிறிஸ்துவ முறைப்படி தம் குழந்தைக்குப் பெயர் சூட்டச் சொல்கிறார். ஆகவே அவர் கிறிஸ்துவராகவே இருக்கிறார், இருக்கவும் விரும்புகிறார் என்பது தெளிவு.

திரைப்படத் துறையில் புகழ்பெற்றதாலும் பல நண்பர்கள் சபரிமலைக்குச் செல்வதாலும் அவரும் செல்கிறார். அங்கு எல்லோரும் ஒன்றாக இருப்பதைக் கவனிக்கிறார். அவரைப் போகக்கூடாது என்று தடுக்க யாருக்கு அதிகாரம் உண்டு? வறுமையின் கொடுமையால் இந்து கிறிஸ்துவராக மாறினால் அவரை ஏற்றுப் புதுப் பெயரும் சூட்டப்படுகிறது. இதைப் பல இடங்களில் பரவலாகக் காண்கிறோம். பிறவியிலேயே இந்துவானவரை கிறிஸ்துவராக்கிப் பெயர் சூட்டும் போது, பிறவியிலேயே கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த குழந்தைக்குப் பெயர் வைக்க மறுப்பது நியாயமாகுமோ?

பேட்டி: '''சிக்கி.''

சர்வதேச குழந்தைகள் ஆண்டு

நடைபெற வேண்டிய நிறைவேற்ற திட்டங்கள்

முன்மொழிபவரும் வழிமொழிபவரும்:
ஆர். பி. சாரதி



¤ சர்வதேசக் குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு பள்ளிகளெல்லாம் இந்த ஆண்டு முழுவதும் விடுமுறையாக அரசு அறிவிக்க வேண்டும். அனைத்து மாணவர்களும் மேல் வகுப்புக்கு மாற்றிட ஆணை பிறப்பிக்க வேண்டும்.

¤ நாடெங்குள்ள எல்லாக் கடைகளிலும் எப்போது வேண்டுமானாலும் குழந்தைகளுக்கு வேண்டிய இனிப்பு, கேக்குகள், பொம்மைகள் புதியவற்றை இலவசமாகப் பெற்றுக் கொள்ள உரிமையாகக் கடைகளுக்கு அரசே மானியம் வழங்க வேண்டும்.

¤ ஊரில் உள்ள மைதானங்கள், பார்க்குகள், தோட்டங்கள் அனைத்தும் குழந்தைகளுக்கு என ஒதுக்கப்பட்டுக் கல்லூரிகளும், பெரியவர்கள் போன்றவை சட்டபூர்வமாக அறிவிக்கப்பட வேண்டும்.

¤ வீதிகளில் குழந்தைகள் கிரிக்கெட், பிள்ளையார் பந்து விளையாடுவதால் பெரியவர்கள், வீதியில் செல்லும் கார் முதலிய வாகனங்கள் ஆகியவற்றுக்கு ஏற்படும் விபத்துக்குக் குழந்தைகள் பொறுப்பாக மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட வேண்டும்.

¤ என்ன விஷமம் எந்தக் குழந்தைகள் செய்தாலும் பெற்றோர்களோ, பெரியவர்களோ இந்தக் குழந்தைகள் ஆண்டில் தண்டித்தல் கூடாது என்று அவசரச் சட்டம் அவசரமாகப் பிறப்பிக்கப்பட வேண்டும்.

¤ குழந்தைகள் ஆண்டின் குழந்தைகள் நாளன்று ஒவ்வொரு ஊராட்சி, நகராட்சி மாநகராட்சியிலும் 'குழந்தை மேயர்' 'விஷமராஜா' விருதுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

என்னுடைய வழக்கமான கேள்விக்கு வித்தியாசமான பதில் கிடைத்தது பாரதிராஜாவிடமிருந்து:

''நான் இதுவரை நான்கு படங்களைத் தான் இயக்கியிருக்கிறேன். இவற்றில் எனக்குப் பிடித்த படம் என்று கேட்டால் எந்த ஒரு படமும் இல்லை என்றுதான் கூற வேண்டும்!'' என்றார். காரணத்தையும் சொன்னார்: ''ஒவ்வொரு படத்திலும் ஏதாவது ஒரு தவறு நடந்திருக்கிறது. தவறே இல்லாமல் முழுமையான ஒரு சிறந்த படத்தை எடுக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை. அது கூடிய விரைவில் நிறைவு பெறும் என்று நினைக்கிறேன்; எனது முதல் படம் ''16 வயதினிலே''. அது எல்லோராலும் பாராட்டப்பட்டது என்றாலும் எனக்கு மனநிறைவை அளிக்கவில்லை. அதைவிட ''கிழக்கே போகும் ரயில்'' நான் ஊன்றிக் கவனித்து எடுத்த படம். இப்படி நாம் ஒவ்வொரு படத்தையும் அலசி ஆராய்ந்து கொண்டே போகலாம். ஆனால் என் முடிவு மட்டும் மாறாது.''



உண்மையான கிராமத்து உணர்வுகள்!

''நீங்கள் மற்றவர்களுக்காக எடுத்ததை விட உங்கள் சொந்தப் படமான ''புதிய வார்ப்புகள்'' தயாரிப்பில் அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டுமே?''

''கதையை மாற்றி விட்டீர்கள். நான் சொந்தப் படத்தில் கவனம் செலுத்துவதை விட மற்றவர்கள் படங்களுக்குத்தான் அதிகக் கவனம் செலுத்துகிறேன். நம்மை நம்பிப் பணம் முதலீடு செய்திருக்கும் அவர்களுக்கு உள்ள நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும். புதிய வார்ப்புகள் நல்ல படம்தான். எனக்குப் பிடித்த படம்தான். ஆனால் படம் ஆரம்பிக்கும் தினத்தன்றே அது வெளியிடப்படும் தேதியையும் நான் அறிவித்து விட்டேன். நான் செய்த மிகப் பெரிய தவறு இதுதான். அதற்காகப் பல விஷயங்களைத் தியாகம் செய்ய வேண்டியிருந்தது.''

''உங்களது பல படங்களில் ஒரு குறிப்பிட்ட மதத்தையோ அல்லது அதன் ஓர் உட்பிரிவான ஜாதியையோ நீங்கள் மறைமுகமாகத் தாக்குவதாகக் கூறப்படுகிறதே அதற்கு உங்கள் பதில்?''

''நாங்கள் படமெடுப்பது மக்களுக்கு மகிழ்ச்சி தர. ஒரு குறிப்பிட்ட ஜாதியையோ மதத்தையோ இனத்தையோ தாக்குவதற்காக அல்ல. நான் ஒரு பாத்திரத்தை உருவாக்குகிறேன். கதைக்கு ஏற்றாற்போல் அதை உலவச் செய்கிறேன். அவ்வளவுதானே ஒழிய, அந்தப் பாத்திரம் தவறிழைத்தால் அல்லது சீரழிந்தால் அந்தத் தவறு அல்லது சீரழிவுடன் அந்தப் பாத்திரம் சார்ந்திருக்கும் ஜாதியை அல்லது மதத்தை ஏன் இணைத்துப் பார்க்கிறீர்கள்? அந்தக் கதாபாத்திரம்தான் தவறிழைக்கிறதே யொழிய அவர் சார்ந்த ஜாதியோ மதமோ அல்ல. நான் கள்ளர் வகுப்பில் பிறந்தவன். எனது மூதாதையர்களும், வாழ்ந்து கொண்டிருக்கும் எனது தாத்தாவும் மூணு வேளையும் திருநீறு பூசாமல் வெளியே வருவது கிடையாது. திருநீறு பூசும் ஒருவன் தவறு இழைப்பது போல் காட்டினால் அது கதாபாத்திரத்தின் தன்மையைக் காட்டுமே தவிர தெய்வநிந்தனையாகிவிடாது. நல்லவனும் ஆண்டவனை வேண்டுகிறான். தீயவனும் துதிக்கிறான். இதற்கு நாம் என்ன செய்ய?''

''நீங்கள் ஆங்கிலப் படத்தைக் காப்பியடித்துப் படம் எடுப்பதாக...'' என்று நான் கேள்வியை முடிக்கும் முன்பு பாரதிராஜா இடைமறித்துத் தொடர்கிறார்:

''நான் கிராமத்தான். ஆங்கில வாடை வீசாத இடத்தில் பிறந்தவன். ஆங்கிலக் கல்வி அறிவில் நான் கடைசியானவன். நீங்கள் குறிப்பிடும் அந்த ஆங்கிலப் படங்களைப் பார்க்க வாய்ப்பில்லை. நான் பிறந்து வளர்ந்தது கிராமம். என்னைச் சுற்றி நான் காண்பவற்றைத்தான் என்னால் சிறப்பாகப் படம் பிடித்துக் காட்ட முடியும்.''

''உங்களது படங்களில் எல்லாமே கிராமம் வருகிறது. ஒரே மாதிரி குறிப்பிட்ட குணச்சித்திரங்களுடன் சில மனிதர்கள் வருகிறார்கள். உதாரணத்துக்கு 16 வயதினிலேயில் ஸ்ரீதேவியின் தாயார் இறந்தார். ஸ்ரீதேவி அனாதை ஆனார். ''கிழக்கே போகும் ரயிலில் சுதாகரின் தகப்பனார் இறக்கிறார். சுதாகர் அனாதை





✖ புதிய வார்ப்புகள் படத்தில் ரதி, கே.கே. சௌந்தரராஜன், ஜி.சீனிவாசன், பாக்யராஜ்.



பாரதிராஜா பேட்டி

ஆனார். ''புதிய வார்ப்புகள்'' ரதியும் அனாதை ஆகிறார். ஏன் ஒரே மாதிரியாகவே படம் எடுக்கிறீர்கள்?''

''பட்டணத்தில் உள்ளவர்கள் பலதரப் பட்டவர்கள். தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், அவமதிப்புக்களைக் காணாத வர்கள்போல் செல்பவர்கள். ஒத்துப்போகும் மனமுள்ளவர்கள். ஆனால் கிராமத்தில் உள்ள வர்கள் சிறு அவமதிப்பு ஏற்பட்டாலும் தாங்க முடியாதவர்கள். தலைகுனிவு ஏற் பட்டால் அவர்கள் தலை சாய்ந்து விடும். உண்மையான கிராமத்து உணர்வுகளை என் படங்களில் நான் காட்டுகிறேன். இந்த உணர் வுகளுக்கு நான் அடிமை.''

''நீங்கள் டைரக்ட் செய்யும் விதம்?''

''திரைக்கதை அமைப்பதை நான் காட்சிக்குக் காட்சி சொல்லிக் கொண்டே (நடித்துக் கொண்டே) போவேன். அவைகளை டேப்பில் பதிவுசெய்து, பிறகு முழுமையாகத் திரைக்கதையை நாங்கள் எழுதி விடுவோம். நடிகர் நடிகையருக்கு நான் சொல்லித் தருவ துண்டு. நடித்துக் காட்டுவதும் உண்டு.''


பல நடிகர், நடிகையரை உருவாக்கிய பாரதிராஜாவும் நடிக்கப் போகிறார்! யார் டைரக்ஷனில் தெரியுமா? அவருடன் இணைந்து பணியாற்றும் ஒளிப்பதிவாளர் நிவாஸின் டைரக்ஷனில்தான்! தான் ஆட்டுவித்தவர் களிடமே ஆடப்போகிறாரோ பாரதிராஜா?

பேட்டி: **சலன்**

பிஸ்கட் தயாரிப்போர் பெருமை


குவாலிடி மாரி பிஸ்கட்டுகள் உயர்ந்த தரம் கொண்டவை. அடுக்கு இயந்திரம் மாவை 25 மி.மீ. கனமுள்ள ஆறு தாள்களாகச் செய்கிறது. பிறகு 3 மி.மீ. கனத்திற்கு அழுத்துகிறது. அதிக லேசான அதிக மொறு மொறுப்பான பிஸ்கட்டுகள் உங்களுக்குக் கிடைக்கின்றன. ஒவ்வொரு நிலையிலும் கண்டிப்பான தர நிர்ணயம். சுத்தமும் சத்தும் உள்ள பிஸ்கட்டுகள் நிச்சயம். நாலு அடுக்கு உறை மொறு மொறுப்பையும் புதுமையையும் காக்கின்றது.

குவாலிடி மாரி உலகின் சிறந்த பிஸ்கட் தயாரிப்பாளர் தந்த பயிற்சியால் செய்யப்படும் பரிபூரண பிஸ்கட்டுகள்.



குவாலிடிஸ் மாரி பிஸ்கட்டுகள்

சத்து நிறைந்த சிற்றுண்டி



தனிப்பட்ட நுட்பங்களால் பரிபூரணமாகத் தயாரிக்கப்பட்டது.

ஒவ்வொரு நிலையிலும் நிதானமாகத் தயாரிப்பதற்காக தனிப்பட்ட அடுப்பில் சூடு நுட்பமாக வைக்கப்படுகிறது. உள்ளும் புறமும் சீரான பொன்னிறப் பிஸ்கட்டுகள் உங்களுக்காக.


ASP-KFP-7963

குவாலிடி உயர்தர பிஸ்கட்டுகளைத் தயாரிக்கிறது

ISI

குவாலிடி ஃபுட் ப்ராடக்ட்ஸ்
பெங்களூர் 560039

முகத்தில் முகம் பார்க்கலாம்



பட விமரிசனம்

கவர்ச்சி மிக்க பாடல் வரிகளைத் தலைப்பாக்கி இருக்கிறார்கள் படத்துக்கு — ஆனால் படம் அதற்கு ஈடு கொடுக்கும்படியாக இல்லை.

பணக்காரத் தந்தையின் செல்லப் பெண்கள் இருவர். அவ்விருவரின் காதல் வாழ்க்கை. மூத்த பெண்ணின் (சுமித்ரா) காதலன் கொலை செய்யப்படுகிறான். அதே உருவமுடைய இன்னொருவனை முடிவில் அவள் தன் கணவனாக ஏற்றுக் கொள்கிறாள். இளையபெண் (ராதிகா)வின் காதல் இதில் ஓர் உப நதி.

ரயில் ராதிகாவைத் தயாரிப்பாளர்கள் எதற்காக இப்படிப் போய் மொய்க்கிறார்களோ தெரியவில்லை. அவரிடம் உள்ளதெல்லாம் அவுட்டுச் சிரிப்பு, நளினமில்லாததோர் கவர்ச்சி. கொன்னிப் பேசிக் கன்னித் தமிழை இப்படிக் கொலை செய்ய வேண்டாம். 'ஹாய்' போடலாம், ஜீன்ஸ் மாட்டிக் கொள்ளலாம், ஜூடோ ஆடிக் காட்டலாம் — இவ்வளவுக்கும் மேலாக நடிப்பு என்றும் ஒன்று வேண்டும்— அதுவும் பெண்மை கலந்த நளினத்தோடிருக்க வேண்டும். ரயில்கள் தண்டவாளத்தில் மட்டுமே ஓட முடியும். ஒரு குறிப்பிட்ட தடத்தில். எந்த இடத்திலும் ஓட ரயிலால் முடியாதல்லவா?


முன் பாதியில் விஜயகுமாரின் நடிப்பு நன்றாகவே இருக்கிறது. காதலியை உப்பு மூட்டை சுமந்தபடி வெகு நேரம் பாடியாடி பாவம், ரொம்பச் சிரமப்பட்டிருக்கிறார். பிரபுவாக வரும் அந்தப் பாத்திரம்? அத்தனை உறுமலும் செருமலும் முக்கலும் எதற்காக? பல இடங்களில் நடிகர் திலகத்தின் பாணிகளை அப்படியே பிரதிபலிப்பது கொஞ்சம் கேலிக் கூத்தாகக் கூட இருக்கிறது. சண்டைக் காட்சிகளுக்காகவே உருவாக்கப்பட்ட பாத்திரமாயிற்றே பிரபு — ஆகவே அதை நிறைவாகச் செய்திருக்கிறார்.

ஸ்ரீகாந்த் — பாவம், நல்லவனாக நடிக்க ஆசைப்பட்டால் அதற்கு வாய்ப்பே இல்லாமல் போகிறது படத்தில். வில்லனாகப் புகுந்தவர்கள் வில்லனாகத்தான் சோபிக்க முடியுமோ? இந்தப் படத்தைப் பொறுத்தவரை ஸ்ரீகாந்த் நிலை பரிதாபம். ஒரே இலையில் உணவுண்ணும் உற்ற நண்பனாக உருவாக்கப்பட்ட ஒரு பாத்திரத்தை இப்படி எந்தவிதமான முக்கியத்துவமும் இல்லாமல் செய்திருக்க வேண்டாம்.

சச்சு கருணி—ஹாஸ்ய ஜோடி வழக்கம் போல. வில்லன் தனங்களும் அதன் விளக்கங்களும் விஷயங்களும் கதைக்கு அழுத்தம் தரவில்லை.

காதலனிடம் உயிரையே வைத்துள்ள எந்தப் பெண்ணும் அதே உருவமுடைய மாற்றானைக் கணவனாக ஏற்பாள் என்பது ஜீரணிப்பதற்குக் கொஞ்சம் சிரமமான விஷயம். முகத்தில் முகம் பார்க்கலாம் — தலைப்புக்கும் கதைக்கும் எவ்வித பொருத்தமும் இல்லை. நாம் மயங்கும்படி அதில் எதையும் பார்க்கவும் முடியவில்லை.

கௌசிகன்



ஏகாம்பரத்தின் புரட்சி!

கமல்

வருஷம்: 1988. எழுத்தாளர் ஏகாம்பரத்தின் புத்தகம் 'கண்ணே ஒரு முத்தம்' வெளியாகிப் பரபரப்பாக விற்பனை ஆகிக் கொண்டு வருகிறது. அவரைப் பேட்டி காண ஒரு நிருபர் வருகிறார்.

ஃ

"உங்கள் நூல் 'கண்ணே ஒரு முத்தம்' பரபரப்பாக விற்பது பற்றி மகிழ்ச்சி. இதன் வெற்றிக்கு என்ன காரணம்?"

"அதுதான் எனக்குப்புரியவில்லை. மேலும் எனக்கு மகிழ்ச்சியுமில்லை. என் சொந்தப் பெயரில் எழுதியதைப் பலர் குறையாகக் கூறுகிறார்கள். பத்ம லோசனி ஆசீர்வாதம் என்றோ பிரியம்வதா ராம துரை என்றோ ஏன் பெண் பெயரில் எழுதவில்லை என்று அவர்கள் கேட்கிறார்கள்."

"அப்படியா. பெண்களின் பெயரை வைத்துக் கொண்டு ஆண்கள் எழுதுவது தவறு என்றல்லவா சொல்கிறார்கள்?"

"அப்படித்தான் பெயர் எழுத்தாளர்கள் இலக்கியப் பத்திரிகைகளில் குற்றம் சாட்டி எழுதுவார்கள்... அப்புறம் கதையில் ஒரே ஒரு இடத்தில் முத்தம் இடுவது வருகிறது. அதுவும் ஒரு கண்ணிழந்த தாய், தன் குழந்தையிடம் கேட்கிறாள் ஒரு முத்தம். இதுவும் தப்பாம்."

"ஏன்?"

"முத்தத்தின் மதிப்பே போய் விட்டதாம்! கதையில் ஒரு இடத்தில்கூட யாரும் புடவையை அவிழ்க்கவில்லை. அங்க வர்ணனைகள் கிடையாது. செக்ஸ் இல்லாமல் எழுதினால் மகா பாவமாம்!"

"அடப்பாவமே."

"அது மட்டுமா? கதையில் படங்களை 'ஜெயராஜ்' போடவில்லை. 'சில்பி' தான் போட்டிருக்கிறார். வேண்டுமென்றே பலரை அவமானப்படுத்தும் எண்ணத்துடன் நான் இதைச் செய்தேனாம்."

"இவ்வளவுதானா குறைகள்?"

"இத்துடன் விட்டால் பரவாயில்லையே! இந்தக் கதையினால் 'முத்தம்' என்ற வார்த்தையையே களங்கப்படுத்தி அதன் 'இமேஜை' நான் மாற்றி விட்டேன் என்கிறார்கள். மேலும் கதைக்கும் தலைப்புக்கும் பொருத்தம் இருக்கிறதாம். இதுவும் குற்றம்."

"அடபாவமே... உங்கள் மேல் இவ்வளவு குற்றச் சாட்டுகளா?"

"அப்புறம் ஆங்கில வார்த்தைகள், வசனங்கள் எதுவும் கதையில் இல்லை. தமிழில் அசிங்கமான வார்த்தைகளை ஆங்கிலப் படுத்தியும் நான் உப யோகிக்கவில்லை. பல பிரபல எழுத்தாளர்களைக் கேலிக்குள்ளாக்கும் எண்ணத்துடன் இப்படி எழுதி யுள்ளேனாம்."

"தசோ... தசோ..."

"இன்னும் இருக்கிறது. அதற்குள் சூள் கொட்டி விடாதீர்கள். என்னுடைய நாவலில் எந்த ஆங்கில நாவலின் வாடையும் இல்லை. தழுவல் இல்லை. முழுக்க முழுக்க ஒரிஜினலாக எழுதியதும் பெருங் குற்றமாம்."

"இத்தனை குற்றங்களிருந்தும் உங்கள் புத்தகம் நன்றாக விற்பதன் ரகசியம் என்ன?"

"என்னுடைய புத்தகம் ஒன்றுதான் — இப்படிப் பல விஷயங்களில் மாறு பட்டு இருப்பதால், அந்த ஒரே காரணத்திற்காக வாசகர்கள் வாங்குகிறார்கள்."

"உங்கள் அடுத்த நாவல் என்ன?"

"நிர்வாணம் எல்லாம் செக்ஸ் ஆகுமா?" என்ற தலைப்பில் தழுவல் கதை. ஆங்கிலத்திலிருந்து தழுவியது. கதையில் ஆண் — பெண் தழுவல்கள் நிறைய இருக்கும். 'அடல்ட்ஸ் ஒன்லி' என்று அட்டையில் அச்சிடப் போகிறேன்... நமக்கு எதுக்கு ஸார் பிரபல எழுத்தாளர்களின் விரோதம்?"



ஒருவர்: அவன் ரொம்ப சோம்பேறி!

நண்பர்: எப்படி சொல்றே?

ஒருவர்: அவன் கொட்டாவி விட்டா கூட பக்கத்தில் இருப்பவன்தான் வாயில் சொடுக்கி விடு வான்!

— எஸ். சந்திரசேகர்



Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras - 600 032. Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 60 மலேசியக் காசு